www.padippakam.com

உள்ளே:

# தமிழ்க்களம்

## காலச்சுவடு கண்ணனுக்கு ஒரு கடிதம்

"ஐயோ, கொலை. கொலை பண்ணப் பாக்குறாங்க," என்று கூக்குரல் ஒலிக்க, அதிர்ந்து, அலமந்து, பிதுங்கி, வாய்பிளந்து பதற, கலைஞர் கைது செய்யப்பட்டதையும், மாறனும் பாலுவும் பிணங்களை அகற்றுவது போல் அகற்றப்பட்டதையும் தொலைக்காட்சியில் பார்த்த அந்தக் கணத்தில் நெஞ்சு வந்து தொண்டைக்குழியில் அடைத்துக்கொண்டது. வெகுநேரங் கழித்து, பதற்றம் தணிந்து, நெஞ்சு இறங்கிய போது ஒன்று உறைத்தது: தமிழில் படித்தால் மேசைதான் துடைக்கலாம் என்றவர்கள் தமிழில் அலறித்தான் உயிர்த்திருக்கிறார்கள். ஜெய்ஹிந்த்!

பாசமலர் கணேசன் மின்மயான உலைக்குள்
பராசக்தி கலைஞன் கமாண்டோ சிறைக்குள்
மறக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் ஜெய்ஹிந்த்!

படிப்பகம்

www.padippakam.com

# கவிதாசரண்

தொகுப்பு நூல்

ஆசிரியர்: கவிதாசரண்

முதல் ஈடு: ஆகஸ்ட், 2001

விலை ரூ.10/-

தொடர்புக்கு:
கவிதாசரண்
31, டி.கே.எஸ். நகர்
சென்னை–600019
தொலைபேசி: 044 – 573 44 99

KAVITHAASARAN
31, T.K.S. Nagar
Chennai–600019

அச்சாக்கம்:
ஆல்வெல் அச்சகம்
சென்னை–600 019

படிப்பகம்

www.padippakam.com



## தேரோட்டம்

13-5-2001
**காலை: 9 மணி**

தொலைக்காட்சியில் தேர்தல் முடிவுகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இரண்டொரு இறுதி நிலவரங்களும் வெளிப்படுகின்றன.

திமுக கூட்டணி சடசடவெனச் சரிவதைக் காண மனம் நமநமத்தாலும் வருத்தம் ஒன்றுமில்லை. அதிமுக கூட்டணியின் அலையலையான வெற்றிமுகம் கண்டு படபடப்பாய் இருந்தாலும் மகிழ்ச்சியின் சிறுகீற்றேனும் தோன்றவில்லை. அதிகம் நேசித்து, அதிகம் எதிர்பார்த்து, அதிகம் ஏமாந்துபோன சமூக மனத்துக்கு வருத்தமோ மகிழ்ச்சியோ சம்பந்தப்பட்டவர்களின் நம்பகமான எதிர்கால அர்ப்பணிப்புகளால் சாத்தியப்பட்டால்தான் உண்டு. செக்குமாட்டுத்தனமான அரசியல் நச்சுவட்டத்தில் அதற்கெல்லாம் வழியே இல்லை என்பது அவநம்பிக்கை கொள்ளும் விஷயமாகிவிடாது. நம்பிக்கை ஒளிக்கீற்று நம்மைச் சுற்றிக் கவிந்துள்ள அடிவானத்தின் எந்தத் திக்கிலிருந்தாவது எந்தச் சந்தர்ப்பத்திலாவது தென்பட்டேதீரும். அப்போது அந்தத் திக்கே நமக்குக் கிழக்காகி வெளுக்கும்.

இதோ, நிகழ்ந்துகொண்டிருக்கும் அரசியல் நிலைமாற்றத்தில் மனம் நோகிறது. திக்திக்கென்று அடித்துக் கொள்கிறது. வயிற்றைக் கலக்கினாற்போல், பொட்டில் தட்டினாற்போல் வலிக்கிறது; கடுக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பாம். மகேசன் என்பவன் இவ்வளவு மடையனாக இருப்பான் என்று தோன்றவில்லை. வெகுமக்கள் தீர்ப்பு எப்போதும் கண்டதே காட்சி கொண்டதே கோலம்தான். அவர்களுக்கு பூமி தட்டையாகத்தான் இருக்கிறது. பூமியை சூரியன்தான் சுற்றி வருகிறது. தீர்ப்பை ஏற்கலாமா? மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதை மறந்துபோன தேசம் இது.

ஜெயலலிதாவுக்கு 'எம்ஜியார் ஆட்சி அமைப்போம்' என்பதற்கு மேல் மக்களிடம் வாக்கு கேட்க உருப்படியாக ஒரு அம்சமும் இல்லை. தன் வேட்பு மனுக்களைத் தக்கவைத்துக்கொள்ளக்கூட வக்கற்றுப்போனவர். ஆனால் இதோ அடித்து நொறுக்கிக்கொண்டு அண்ணாந்து பார்க்குமளவுக்கு வெற்றிப் படிகளில் கிடுகிடுவென்று மேலேறிப் போகிறார். வெற்றி பெறும் அவரது வேட்பாளர்கள் ஒருவர் மீது ஒருவராகத் தோளேறி நின்று அவருக்கோர் சிகரத்தை வடிவமைக்கின்றனர்.

ஆர அமர உட்கார்ந்து வாக்குக் கணக்குகளையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஒருவேளை அப்படியொன்றும் புரட்சி நடந்துவிடவில்லை என்பதாக அமைதியடையலாம். ஆனால் வேட்பாளர் வெற்றிக்கணக்கில் இந்தக் கணத்தில் நிகழ்வதுதான் புரட்சிக் கணக்கு.

இந்த வெற்றி முழுக்கமுழுக்க அந்தக் கோபக்கார, அகந்தைமிக்க, எதனாலும் துவண்டுவிடாத, எதைக் கண்டும் பின்வாங்காத, எது மோதியும் உடைந்துவிடாத, எந்தக் கூச்ச நாச்சத்திற்கும் இடங்கொடாத, தனக்கெதிராக எத்தனை கதவுகள் மூடப்பட்டாலும் தான் தோற்கப்போவதில்லை என்னும் மூர்க்கத்தை சுவாசிக்கக் கற்றுக்கொண்ட, தன்னைச் சீராட்ட வரும் எல்லாப் பரிதவிப்புகளையும் வாக்கு வங்கித் தளத்தில் வெற்றி வியூகங்களாக்க முயன்ற, அரசியல் களத்தில் எவனையும் ஏவல் நாயாக்கிக் காட்டுகிற, எதற்கும் யாருக்கும் பணிந்துவிடாத, யாருக்காகவும் காத்திருந்து கால விரயம் பண்ணாத அந்த ஒற்றை மனுஷியின் வெற்றி.

இந்த 'மனுஷி' விவகாரம் பற்றி— அதுதான் அவர் ஆளுமைப் பீறலின் முக்கிய அம்சமே— இங்கேயே இப்போதே பரிசீலிக்கத் தோன்றுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



ஆடம்பரங்களும், மேட்டிமைப் போக்குகளும் ஜெயலலிதாவின் வாழ்வியல் பண்புகளாய் வடிவமைத்திருக்கலாம் ஊழல்களும் அத்துமீறல்களும் அரசியல் களம் தந்த சீதனங்களாகவும் அரசியல் முன்னோடிகளிடமிருந்து கற்ற பதினாறடிப் பாய்ச்சலாகவும் மலிந்து போயிருக்கலாம். ஆனால் அவருடைய அதிரடிக்கும் தாக்குதல்களுக்கும் எதிர்கொள்ளலுக்கும் அவர் மட்டுந்தானா பொறுப்பு? உளவியல் ரீதியிலான அனுமானங்களாகவேனும் யோசிக்கலாம் அல்லவா?

உலகம் பூராவிலும் பெண்கள் இரண்டாந்தரக் குடிகளாகத்தான் நடத்தப்படுகிறார்கள் என்றாலும் இந்தியாவில் அவர்கள் பெறும் இழிவு பிறவி மதிப்பீடற்ற ஒரு பிழையின் வடிவமாகத்தான் இருக்கிறது. மேலும் இங்கே பெண்களை நிறுக்க வெறும் பாலியல் ஒழுக்கமொன்றே அளவுகோலாக இருக்கிறது. பெண்களுக்கு இரண்டு வகைப்பாடுகள்தாம் உண்டு. ஒவ்வொருவனும் தன்னைப் பத்தினிக்குப் பிறந்தவனாக மெச்சிக் கொள்ளவும், பிற பெண்களை எடுத்தெறிந்து 'தேவுடியா முண்டை' என்று சொல்லி நிந்திக்கவுமாக நடைமுறையில் இரண்டே வகைப்பாடுகளில் அடக்கப்படுகின்றனர். பொது வாழ்வில் பெண்களின் சுய ஆளுமை இன்னமும் இயல்பான அங்கீகாரத்துக்குரியதாய் இல்லை. ஆண் கிழித்த கோட்டை அழித்துக்கொண்டு வெளிவருகின்ற பெண் அடங்காப்பிடாரி என்றும் ராட்சசி என்றும் பத்ரகாளி என்றும் கொழுப்பெடுத்தவள் என்றும் ஆண் மொழியால் நிந்திக்கப்படுகிறவளாகவே வெளிப்பட்டாக வேண்டியுள்ளது. ஆனானப்பட்ட நேருவின் மகள் இந்திராவே தன்னையொரு வ முறை ஜனநாயகவாதியாகத்தான் காட்டிக் கொள்ள நேர்ந்தது. ஜெயலலிதாவைப் பொறுத்தவரை அவர் ஒரு நடிகை என்பதும் எம்ஜியாரால் அரசியல் அரங்கத்தில் நுழைக்கப்பட்டவர் என்பதும் கூடுதல் மதிப்பீனங்களாகப் பேசப்பட்டன. எந்தவிதக் குற்றவுணர்வுமின்றி பெண்களை ஸ்டெப்னிகளாக உருவகித்து கிளுகிளுப்பூட்டிக்கொண்ட தமிழக சட்டப்பேரவை ஜெயலலிதாவை எவ்வளவு 'நாகரிகமாக'க் குரைத்தது, ஓடிப்பிடித்து விளையாட்டு காட்டியது என்பது ஆண்களின் கவனத்தில இருக்கத் தகுதியற்ற அற்ப விஷயங்கள்தாம் அல்லவா? "நான் பாப்பாத்திதான். என்னை ஒன்றும் ஆட்டவோ அசைக்கவோ முடியாது" என்று சொன்னாரே அவர். ஒரு பாப்பாத்தி சொன்னதாக

படிப்பகம்

www.padippakam.com



மட்டும் எடுத்துக்கொள்கிறவர்கள் ஏன் ஒரு மனுஷி சொன்ன தாகவும் எடுத்துக்கொள்ளக்கூடாது? பார்ப்பனர்கள் அப்படி யெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் அல்லர். ஜெயல லிதா பார்ப்பனர்களை நம்பி அரசியல் நடத்தவில்லை. தன் அமைச்சரவையில் (தன்னைத்தவிர) ஒரு பார்ப்பானுக்கோ அல்லது பாப்பாத்திக்கோகூட இடம் கொடுத்ததில்லை. இந்த முறையும் அவர்களில் யாரையும் தேர்தலில் நிற்க வைத்ததாக வும் தெரியவில்லை. 'சூத்திரன் கண்ணை அவன் கையைக் கொண்டே குத்திக்கொள்ள வைக்கும்' பார்ப்பன உத்தியாக இது பார்க்கப்படக்கூடும். கோயில் கோயிலாக ஏறி இறங்கி வேள்விகளும் பூசைகளும் செய்து வருவது சுட்டிக் காட்டப்பட லாம். 'சோ'க்களும் சேஷன்களும் அவர்பால் காட்டும் கரிச னங்கள் கண்ணை உறுத்தலாம். இவையெல்லாம் அவரது பாப் பாத்தி அடையாளத்தால் நேர்படக்கூடிய ஏதோ ஒன்றிரண்டு அனுசரணைகளே தவிர மற்றபடி அவர் கரையேறத் துடிக்கும் பரிதவிப்பின் வெளிபாடுகளாகவே எஞ்சுகின்றன. பெரியார் பெயரைச் சொல்லியும் அண்ணா பெயரைச் சொல்லியும் பார்ப்பன தர்மத்தை முன்னெடுக்கும் பக்குவத்தை ஜெயலலிதா பெற்றுவிடுவார் என்றால் அது அவரது மகத்தான வெற்றி மாத் திரமல்ல, கடந்த ஐம்பது ஆண்டுகளாகக் கருணாநிதி பங் கேற்றும் தலைமை தாங்கியும் நடத்தி வந்த திராவிட அரசியல் அதற்குக் களம் அமைத்துக் கொடுத்துத் தன்னை அழித்துக் கொண்டிருக்கிறது என்றுதான் பொருள். இதற்குக் கருணா நிதிதான் பதில் தேட வேண்டும்.

கருணாநிதி எப்போதும் போலவே பட்டியலிடுவதில் வல் லவர். பட்டியலிடுவதற்கென்றே பற்பல பெயர்களில் சாத னைகள் படைப்பவர். அடிப்படைத் தேவைகளுக்கே அல்லா டும் மக்களை அவை சென்றடைந்தனவா, அவற்றைத் துய்த் துப் பயன் பெற்றனரா, அவை சாதனைகளாகவே அவர்களறி யத் தொடர்கின்றனவா என்பதைப்பற்றியெல்லாம் அக்கறைப் படாமல் பட்டியலிட்டே மிரட்டுகின்ற டண்ணையாராகிப் போனவர். அவர் பட்டியலிட்ட கணக்கற்ற சாதனைகளுக் காக அவரது கூட்டணி குறைந்த பட்சம் 600 இடங்களிலா வது வென்றிருக்கலாம். திமுக கூட்டணிக்கு வாக்கு சேகரிப் பதில் அவர்தான் தனிப்பெரும் தலைவர் என்றாலும் அவருக் குத் துணையாக ஜென்டில்மேன் வாஜ்பேயி என்ன, உலகச்

படிப்பகம்

www.padippakam.com



சந்தையில் நாட்டையே விற்றுமுதல் பண்ணும் கொள்கைக் கோமான்– கருணாநிதி கண்டெடுத்த புதிய நிதியம்– மேதாவி ப.சிதம்பரம் என்ன, பேரணிகள் என்ன, புதுப்புது வியூகங்கள் என்ன, சொற்சிலம்பம் என்ன, அத்தனையும் புழுதி நிலத்தின் பூச்சு மண்ணாயின அரசியலில் நட்புக் கட்சிகளுக்கு இரண்டகம் புரிவதிலும், எதிர்க்கும் கட்சிகளை உடைத்து துரோகக் கும்பல்களை உருவாக்கி அரவணைத்துக்கொள்வதிலும் கைதேர்ந்த கருணாநிதிக்கு சிதம்பரம் போன்ற அதிமேதாவிகள் எப்போதும் கிடைப்பார்கள். நேர்மையும் சுயவிமர்சனமும் அற்றவர்களுக்குக் கருணாநிதியை விட்டால் நம்பகமான தலைவர் யார் கிடைக்கப் போகிறார்கள். தெகல்கா அம்பலப்படுத்திய அசிங்கங்களோ அது தொடர்பான கார்கில் தேசபக்தி ஊழல்களோ கருணாநிதியைப் போலவே சிதம்பரத்தின் தோலைக்கூடத் தொடவில்லை என்பது அவரது நேர்மைக்கும் பொதுநலனுக்குமான உரைகல். சுற்றி வளைத்தேனும் அதிகாரம் துய்க்கும் ஆசை வந்துவிட்டால் சிதம்பரங்கள் கூட ரகசியமற்றுச் சீரழிவார்கள்.

எப்போதையும் விட இப்போது தமிழ்நாட்டு மக்களை நினைத்தால் பகீர் என்கிறது. என்ன வகைமாதிரி இவர்கள்? எந்தக் காந்தத்தால் சுரணை வளர்த்தவர்கள்? தங்களிடம் இல்லாததையும் தங்களால் இயலாததையும் கடைபரப்பி ஆடம்பரப்படுத்தும் எந்தக் சழிசடைப் போக்குகளையும் கொண்டாடி மகிழ்கிற அடிமை மனோபாவம்தான் இவர்களின் அரசியல் ஞானமா? எப்போதும் எளியவர்களாக, எதையும் நம்பும் இளகியவர்களாக, அராஜகங்களைக்கூட பாராட்டுக்குரிய தலைமைப் பண்புகளாய் சிலாகிப்பவர்களாக, (ஒருவேளை கருணாநிதியால் பட்டியலிடப்பட்டவை என்பதாலோ என்னஇழவோ) எவ்வகை ஊழலையும் பொருட்படுத்தாதவர்களாக, இவர்களை நோக்கி நீதி கேட்டு வருகிற எவரையும் தாங்குகிறவர்களாக, எந்த லஞ்ச லாவண்யத்தையும் கண்டு கொள்ளாதது மட்டுமல்லாமல் பொது வாழ்வில் அவற்றையே ஓர் அங்கமாகப் பாவிக்கிற விசித்திரப் பிறவிகளாய் இருக்கிறார்களே.

நான் அடித்தட்டு மக்களைப் பற்றிப் பேசுவதாக மேன்மக்கள் நினைக்கக்கூடும். அப்படியல்ல. என் பேச்சு வாக்காளர்களைப் பற்றியது. எந்த வழியிலேனும் வாக்களிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கும் மேன்மக்கள் அவர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இந்த எளியவர்களை ஜெயலலிதாவினால் காந்தம் போல் கவர முடியும் எனில், ஆனானப்பட்ட அரசியல் சாணக்கிய ரும், வருவதுணரும் மூதறிஞரும், சொல்லாடல் வல்லுநரும், ஒப்பீட்டுப் பட்டியலிட்டே தான் முன்னெடுக்கும் ஒவ்வொரு விலையேற்றத்தையும் நியாயப்படுத்திவிடுகிறவருமான கருணா நிதியால் ஏன் முடியாமல் போனது? ஒருவேளை அன்று சாமான்யராக மக்களின் நாடிபிடித்தறிந்தவர் இன்று சீமான் யராகப் பண்பு மாற்றம் பெற்று அரசியல் ஒழுக்கவாதம் போதிக்கும் ஒளிவட்டக்காரராய் உயர்ந்து போனதால் இருக் கலாம். மண்ணெண்ணெய், டீசல், பெட்ரோல், சமையல் எரிவாயு ஆகியவை திரும்பத்திரும்ப விலையேற்றப்பட்டபோது அவருடைய புதிய பண்பு மாற்றம் அதை நியாயப்படுத்தினா லும், மம்தாவைப் போல, குறைந்த பட்சம் சந்திரபாபு நாயு டுவைப் போலவாவது ஒரு கண்டனத்தை பதிவு செய்வதன் மூலம் தான் மக்கள் பக்கம் இருப்பதாகப் பாசாங்கு பண்ணி யிருக்கலாம். ஆனால் செய்யவில்லை. ஏனெனில் அவர் மகன் போட்ட பறக்கும் பாலங்கள் வழியே சொகுசு வாகனத் தில் பயணம் செய்து கணினிப் பூங்காக்களையும் கார் தொழிற் சாலைகளையும் திறந்துவைப்பது அதைவிட முக்கியமானதா கவும், தமிழகத்தை முதல் மாநிலமாக்கும் பணியாகவும் அவருக்குப் பட்டிருக்க வேண்டும் அவருடைய ஏகப்பட்ட சாதனைகள் தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமா கப் பறை சாற்றுகின்றன ஒருவேளை சுத்தம் செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட குடிநீர் விற்பனையில்கூட தமிழகம்தான் முதல் மாநிலம் என்றால் அதுவும் அவரின் சாதனையாகப் பறை சாற்றப்படுமோ என்னவோ. தமிழ்நாட்டில் அடிப் படைத் தேவையான கழிப்பறை வசதி பற்றிக் கவலைப்படாத விருந்து மண்டபங்களும் பேருந்து நிலையங்களும், சந்தைத் திடல்களும், அங்காடி வளாகங்களும், குற்றவியல் நீதிமன்றங் களும் சாதனைச் சின்னங்களாகவே நாறுகின்றன.

இவ்வளவுக்குப் பின்னும் வாக்காளப் பெருமக்களைத்தான் குறை சொல்லப்போகிறோம். ஆகட்டும். ஆறுதலடைவதற்கு வேறென்ன செய்வது.

ஜெயலலிதா ஒரு அரசியல் கட்சிக்காரராக, அதுவும் திரா விடப் பெயர் தாங்கிய கட்சிக்காரராகச் செயல்பட்டாலும் அவர் எப்போதும் ஒரு தனிநபர்தான்; தனி வழிதான். கட்

படிப்பகம்

www.padippakam.com



சிக்குக் கட்டுப்பட்டவரோ பதில் சொல்ல வேண்டியவரோ அல்ல. எம்ஜியாரே தனிநபர் கட்சியைத்தான் தொடங்கினார். எனினும் அது அப்படிக் கணிக்கப்பட்டுவிடக்கூடாது என்னும் அக்கறையால் அண்ணாவின் பெயரையும் படத்தையும் கட்சிப் பெயரிலும் கொடியிலும் புகுத்தி, திராவிட இயக்கத் தொடர்ச்சி போன்றதொரு தோற்றத்தை அளித்தார். ஜெயலலிதாவுக்கு அரசியல் பின்புலமோ அது சார்ந்த வரலாறுகளோ சாய்மானங்களோ இல்லாமையால் அப்படியொரு தோற்ற மாயையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வது எளிதாகிவிடுகிறது. ஆகவே அவர் எது செய்தாலும் அதன் பாதிப்புகளோ பலாபலன்களோ அவரை மட்டுமே சாரும். ஆனால் கருணாநிதி அப்படியில்லை இருக்கவும் முடியாது. பெரியாரிடமிருந்து பிரிந்து, பாராளுமன்ற ஜனநாயகத்துக்குத் தன்னை மடை மாற்றிக்கொண்ட திராவிட இயக்கத்தின் அதிகார மையமாகத் தன்னை நிலைப்படுத்திக் கொண்டதிலிருந்து தானே கட்சி, கட்சியே தான் என்னும் தனிநபர் தோற்றத்தை முக்கியப்படுத்தினாலும் முழுமையாக அப்படி ஆகிவிட முடியாமல் கடைசிவரை கட்சியைப் பெரிதாக வைத்தே செயல்பட்டுத் தொலைக்கும்படியாக சபிக்கப்பட்டவர். ஆகவே அவர் எது செய்தாலும் செய்யாமல் போனாலும் அதனால் பாதிப்புக்குள்ளாவது அவர் சார்ந்த இயக்கமே. அதாவது அவர் எப்போதும் கட்சிக்குப் பதில் சொல்ல வேண்டியவர் என்பதால், அவரது மாட்சியும் வீழ்ச்சியும் அவர் சார்ந்த இயக்கத்தைப் பாதிப்பதாகவே அமையும்.

உதாரணமாக, ஜெயலலிதா பாஜகவுடன் உறவு வைத்துக்கொண்டால் அது அவர் தன்னை மீட்டுக்கொள்ளும் தனிநபர் முயற்சிதானே தவிர, மற்ற அனுமானங்கள் எவ்வளவு அர்த்தமுள்ளவையாயிருப்பினும் அவை 'வெறும்வாய்க்குக் கிடைத்த அவலாக ஒதுக்கப்பட வேண்டியவையே. ஆனால் கருணாநிதி உறவு வைத்துக்கொண்டால் அது திராவிட அரசியலின் புதை குழியில் மண்ணள்ளிப்போட பாஜகவின் உதவியை நாடியதாகவே அமையும். பாஜக தன்னை வளப்படுத்திக் கொள்ளவும் நிலைப்படுத்தி முன்செல்லவும் யாரோடும் கைகோர்க்கும். எதனையும் சகித்தேற்கும். அதே மூச்சில் தன் வலையில் சிக்கிய மனிதர்களையும் இயக்கங்களையும் உறிஞ்சிக் குடித்து வெறும் கூடுகளாக்கி வெளித்தள்ளும். இதை

படிப்பகம்

www.padippakam.com



கருணாநிதியும் அறிவார். ஆனால் அறிந்தென்ன லாபம் என்பதில் அவர் லாபமும் அறிவார்.

இனம், மொழி சார்ந்த திராவிட அரசியலின் வரலாறாகவே மேற்செல்ல வேண்டிய கருணாநிதி ஜெயலலிதாவோடு தன்னை இணைவைத்துக்கொண்டு தனது புதிய ஆபரணங்களான கை சுத்தம், மெய் சுத்தம், வாய் சுத்தம் ஆகியவற்றுக்கு ஜெயலலிதாவையே உரைகல்லாகப் பாவித்துச் சுருங்கிப் போனார் என்றால் அது அவர் தனக்கு வழங்கிக்கொண்ட சூத்திர நீதி என்பதைத் தவிர வேறில்லை. போதிக்கிறவனின் யோக்கியதையை ஊடுருவத் தெரிந்த மக்களிடம் பொதுவாழ்வின் அறம் பற்றிய பேச்சுக்கு வரம்பிருக்க வேண்டும் போலும். ஜெயலலிதாவின் முந்தைய அரசின் அத்துமீறல்களைப் பற்றிய வரம்பு மீறிய பேச்சில் இருந்த ஆர்வம் வெகுமக்களின் அல்லாட்டங்களையும் நீர்த்தாகங்களையும் தீர்த்துவைப்பதில் காட்டப்படவில்லை. அரசின் சாதனைகளோ வாக்களிக்க இறங்கி வராத புட்டிநீர் வாசிகளுக்காயின.

தொழில் நகரங்களில் தொழிற்சாலைகள் ஆயிரக் கணக்கில் மூடிக்கிடக்கின்றன. தொழிலாளர்கள் தெருவில் நிற்கிறார்கள். சிறுதொழில்கள் நசிந்துவிட்டன. இட்லி சுட்டுப் பிழைத்தவர்களும் சுண்டல் விற்றுப் படித்தவர்களும் கனவுகளாகிப் போனார்கள். விளைபொருள்கள் அடிமாட்டு விலைக்கு விற்கப்படுகின்றன. உலகமயமாக்கலால் போட்டி வலுத்துவிட்டது. வேலைவாய்ப்பு முற்றாக அருகிவிட்டது. தொழில் முனையில் அடிப்படை கட்டுமானங்களற்ற இந்தியர்களால் ஈடுகொடுத்து நிற்கமுடியவில்லை. வரைமுறை இல்லாமல் அந்நியப் பொருள்கள் வந்து குவிகின்றன. வரிகள் உயர்ந்துவிட்டன. வாடகை கூடிவிட்டது. வீடுகளின் கட்டுமானச் செலவுகள் கட்டுக்குள் இல்லை. அன்றாடச் செலவுகளும் கட்டுக்கடங்காமல் பெருகிவிட்டன. நர்சரிப் படிப்புகூடக் கல்லூரிப் படிப்புக்கிணையாகக் கடுமையாக விலையேறிவிட்டது. நிரந்தர வேலை இல்லை. வருமானம் இல்லை. கொள்ளை, கொலைகள் மூலம் சம்பாதிப்பது எளிதோ எல்லோராலும் முடியக்கூடியதோ இல்லை.

இவ்வாறான தொடர் வறட்சியால் பணப்புழக்கம் சுத்தமாக வற்றிவிட்டது. ஆனால் கருணாநிதியும் ப.சிதம்பரமும்

படிப்பகம்

www.padippakam.com



சொல்கிறார்கள். ஊழலின் ஊற்றுக்கண் அடைபட்டுவிட்ட தால் முறையற்ற வழிகளில் நிலவிய பணப்புழக்கம் குறைந்து விட்டது என்று. பட்டினி கிடக்கிறவன் இந்தப் பொருளாதா ரத் தத்துவத்தைப் புசித்துப் பசியாற முடியுமா? கருணாநிதி அரசின் தோல்விகூட ஐந்தாண்டுகளுக்கு முன்பே ஒழிந்த ஜெயலலிதா அரசின் ஊழலில் ஈடுசெய்யப்படுகிறது. அதற்கும் சேர்த்தேதான் தேர்தல் நடந்திருக்கிறது. முடிவுகள் விடை யளிக்கின்றன.

ஒரு கதை நினைவுக்கு வருகிறது: வெகுகாலத்திற்கு முன் படித்தது.

ஒவ்வொரு உணவு வேளையின் போதும் தன் மனைவி சோரம் போனதை மன்னித்ததாகச் சொன்ன ஒரு கணவன் அவள் சம்பாதித்து வந்த மூன்று வெள்ளி நாணயங்களைத் தன் பிள்ளைகள் முன்னால் பரப்பி வைத்துக்கொண்டு ஒழுக் கத்தின் மேன்மை பற்றிப் போதனை செய்து வந்தானாம். முதலில் தன் செயலுக்கு வெட்கித் தலை குனிந்து கண்ணீர் மல்க மன்னிப்பு கோரிய மனைவி, போதனை என்னும் பெய ரில் முடிவில்லாமல் தொடர்ந்த கணவனின் வரம்பற்ற வக்கி ரத்தால் பெருங்காயமுற்றவளாய் ஒரு நாள் மேலும் மூன்று நாணயங்களைக் கொண்டுவந்து தரையில் வீசி, “இதோ, இவையும் அப்படிச் சம்பாதித்ததுதான்,” என்றாளாம்.

ஜெயலலிதா அரசின் அத்துமீறல்கள் சகிக்கப்பட்டதன் வெளிப்பாடாகவும் இந்த வெற்றிகளைக் கணக்கு வைக்கவேண் டியுள்ளது. ஜெயலலிதாவின் அஞ்சாமை, அடங்காமை, தயங் காமை, ஏன் அடாவடித்தனம்கூட அவருக்கு அழகு சேர்க் கும் மனுஷிக்கான அணிகலன்களாகப் போற்றிக் கொண்டா டும் அசட்டுப் பாமரத்தனத்தைக் கடந்த ஐம்பது ஆண்டுக ளாக மக்களிடையே பேணி வளர்த்த பெருமை கருணாநிதிக் கும் உண்டுதானே. திராவிடத் தேர்தல் கட்சி அதில்தானே மஞ்சள் பூசி குளித்து மினுக்கியது?

இயக்கப் பாசறைகளாய்ப் பட்டிதொட்டிகளிலெல்லாம் படிப்பகங்கள் திறந்து, கருத்துப் பெட்டகங்களாய் நூற்றுக் கணக்கான சிற்றிதழ்கள் வெளியிட்டு, தமிழகம் முழுதும் ஓய்வில்லாமல் எதிரொலிக்கும்படியாய் ஊர்தோறும் கூட்டங்

படிப்பகம்

www.padippakam.com



போட்டுமுழங்கி, பெரியாரிய, மார்க்சிய, நாத்திகசிந்தனைகளை விதைத்து, இந்த மண்ணையே மாற்றுலகமாகப் படைத்துக் காட்டியவர்கள், ஒரு கட்டத்தில் ஆட்சியதிகாரக் குடி போதையை ஏற்றிக்கொண்டதும் அவ்வளவையும் துறந்து உள்ளீடற்ற ஒலிக்கூளங்களாகிப் போனவர்கள்தாமே. உலகின் வேறெந்தப் பகுதியிலும் அத்தனை குறுகிய காலத்தில் அப்படியொரு கருத்துப்புரட்சி நடந்திருக்காது நடத்தியவர்கள் உள்ளூற நாணயமற்ற நாவன்மையாளர்களாகவே அடிபட்டுப் போனதும் கிடையாது.

இந்திய அரசியலுக்குத் தமிழகம் எத்தனையோ முன்னுதாரணங்களை வழங்கியிருக்கக்கூடும். இந்தத் தேர்தல் முடிவுகளில் வரும் ஆட்சி மாற்றமும் அப்படியொரு முன்னுதாரணத்துக்கான சோதனைக் களமாகலாம். எந்த நிகழ்வையும் அனுபவமாக்கிக்கொள்ள மனிதனுக்குத் தர்க்க நியாயங்கள் கைகொடுக்கின்றன. எவ்வளவு கசப்பான அனுபவமும் அதைக் கடந்துவந்த பிறகு மிஞ்சுவது சுகமான நினைவாகத் தானே. எட்டிமரம் என்பதற்காக அதன் நிழல் கசக்குமா என்ன? ஆயினும் அந்தச் சூழல் எட்டியின் இருப்பில்தான் சுவாசிக்கப்படும்.

இந்திய ஜனநாயகம் ஒருபோதும் வெட்கித் தலைகுனியும் பேச்சுக்கே இடமில்லை ஏனெனில் வேற்றுமையை சுவாசிக்கும் இந்தியத் தத்துவ பூமியில் ஜனநாயகம் என்பது அடையப்படாத தத்துவத்தின் நகலுக்கான காப்புரிமைப் பெயர் மட்டுமே. சமத்துவமில்லாத நாட்டில் மனிதர்களின் படிமுறைத் தகுதிகளுக்கேற்பவே விதிமுறைகள் பின்பற்றப்படும். உதாரணமாக தன் கட்சிக்காரராக இருந்தாலும் பங்காரு லட்சுமணன் போன்ற தலித்துகள் குற்றம் செய்தால் உடனடியாக அவர்கள் பதவி பறிக்கப்பட்டு, பெயரற்றுப் போகும்படி இருட்டடிப்புக்காளாவார்கள். இன்னும் ஒருபடி மேலே சென்றால் ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ் போன்றவர்கள் தங்கள் கவனம்பெறாமலேயே தவறுகளுக்குத் துணையிருந்ததாகக் கருதப்பட்டால், பதவியிலிருந்து விலகச்செய்து 'அந்தோ பாவம்' போன்றதொரு தோற்றத்துள்ளாக்கப்பட்டுக் கேவலப்படுத்தப்படுவர். உச்சத்திலானால், வாஜ்பேயின் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர் என்பதால் பிரதமர் வீட்டின் உள்வட்டம்வரை விச்ராந்தியாகச் சுற்றிவர அனுமதிக்கப்படும் பிராஜேஷ் மிஸ்ரா போன்

படிப்பகம்

www.padippakam.com



றவர்கள் தவறுகளின் வலுவான சந்தேகங்களுக்காட்பட்டு, அவர்களை விலக்கவேண்டும் என்று விஷயமறிந்தவர்கள் வற்புறுத்தினாலும் வெளியேற்றப்படமாட்டார்கள். வற்புறுத்தல் அதிகமானால், “அவர் விலகவேண்டுமென்றால் நானே விலகிக் கொள்கிறேன்” என்று பிரதமரே மிரட்டல் விடுத்து, அவர்கள் வலுக்கட்டாயமாகக் காப்பாற்றப்படுவார்கள் ஜெயலலிதாவுக்கும் அவருடைய ‘தகுதி’யால் மீட்சி பெற வழி அறியப்பட்டால் அது இந்த நாட்டுக்கு உகந்த வழி முறையாகத்தான் அங்கீகரிக்கப்படும். இந்திய ஜனநாயக மொகரக்கட்டையை அழகு படுத்தும் சட்ட ஆட்சியின் லட்சணம் அவ்வளவுதான்.

ஒட்டுமொத்த வெற்றி கருதித்தான் இதைத் தன் கடைசித் தேர்தல் என்றார் கருணாநிதி. இப்போது தோல்வி நிச்சயம் என்றானபின் அவரது கடைசித் தேர்தல் இன்னொரு வெற்றிக்கானதாகவே இருக்கும். அதற்கேற்ப இனி அவர் புதிய அவதாரம் எடுப்பார். உண்மையில் அது புதிதாய் இருக்கப் போவதில்லை. ஆட்சியிலில்லாதபோது அதைக் குறிவைத்து அவர் எப்போதும் எடுக்கும் அறுதப் பழசான அவதாரம் தான். அதிகாரத்தில் இருக்கும்போது மலர்க் கிரீடம் தரித்து மகிழ்ந்தவர் இப்போது கிரீடத்துக்கு மாற்றாக தலைப்பாகை அணிந்துகொள்வார். ‘தமிழினத்தலைவர்,’ ‘உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு,’ ‘தமிழை அரியணை ஏற்றவே இன்னொரு தேர்தலை எதிர்கொள்ள விரும்புகிறேன்’ போன்றவைதான் அவரது தலைப்பாகைகள். 16ஆம் நாள் சாவுச் சடங்கில் கோடித்துணி எடுத்துத் தலைக்குக் கட்டுவார்கள். கருணாநிதியின் தலைப்பாகைகளுக்கு அதற்கு மேலான தகுதி உண்டா என்பது இனி ஆராயப்பட வேண்டிய விஷயமாகவே இருக்கும்.

உலகம் முழுதும் ஒரு விஷயம் கேள்விகளுக்கோ விவாதங்களுக்கோ அப்பாற்பட்டதாய் ஏற்கப்பட்டுள்ளது காரணம் மானுட வளர்ச்சியின் நெடிய வாழ்பனுபவங்களால் அது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதுதான் குழந்தைக் கல்விக்கான மொழி பற்றிய விஷயம். ஒரு குழந்தை எந்த மொழியால் தன்னை மனிதப் பிறவியாக அறிகிறதோ அதுவே அதன் தாய்மொழி. கல்வி மனிதர்களுக்கு மட்டுமேயான மனித முழுமைக்கான பயிற்சி ஒரு குழந்தை எந்த மொழிஅடையாளத்தோடு பள்ளிக்கு வருகிறதோ அந்த மொழியில் பயிற்றுவிக்கப்படும் போது

படிப்பகம்

www.padippakam.com



ஒரு படிமம் அதே படிமக் கரைசலில் பின்னப்படாமல் முழுமையடைவதுபோல் உள்ளும் புறமும் சுயம்புத் தன்மையோடு விளங்குகிறது. அதன் பின்னர் குழந்தை எந்த அறிவையும், எந்த மொழியையும் அறிதலின் சுயம்புத்தன்மையோடு உள்வாங்கல் எளிதாகிறது. இந்த அடிப்படையில்தான் உலகெங்கும் குழந்தைக் கல்வி தாய்மொழியிலேயே வழங்கப்படுகிறது. இதைக் கேள்விக்குள்ளாக்கும் ஒரு நிலப்பகுதி தமிழைச் சொல்லி ஆட்சியைப் பிடித்தவர்களின் கொடி பறக்கும் தமிழகம் மட்டும்தான். ஆயிற்று. குழந்தையின் தாய்மொழிக் கல்விக்கு கருணாநிதியின் பங்களிப்பு என்பது அதற்கு நடுகல் எடுக்காத குறை மட்டும்தான். கருணாநிதி எல்லாம் பெற்றவர்– துறவு மனத்தைத் தவிர. எதையும் துறக்கத் தெரிந்தவன் எல்லாரையும் நேசிக்கத் தகுந்தவனாவான். கருணாநிதியின் நேசம் தன்பெண்டு, தன்பிள்ளை, வீடுவாசல் என்று பாதரசக்குண்டு மாதிரி அடர்ந்துவிட்டது. நாத்திகவாதம் பேசித் திரிந்த கழகத்தவர் வாக்குப் பொறுக்கி அரசியலுக்கு வந்தபோது 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்றார்கள். அதை அர்த்தப்படுத்தும் பொறுப்பை கருணாநிதி ஏற்றபோது ஒன்றே குலமும் மெய்ப்படவில்லை. ஒருவனே தேவனும் அறியப்படவில்லை. கூடவே தமிழையும் துணியை உருவிக் கொண்டு துரத்தி விளையாடுகிறார்கள்.

இதுவரை 'தமிழ் தமிழ்' என்று முழங்கியவர்களில் பெரும்பாலோர் தமிழைக் கரைசேர்ப்பதைவிடவும் கருணாநிதியின் நண்பர்களாயிருப்பதில் மெய்மறந்து போனார்கள்.

நல்லவேளையோ கெட்டவேளையோ ஆட்சி மாறுகிறது. கருணாநிதியை நம்பிக் கெட்ட தமிழ் முழங்கிகள் ஜெயலலிதாவை நம்பிக்கெட ஒரு முகாந்திரமும் இல்லை. எனவே போராடி வெல்வதொன்றே வழி.

தமிழ் முழங்கிகள் தமிழுக்காகப் போராடப் போகிறார்களா, இல்லை தமிழைத் தொழில்முறைக்கருவியாகப் பாவித்து எப்போதும் போலப் பிழைப்பு நடத்தப்போகிறார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

பிற்பகல் 2–30 மணி ●

படிப்பகம்

www.padippakam.com

# குற்ற உணர்வுள்ள ஒற்றைப் பரிமாணப் பார்வையில் உலகம்- அல்லது 'கூளமாதாரி'யை முன்வைத்துச் சில விமர்சனக் குறிப்புகள்

—ம. மதிவண்ணன்



1

> ஒரு குற்றமுள்ள மனசாட்சி தன் பாவங்களை ஒப்புக்கொண்டேயாக வேண்டும். ஒரு கலை படைப்பு என்பது இத்தகைய ஒப்புக்கொள்ளலே. நான் (கலைஞன்) தற்குச் சாட்சி கூறுபவனாக நின்றேயாக வேண்டும்.
>
> —ஆல்பெர் காம்யூ

இதுவரையிலான இலக்கியமும் கலைகளும் மேல்தட்டுப் படைப்பாளிகளின் ஏகபோகமாகவே இருந்து வந்திருக்கின்றன. அவற்றுள் மிகச் சிறந்தவையாய்க் கொண்டாடப் படும் படைப்புகளில் பெரும்பாலானவை குற்றவுணர்வு கொண்ட தன்னிலைகளாய்த் தம்மை உணர்ந்துகொண்ட படைப்பாளிகளாலேயே சாத்தியமாகி இருக்கின்றன.

இந்தியச் சூழலில் பொதுவான வளர்ச்சிக்குத் தடையாய் இருக்கும் சாதிய வர்ணாசிரம அமைப்பு முறையே இலக்கியத் துறையிலும் வளர்ச்சிக்கு எதிரான தடைக்கல்லாய் இருப்பதை நிறுவ முடியும். விதி, கர்மா, வினைப் பயன் போன்ற சப்பைக்கட்டுகளின் மூலம் சமூகத் தன்னிலைகளின் குற்றவுணர்வு காயடிக்கப்பட்டிருப்பது போலவே படைப்பாளிகளின் குற்றவுணர்வும் இல்லாமலாக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காரணத்தை முன்னிட்டே உலகின் சிறந்த படைப்புகளுக்கு ஈடானவை இங்கு விளையவில்லை என்று சொல்லலாம். விதிவிலக்காய்ச் சொல்லப்படும் படைப்புகளில் இவற்றைத் தெளிவாகவே உணரலாம். யு ஆர். ஆனந்தமூர்த்தியின் சம்ஸ்காரா உடனே நினைவுக்கு வரும் எடுத்துக்காட்டு.

தமிழ்ச் சூழலிலும் க.நா.சு.வின் பொய்த் தேவிலிருந்து ஜெயமோகனின் சமீப எழுத்துகள் வரை பெரும்பாலான படைப்புகளில் மேல் தட்டு மனோபாவமும், அது சார்ந்த செருக்கும், அகம்பாவமுமே பரவலாய்க் காணக்

படிப்பகம்

www.padippakam.com



கிடைக்கின்றன. விதிவிலக்காய்ச் செயல்படும் எழுத்தாளர்களில் ஒருவராய்ப் பெருமாள் முருகனைச் சொல்லலாம்.

2

'பூங்குட்டியாக இருந்தாலும் மண்ணுக்கு வந்து வெளி உலகத்தைப் பார்த்ததும் வயிற்றுப்பாடுதான் முதல் பிரச்சனையாக இருக்கிறது. மூச்சு வெளிக்காற்றை வாங்கிக்கொண்டதும் குட்டி எழுந்து நிற்க முனைவதற்கும் கண்களால் தாயைக்கூட அல்ல முலைக் காம்புகளைத் தேடுவதற்கும் வயிறுதான் காரணம்.'

—கூளமாதாரியில் பெருமாள் முருகன்

பெருமாள் முருகனின் சமீபத்திய நாவலாக கூளதாரி வெளி வந்திருக்கிறது. அவரது முதல் நாவலில் கையாளப்பட்ட சுதைக் களனே இந்நாவலிலும் கையாளப்பட்டிருக்கிறது. இந்த இரு நாவல்களிடையே இரு வேறுபாடுகள் பளிச்செனத் தெரிவதாக இருக்கின்றன. ஏறுவெயில் நாவலில் தலித்துகளின் வாழ்க்கை ஒரு கிளைக்கதையைப் போல, முன்னிலை இடத்தில் நின்று சொல்லப்பட்டிருந்தது. கூளமாதாரி நாவலில் தலித்துகள் தன்னிலையில் நின்று தங்களை முன்வைத்துப் பேசுகிறார்கள் என்பது ஒரு வேறுபாடு. உணர்ச்சி வசப்பட்ட வேகமான கதையோட்டம் முன்னிலும், ஒரு நிதானமான போக்கு பின்னதிலும் கையாளப் பட்டிருப்பது மற்றொன்று

பெருமாள் முருகனின் கதை உலகம் அதிகமும் சிறுவர்களை முன்வைத்து இயங்குவது. ஏறுவெயில் நாவல் பொன்னையன் என்கிற கவுண்டர் வீட்டுப் பையனின் பார்வையில் சொல்லப்பட்டது. கூளமாதாரியும் கிட்டதட்ட அதே வயதுடைய தலித் பையனான கூளையனை முன்னிறுத்திச் சொல்லப்படுகிறது. இவரது பெரும்பாலான கதைகளில் வரும் சிறுவர்களைப் போன்றே கூளையனும் அவனது தோழர்களும் வயதுக்கு மீறிய பொறுப்புகளைச் சுமக்க விதிக்கப்பட்டவர்கள். சிறுவயதிலேயே ஆளுக்காரர்களாய் வேலை செய்ய நேர்ந்தவர்கள். வளர்ப்புப் பிராணிகளைப் போலவே வளர்க்கப்படும் அவர்களின் பிழைப்பு அவர்கள் மேய்க்கும் ஆடுகளைவிட எவ்விதத்திலும் மேம்பட்டதாக இல்லை.

''வந்தலுக்கு காலங்காத்தால தழ ஒடச்சி போட்றாங்களாமா''

''ஒழுங்கா குமிஞ்சு மேய முடியலியா.''

''கால ஒடிச்சுப் புடுவம் பாத்துக்க.''

என்று அவர்கள் ஆடுகளை மிரட்டுவதற்கும்,

''செனப்பன்னியாட்டம் மூணு வேளையும் தின்னா காத்தால எந்திரிக்க முடியுமா.''

படிப்பகம்

www.padippakam.com



"வந்து சம்பளம் பேசுனானுல்ல உங்கப்பன். நாளைக்கு அவனைக் கூட்டிக்கிட்டு வாடி பேசிக்கிறன்,"
என்று அவர்களை அவர்களின் கொங்கத்ராளுக்ள் மிரட்டுவதற்கும் வேறுபாடு ஒன்றுமில்லை.

வயிற்றுக்குப் போதுமானதாய் இல்லாத உணவைத் தேடியே நாள் முழுவதுமான அவர்களின் நகர்வு இருக்க வேண்டியதாய் இருக்கிறது. பெரும்பாலும் அதை அவர்கள் திருடியே கண்டடைய வேண்டியதாய் இருக்கிறது. வயிற்றுக்கில்லாமல் செய்யும் இச்சிறு சிறு திருட்டுக்கான எத்தனங்களும், அடையும் வெற்றிகளும், சமயத்தில் தோல்விகளும், அதில் கிடைக்கும் தண்டனைகளுமாய் அர்த்தமற்றுத் தொடர்கின்றன அவர்களின் நாட்கள். திருட்டுக்குத் தண்டனையாய் வத்தலாடு கல்லால் அடிப்பட்டுக் காலொடிபடுவதைப் போலவே இவர்களும் கட்டிவைத்து விளாசப்படுவதும், கிணற்றுக்குள் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப் படுவதுமான தண்டனைகள் கிடைக்கப் பெறுகிறார்கள்.

பசியும் அச்சமும் ஏமாற்றங்களும் விரவிய இந்த வாழ்க்கையை ஒரு சிலுவையைப் போலச் சுமந்து திரிய வேண்டியதாய் இருக்கிறது. அவர்கள் அதிலிருந்து தப்பித்து ஓடுவதே அவர்களின் கனவாக இருந்தாலும், அந்தக் கனவு ஈடேறுவதேயில்லை. ஓடிப்போகும் நெடும்பன் பிடித்துக் கொண்டு வரப்பட்டுத் திரும்பவும் அந்தக் குழியிலேயே தள்ளப்படுகிறான். பாட்டி வீட்டில் ஒளிந்து கொள்ளும் கூளையனைத் தகப்பனும் அவனது கவுண்டனும் வந்து கூட்டிக்கொண்டு போகிறார்கள். செவிடி மட்டும் தப்பித்துக் கொள்வதாய் தோன்றினாலும், அவளுக்குப் பதிலாகச் சுமையை அவள் தங்கை பொட்டி சுமக்க வேண்டுவதாய் இருக்கிறது.

நாவலில் வரும் கவுண்டர்கள் தலித் சிறுவர்கள் பார்வையிலேயே பேசப்படுவதால் கேலியும், வெறுப்பும் தொனிக்கவே சித்தரிக்கப் படுகிறார்கள். கையாலாகாத செல்வன், படுக்கையில் கழிந்து கொண்டிருக்கும் நெடும்பனின் பெரிய கவுண்டர், வவுறியின் கவுண்டச்சி போன்றவர்கள் இளக்காரமாகவும், கூளையனின் கவுண்டர், அய்யக்கவுண்டம் பாளையத்துப் பெரிய தோட்டத்துக் கவுண்டர் போன்றவர்கள் வெறுப்புடனும் காட்டப்படுகிறார்கள். செல்வனைப் போன்ற கவுண்டர் வீட்டுப் பையன்கள் வறட்டு கர்வம் உடையவர்கள். அதைத் தவிர ஒன்றுக்கும் கையாளாகாதவர்கள். கவுண்டச்சிகள் வாயாடிகள், பேராசைக்காரிகள். கவுண்டர்கள் கொடூரம் நிறைந்தவர்கள் என்பவை நாவல் நமக்குத் தரும் பொதுவான சித்திரங்கள்.

பெருமாள் முருகனின் நாவல்கள் அனைத்துமே கவனம் கொள்ளும் ஒரு விஷயம், கட்டமைக்கப்படும் இழிவும், இழிவு சுமத்தப்

படிப்பகம்

www.padippakam.com



பட்டவற்றின் மேல் கட்டவிழ்க்கப்படும் வன்முறையும் ஆகும். அவருடைய பிற நாவல்களில் வன்முறைக்குள்ளாகும் பாத்திரங்கள் மௌனமாய் அதைச் சகித்து ஏற்றுக்கொள்கின்றன. இந்நாவலில் மிகப் பலவீனமான முறையில்தான் என்றாலும் வன்முறைக்கு எதிரான எதிர்வினைகளில் இறங்குவது நுட்பமாய்ப் பதிவு செய்யப் பட்டுள்ளது.

குழந்தைகளுக்கு முடிப்பாடம் போடும் மொண்டி, கவுண்டச்சிகள் கொண்டு வரும் குழந்தைகளுக்கு "துணிச் சிறகில் பாடம் போட்டால்தான் பலிக்கும்" என்று சொல்வது, கவுண்டச்சி அதிகமாய்த் திட்டும்போது கவுண்டச்சி கேட்காத வகையில் எருமையிடம் ராத்திரி கவுண்டன் போட்டு வாங்கிட்டானா என்று வவுறி கேட்பது, மற்றும் விளையாட்டுத் தோழர்களிடம் கவுண்டச்சியைப் போல நடித்துக் கிண்டல் செய்வது, செத்துப் போன ஆடுகளுக்குப் பதிலாக ஒரு வருடம் சம்பளமில்லாமல் வேலை செய்யச் சொல்லும் போது "என்ன ஆனாலும் சும்மா மட்டும் வேலை செய்யமாட்டேன்" என நெடும்பன் சொல்வதுபோன்றவற்றை உதாரணமாகச் சொல்லலாம்.

தமிழ்ச் சூழலில், கிராமத்து வாழ்வில் வீட்டு விலங்குகளின் பந்தம், கிராமத்து மனிதர்களின் அவற்றுடனான உறவும் குறிப்பிடத்தக்க ஒரு இடத்தைப் பெறுவன என்று சொல்ல முடியும். விலங்குகளை முக்கியக் கதாபாத்திரங்களாகக் கொண்டு தேவர் பிலிம்ஸ், ராமநாரயணன் போன்றோர் அன்றும் இன்றும் எடுத்த படங்கள் பெற்றவரவேற்பை இதன் தொடர்ச்சியாகவே நான் காண்கிறேன். அவ்வகையில் பெருமாள் முருகனின் ஏறுவெயில் நாவலில் மட்டுமல்லாது கூளமாதாரியிலும் வீட்டுவிலங்குகள் வகிக்கும் பங்கு முக்கியமானவையாய் சித்தரிக்கப்படுகிறது. மனிதரைப் போலவே அவை ஒவ்வொன்றுக்கும் பேர் உண்டு. நல்லியல்புகள், சுட்டித்தனங்கள் வீரச்செயல்களுடன் உயிர்ப்புடன் சித்தரிக்கப்படுகின்றன.

3. பிராமணனது பெயரின் முதல் பகுதி மங்களத்தைக் குறிக்கும் வகையிலும், சத்திரியனது பெயர் அதிகாரத்தைக் குறிக்கும் வகையிலும், வைசியனது பெயர் பொருள் வளத்தைக் குறிக்கும் வகையிலும் அமைந்திருக்க வேண்டும். ஆனால் சூத்திரனது பெயரோ அருவருக்கத்தக்கதாக இருக்க வேண்டும். மனுதர்மம் 2:31

சூத்திரன் படாடோபமான பெயரைச் சூட்டிக் கொண்டால் உயர்பிறவியான பிராமணன் பொறுத்துக் கொள்ள மாட்டான். எனவே சூத்திரனது பெயரைக் கேட்ட அளவிலேயே அது பொருளிலும் சொல்லளவிலும் வெறுக்கத் தக்கதாக இருக்க வேண்டும்.

பெருமாள் முருகனின் இந்நாவலைப் பொறுத்தவரை உறுத்தலாய் இருந்திற ஒரு விஷயம் பாத்திரங்களின் பெயர்கள். தலித்

படிப்பகம்

www.padippakam.com



சிறுவர், சிறுமிகளின் பெயர்கள் இவை: கூளையன், நெடும்பன், மொண்டி, வவுறி, செவுடி. எல்லாமே கேலிப் பெயர்கள். அவர்களுக்கென்று பெற்றவர்கள் வைத்த பெயர்களை மறுத்து கவுண்டர்கள் இழிவைச் சுமத்தி அழைக்கும் இப்பெயர்களிலேயே நாவல் முழுக்க வருகிறார்கள். வவுறிக்கு மட்டும் வீட்டில் வைத்த பெயர் ராமாயி என்று ஒரு இடத்தில் அறியமுடிகிறது. கவுண்டர் வீட்டுப் பையன்கள், பெண்களின் பெயர்கள் இவை: செல்வன், மணி, குஞ்சாள், சரோஜா. இவர்களில் செல்வனுக்கு மட்டும் திருகுட்டி என்று பட்டப்பெயர் இருப்பதாக அறிய முடிந்தாலும் நாவல் முழுக்க செல்வன் என்ற பெயரிலேயே அழைக்கப்படுகிறான்.

தலித் பையன்கள் தாங்கள் மேய்க்கும் ஆடுகளுக்கு நெடும்பி, மோளச்சி, வத்தலு, வெள்ளச்சி, சுழியன், கோணக்காலி என்று பெயர் வைக்கிறார்கள். நாவலாசிரியர் கிட்டத்தட்ட இதுபோன்ற பெயர்களையே தலித் பையன்களுக்கு வைத்திருக்கிறார்! தனது பிரியத்துக்கும் கருணைக்கும் உரிய வீட்டு விலங்குகளாகவே அவர்களைக் கருதுகிறார் என கொள்ள இடமிருக்கிறது. யதார்த்தத்தை எழுதுவதாக அவர் சொல்லக் கூடும். யதார்த்தம் என்பது பார்வையோடு தொடர்புடையது. பார்வைகள் வேறுபட யதார்த்தமும் வேறுபடும் என்பதை ஆசிரியருக்கு நினைவு படுத்தலாம்.

சக்கிலியர்களின் மொழி குறித்து ஒரு இழிவான பார்வையே நிலவுகிறது பொதுப்புத்தியில். இச்சூழலில் இந்நாவலில் அவர்களின் மொழி இடம்பெறுவதைச் சாதகமான அம்சமாகவே நான் பார்க்கிறேன். அதே வேளையில் சில இடங்களில் அது பிழையாய்க் கையாளப்பட்டிருப்பது ஒரு சிறிய குறையே.

பெருமாள் முருகனின் எல்லா நாவல்களும், ஒரு மையப்பாத்திரம், அதைச் சுற்றியிருக்கும் சின்ன உலகம், அவர்கள் படும் துயரம் என்பதாக அம்மையப் பாத்திரத்தைச் சுற்றிய கதையோட்டத்துடன், மையப் பாத்திரத்தின் பார்வையிலேயே சொல்லப்படுகிறது. இந்தக் காரணத்தை முன்னிட்டு நாவல் காட்டும் உலகம் ஒற்றைப் பரிமாணத்தில் இயங்குவதாகவே இருக்கிறது. இந்த ஒற்றைப் பார்வையை ஒரு பலகீனமாகவே கணக்கிட்டாலும் அந்தப் பார்வை முடிந்தளவு நேர்மையும், மனித நேயமும் கொண்டதாக இருந்து விடுவதால், அவரது நாவல்கள் முக்கியமானவையாகத் தம்மை நிலைநிறுத்திக் கொள்கின்றன. இந்நாவலும் அதற்கு விதிவிலக்கல்ல.

இறுதியாக நாவலை வடிவமைத்து வழங்கிய முறையிலும், அச்சிட்ட முறையிலும் தமிழினி பதிப்பகத்தாரின் தேர்ச்சியும், அழகுணர்ச்சியும் வெளிப்படையாய்த் தெரிகின்றன என்பதையும் நான் இங்குக் குறிப்பிட்டே ஆகவேண்டும். ●

படிப்பகம்

www.padippakam.com



## காரியம் | பாரதி வசந்தன்

பூமியான்பேட்டைக்குப்[1]
போகிற வழியில்
கசுணா[2] குளக்கரையில்
கரும காரியம்

அப்பாவுக்குப் போனது
மனசை அறுக்க
கருமாதிக் கொட்டகையில்
ஜமக்காளத்தை விரித்து
அதன்மேல் இப்பொழுது
என்னைப் போலவே
இன்னொருவன்

எதிரே இருந்த
செவத்த ஐயர்
கருத்தவனுக்கும்
பூணூல் போட்டுக்
காரியம் செய்யும்
மந்திரம்
வாழைஇலை
பச்சரிசி
பாகற்காய்
அகத்திக்கீரை
அளவுக்கேற்ப
கூடும் குறையும்

ஐயர் மந்திரம்
சொல்லும்போது
மந்திரம் சொல்லி
தலையில் குட்டும்போது
தலையில் குட்டி
பிண்டம் பிடித்ததை
நீரில் கரைக்கப் போனால்

படிப்பகம்

www.padippakam.com



குளித்திற்குப் பதிலாக
வீடுகள்

தண்ணிகானில்[3]
கரைத்துவிட்டுத்
தலைமுழுகி
ஈரத்துணியோடு
வந்தால்
அதனை எடுக்க
அழுக்குத் துணியோடு
காத்திருப்பார்கள்
ஏகாலியும் அவன்
பொஞ்சாதியும்

மீண்டும்
ஐயர் முன்பு அமர
கற்பூரம் ஏற்றிக்
கண்களில் ஒற்றிக்கொண்டு
தானம் வாங்கிக்
காரியம் முடிப்பார்
அடுத்த காரியத்துக்குப்
போகும் அவசரத்தில்

இந்த செவத்த ஐயரும்
ஒருநாள்
போய்ச் சேருவான்
அவனுக்கும்
காரியம் செய்ய
இன்னொரு ஐயர்
வருவான்
இவனைப் போலவே
மார்பில் பூணூலோடு.

1. பூமியான்பேட்டை — புதுச்சேரிக்கு மேற்கே தலித் மக்கள் வாழும் பகுதி. 2. கசனா — அந்நாளைய அரவிந்தர் ஆசிரமத் துக்காரனின் பிரெஞ்சுப் பெயர். 3. தண்ணிகான் — குடிநீர்க் குழாய்.

(இக்கவிஞர் அண்மையில் தனது தாயையும் இழந்தார்.)

படிப்பகம்

www.padippakam.com



## மழை | சுதா முருகேசன்

இரவுகளில் பெய்யும் மழையே
எனது ஞாபகத்தில்

ஓட்டுக் கூரையிலிருந்து
ஒழுகும் தண்ணீர்
சொட்டுச் சொட்டாய்
வீட்டை மெழுகும்

அங்கங்கே அம்மா வைத்த
பாத்திரங்களில்
அடங்க மறுத்து தெறித்த துளிகள்
தூக்கத்தின் முகத்தைக் கழுவும்

'வான்சிறப்பு'
வசவுகளால் எழுதப்படும்

மடியில் கிடத்தி
தலையைக் கோதிவிடும்
அம்மாவை அண்ணாந்து பார்த்தால்

அம்மாவின் கண்களில்
லேசாய்
மழை ஆரம்பித்திருக்கும்...

இப்போதெல்லாம்...
குடை வாங்கும் செலவை
எனக்கு
மழைதா மிச்சப்படுத்துகிறது.

படிப்பகம்

www.padippakam.com



## இலக்கியச் சந்திப்பு | ஊசேத்துளசி

மெல்ல முடிகிற வார்த்தைகளை விழுங்க
மட்டும் முடிந்ததில்லை.

அறிமுகப் படுத்தப்பட்டேன் போஸ்கோவுடன்
விறகு வாங்கப் போனபோது
இரண்டு சிவப்பு துண்டுக்காரர்களிடம்.

சிகரெட்டைக் காலால் தேய்த்துவிட்டு
"எந்த மாதிரி கவிதைகள் எழுதுகிறீர்கள்?"
சிரித்துக் கேட்டார் ஒருத்தர்.
பின்பொருநாள் சேகரித்துக்காண்பிப்பதாய்
சொன்னேன்.

"இறைந்து கிடக்கிறதோ வீட்டில்?"
இன்னொருந்தர் தொடுத்தார்.
"வாழ்க்கையும்கூட, ஆனால் தெருவெங்கும்."
சொல்லிக் கொண்டிருக்கையில்
நான்கு தேநீர்களுக்கு ஆர்டர் செய்தார்
அருகிருந்த டீக்கடையில்

வந்தது
குடித்து ஒருவாய் புகையிலை போட்டுக்கொள்ள
அப்பாடா என்றுணர்ந்தவனாய்
கேட்டேன்:
"என்ன செய்கிறீர்கள்?"

"நிலக்கரி சுரங்கத்தில் பர்மனண்ட்
எம்ப்ளாயி."

"அவர்..?"

"இரண்டு பேருமேதான்... நீங்கள்
என்ன செய்கிறீர்கள்?"

முன்பு நான் கேட்டதன் நிமித்தம் வந்த
சங்கடம்

"அங்கிருந்தேன் பின்பு ஆத்மாஜியுடன்
எங்கோ போனேன்

படிப்பகம்

www.padippakam.com



வடலூரில் இருந்தது 8 மாதங்கள்
நானாய் உதறவில்லை யெங்கும்
இப்போது டீக்கடையில் உங்களோடிருக்கிறேன்
இது பழைய ஜோக்தான் என்றாலும்...”

முடிப்பதற்குள்
“ஒரு கவிதையாளனின் அணுகல்கள்...”
என ஆரம்பித்தவரை மறித்துக் கேட்டேன்:
என் சர்ட்டிபிகேட்டுகளோடு
சம்பந்தமில்லாவிடினும்
உங்கள் சுரங்கத்து காண்ட்ராக்ட்காரர்களிடம்
சொல்லி
ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்ய முடியுமா?

## கணவனது டயனோசர்

### பா. சத்தியமோகன்

சமையலறையிலிருக்கும்
கரப்பானை அருவெறுக்கும் கணவா
ஊரறிய நீ சொல்வதில்லை
உனதுள்மன பூதாகரமான
டயனோசர் அலைவுகளை.
கரப்பானைக் கொல் என்கிறாய்
சுத்தமில்லை உனது சமயலறை என்கிறாய்
நானறிவேன்
எதனால் நீ அவ்விதம் கூறுகிறாய் என்று.
ஒரு நாள் நீ விழுங்கிய டயனோசரின் கால்கள்
உனது வாயில் தெரிந்தன நகங்களுடன்
பிறருக்கு அது தெரிவதில்லை!
அப்படியே நீ-
பணிக்குக் கிளம்புவது
பாயில் உறங்குவது
பல் விளக்குவது

படிப்பகம்

www.padippakam.com



பஸ்ஸில் பிரயாணிப்பது மற்றும் பல.
கரப்பான் சண்டையில் எப்போதும்-
நீ மூடி மறைப்பது
நீயறியாமல்
நீ விழுங்கிய டயனோசரை
என்னுடன் பகிர்வாய் கணவா
உனை வாட்டும் மிருகத்தை.
குறைந்தபட்சம் உணர் அது போதும்.

## படையல் | என்.டி. ராஜ்குமார்

பாலும் கறக்க வேண்டாம்
கன்றுக்காலியை கட்டிவையுங்கோ
குருதிக்குளத்தில் நீராடி வருவோனுக்கு
வறுத்த ரத்தம்
துவையல் மீனில்
குடிக்க வைப்போம் கள்ளுக்கலையம்
மூக்கில் முளைத்த பல்லால் நோண்டி
திரியும் பன்றிக் கறியும்தான்
கொம்பு முளைத்த இறைச்சி திரியும்
கருங்கிடாவிற்கு கால் முளைத்து
முள்ளேயில்லா சதைகள் கொண்டு
கோழி திரியும் இரைகள் கொத்தி
எருக்கலம் பூவை சூட்டியதாரோ
காவல் காக்கும் கணேசா
வளைகள் தோண்டும் எலிகளை நம்பி
சாக்கடை பக்கம் போகாதே
எங்கள் சாமிக்கு காவல் காத்த
உனக்கும் இங்கொரு இலை வைப்போம்
நேற்றைய கனவில் பசுக்கறி கேட்ட
சாமிக்கு நாளை பங்குனிப் படைப்பு.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்க் களம்

## காலச்சுவடு கண்ணனுக்கு ஒரு கடிதம்

காலச்சுவடு நிறுவனம் 'தமிழ் இனி 2000'ஐ ஒழுங்கு செய்ததிலிருந்து அண்மையில் தினமணி கதிர் (20-5-2001) தொகுத்து அளித்த 'பு. பி. சர்ச்சை: தமிழ்ச்சொத்தா தனிச்சொத்தா?' வரை தமிழ் எழுத்துத் தளத்தில் தொடர்ந்து பேச்சுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ரசனை இல்லாத மனத்துக்கு அவை ஏச்சுகளாகவே தென்படலாம். இப்பேச்சுகளில் சாகித்ய அகாதமிக்காக சா. கந்தசாமி மேற்கொண்ட தொகுப்புப்பணி பற்றிய சர்ச்சை தவிர மற்றவை காலச்சுவடு நிறுவனம் முன்னெடுத்தவை என்பது கவனத்துக்குரியது.

பேச்சுகளின் சாரத்தை அல்லது விசாரத்தை ஒன்றுகூட்டிப் பார்ப்பது, நிலவும் புரிதல்களை அர்த்தப் பரிமாணங்களாக்கும் முயற்சியாக அமையும். பேச்சுகளினூடே பேசப் படாதவையாய் மௌனப்படுத்தப்படும் புள்ளிகளில் காலச்சுவடு நிறுவனத்தின் இலக்கிய அரசியலைத் தேடிக் கண்டடைவதும் தமிழ்க் களத்தின் தகவமைப்புக்கு உறுதுணையாகக் கூடும்.

மிகுந்த உழைப்பையும் திட்டமிடலையும் ஒருங்கிணைப்பையும்செயல்தீவிரத்தையும் கோரும் தமிழ்இனி 2000 பெரு நிகழ்வைத் தன் உறுதுணையாளர்களின் உதவியுடன் வெற்றிகரமாகக்கொண்டாடி முடித்தமைக்காகக் காலச்சுவடு கண்ணனை முதலில் பாராட்ட வேண்டும். இதில் நமக்குள்ள

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்றபின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.

படிப்பகம்

www.padippakam.com



சுணக்கம், எங்கே இதை நையாண்டியாகப் புரிந்துகொள்வாரோ என்பதுதான். ஏனெனில் காலச்சுவடு கைங்கர்யங்களோடு முரண் பட்டவர்களையெல்லாம் கடந்த சில இதழ்களாகப் பகுதி பகுதியா கக் கூறு கட்டி நையாண்டி என்றால் அப்படியொரு நையாண்டி செய்தே பகடி பண்ணுபவருக்கு அவ்வாறு தோன்ற வாய்ப்புண்டு. வணிகப்பிரம்மாண்டங்களை நிகழ்த்தும் அற்பக் கம்பீரங்களைப் பார்க்கக் கிடைத்த அரிய சந்தர்ப்பம் நமக்கு.

ஆனால் நாம் அவ்வருடைய இன்னொரு விளம்பலுக்காகவும் பாராட்டியாக வேண்டும். அதாவது எழுத்தாளர்களைச் சுரண்டி வாழும் பதிப்பாளர்களைப் பற்றி நினைவு கூர்ந்ததற்காக. இவர் தன் 'மௌனத்தின் சிறகடிப்பு' பகுதியில் இதை ஏற்கனவே பேசி யிருந்தாலும் தினமணி கதிரிலும் ஒரு தற்காப்புக் கவசமாக மீண் டும் வலியுறுத்தியது பலரையும் சென்றடைந்திருக்கிறது. அண்மை யில் எழுத்தாளர்கள் பலரது படைப்புகள் பெரும்பெருந் தொகுப் புகளாக வெளிவந்துகொண்டிருக்கின்றன. அவற்றில் படைப்பாளி கள் பலர் குறைந்தபட்சம் வாய்மொழி ஒப்பந்தமாகக்கூடப் பதிப்பு சம்பந்தமான எல்லா அம்சங்களையும் பேசித் தீர்த்துக்கொள்ளா மல் வெளியீட்டுக்கு ஒப்பியிருக்கிறார்கள். தம் எழுத்து பலராலும் படிக்கப்பட வேண்டும், தமக்குள்ள பணத்தேவை எவ்வளவு கடுமை யாயிருப்பினும் அதற்கும் மேலாக தம் பெயர் எல்லார் நினைவுக ளிலும் பதியவேண்டும், தம் நூல்கள் எல்லாக் கடைகளிலும் பெயர் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும் என்னும் ஒருவகை புகழ் மேல் ஆசை அவர்களை அப்படி உந்தித்தள்ளியிருக்க வேண்டும். இதை வகையாகப் பயன்படுத்திக்கொள்ளும் பதிப்பாளர் தம் திறமையான வணிகத் தந்திரங்களால் தம்மிச்சையாக உற்பத்தியைப் பெருக்கிச் செழித்து வளர்கிறார். இவ்விஷயத்தில் துப்பை விட்டுவிட்டாலும் வாலையாவது பிடித்துக்கொள்ள வேண்டும் என்னும் விழிப்பையும் பதைப்பையும் ஊட்டியிருப்பதால் கண்ணனுக்கு அவர்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்கள்.

ஆக, காலச்சுவடு நிறுவனம் தன் வியாபாரத்தை நேர்மையா கச் செய்கிறது; தொழிலாகச் செய்கிறது; லாபகரமாகச் செய்கி றது; முறுக்கான சரக்குகளைத் தேர்வு செய்து, உயர் தொழில் நுட் பத்தைப் பயன்படுத்தி லாபமீட்டும் பெருந்தொழிலாக வளர்க்கிறது.

இதைத்தான் முரண்படுகிறவர்களும் கட்டம் கட்டிச் சொல்கி றார்கள்: அவர்கள் முதன்மைப்படுத்துவது முழுக்க முழுக்க வியா பாரந்தான்; வேறெந்தப் புண்ணாக்கும் இல்லையென்று. ஆனால் ஒன்றை அவர்கள் உணரவோ சரிபார்க்கவோ மறந்துவிடுகிறார்கள் அல்லது தவிர்த்துவிடுகிறார்கள். அதாவது காலச்சுவடு நிறுவனம்

படிப்பகம்

www.padippakam.com



தன் பதிப்புத் தொழிலை ஏதோ மந்திரத்தன்மையுள்ள பல்நோக்குத் திட்டம் போல் சித்திரப்படுத்துகிறது என்பதை. படைப்புலகத்துக்கு சுந்தரராமசாமியின் நியாயமான பங்களிப்பையும், அதை இன்றுவரை வரையற்ற பூஜாமனோபாவத்தோடு தலைக்கி மினுக்கிக் காட்டும் விளம்பர நேர்த்தியையும், புதுமைப்பித்தன் போன்ற உயர் மதிப்புள்ள வெளியீட்டுத் தேர்வையும், அறியப்பட்டதோடு அறியப்படாதவற்றின் நவீனப் போக்குகளைப் பற்றிய பெரும்போக்கான கவனங்களையும் ஆரம்ப முதலீடுகளாகக் கொண்டு தன் பல்நோக்குத் திட்டத்தைக் கட்டமைத்துக்கொண்டிருக்கிறது என்று.

நதியின் குறுக்கே அணை கட்டுவதைத்தான் 'பல்நோக்குத் திட்டம்' என்றது இந்திய அரசு. அணையின் முதன்மை நோக்கம் பாசனவசதியைப் பெருக்குவதுதான். ஆனால் அதற்குப் பிற பயன்களும் உண்டு. அவை உடனடிப் பயன்கள். எடுத்துக்காட்டாக அணை கட்டுவதால் மண் அரிமானம் தடுக்கப்படுகிறது. சுற்றுவட்ட நிலத்தடி நீர் பேணப்படுகிறது. மின் உற்பத்தி பெறப்படுகிறது. நீர் வழி போக்குவரத்து மேற்கொள்ளப்படுகிறது சுற்றுலா மையமாய் வளர்த்தெடுக்கப்படுகிறது. மீன் வளம் பெருக்கப்படுகிறது. ஒரு கட்டத்தில் மீன்பிடி ஏலம் எடுத்த ஆயிரக்கணக்கானவர்கள் நீர்த் தேக்கத்தில் இறங்கிக் கலக்கினால், 'தமிழ் இனி 2000' போல அணை கட்டியதன் நோக்கமே அதற்காகத்தான் என்பதாயிருக்கும்.

காலச்சுவடு நிறுவனத்தின் பதிப்புத்தொழிலும் அப்படியொரு பல்நோக்குத் திட்டத் தயாரிப்பே என்பதாக விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். நல்ல நூல்களை வெளியிடல், அவற்றுக்கான சந்தையை விரிவுபடுத்தும் உத்திகளாக இலக்கிய விழாக்கள், விவாதங்கள், கலந்துரையாடல்கள் ஆகியவற்றை ஒழுங்கு செய்தல், இந்தியத் தமிழர்களோடும், உலகெங்கும் சிதறிக் கரையொதுங்கிக் கிடக்கும் ஈழத் தமிழர்களோடும் அவர்களது நிகழ்களத்தின் தகிக்கும் பிரச்சினைகளோடல்லாது தமிழ் என்னும் ஊடகத்தோடு மட்டுமே உறவு கொண்டு, நலம் பாராட்டுநர்கள், மூகவர்கள், வாடிக்கையாளர்கள் ஊடாக வாய்மொழிக் கரிசனத்தோடு இலக்கியக் கடை விரித்தல் என அத்திட்டம் விரிவடைகிறது. எளிமைப்படுத்திச் சொல்வதானால், மற்ற பதிப்பகங்கள் சோற்றுக்கும் சில்லறைக்கும் கடை விரிப்பவை அனால் காலச்சுவடுவோ தமிழ் வாழ்வையும் தமிழ் ஆன்மாவையும் இலக்கிய ஹோமத்தால் உத்தாரணம் பண்ணக் கங்கணம் கட்டிக் கொண்ட நிறுவனம்! இதையும் எளிய வாசகமாக்கி, எவ்வளவுதான் மேம்படுத்தி விளம்பினாலும் வியாபாரம் வியாபாரம்தான் என்பது முரண்படுவோர் வாதம். "தமிழை வளம் திரட்டும் பண்டமாகவும் புகழ் சேர்க்கும் நுகர்

படிப்பகம்

www.padippakam.com



பொருளாகவும் இலக்கியத்தின் பெயரால் செலாவணியாக்கிக் காசு பண்ணும் கலையும் சாகசமும் கைவரப் பெற்றவர்கள்தான் 'தமிழின் மரணம்' என்று தலைப்பிடுகிறவர்கள்'' என்று கவிதாசரணும் அவர்கள் குரலை எதிரொலித்தது.

காலச்சுவடு நிறுவனம் தன் நூல்களுக்கு உயர்ந்தபட்ச விலையை நிர்ணயிக்கிறது. கிரியாவுக்குப் பிறகு அதிக விலையை நியாயப் படுத்துவதில் காலச்சுவடுவே முன்வரிசையில் நிற்கிறது. இந்த நிறுவனம் நல்ல தாளில் அச்சிடுவது கூடுதல் அம்சம். ஆனால் கூடிய விலைக்கு இது ஒன்று மட்டுமே தகுந்த காரணமாகாது. படைப்பாளிகளுக்குச் சரிபாகவும் முறையாகவும் காப்புரிமைத்தொகை வழங்குவதாகச் சொல்லிக்கொள்கிறது. பாராட்டுக்குரிய, எல்லாரும் பின்பற்றத்தக்க செயலாக இதை விளக்கப்படுத்துவது பதிப்பாளர் தன் மிகைவருவாயிலிருந்து பகிர்ந்தளிக்கும்போதுதான். வாசகன் தலையில் வட்டியும் முதலுமாகக் கூடுதல் வட்டியோடு சுமத்துவதால் அல்ல.

காலச்சுவடு நிறுவனம் நூல்களை மிகுந்த கவனம் எடுத்துக் கொண்டு நேர்த்தியாக வடிவமைத்து வெளியிடுகிறது. ஆனால் கட்டுறுதி விஷயத்தில் இன்னும் கவனம் செலுத்த வேண்டும் என்று படுகிறது. உதிரித்தாள்களாக இணைத்து முதுகுப்பசை பூசும் வெளிநாட்டு மலிவுப் பதிப்புகளுக்கான இறக்குமதித் தொழில் நுட்பம் நம்மூர் மலிவுப் பொருள் பயன்பாட்டால் குறைகளுக்கு இலக்காக நேரிடலாம். வெளியிட்டு ஒரு மாதத்தில் அம்பையின் 'காட்டில் ஒரு மான்' என்ற நூலை நண்பர் ஒருவர் எனக்குக் காட்டினார் முதுகு நெகிழ்ந்து சில தாள்கள் பிரிந்த நிலையில். அட்டையில் ஒட்டப்பட்ட கண்ணாடித் தாள் ஆங்காங்கே கோடுகளாய் உப்பித் திரிந்த நிலையில். இது அரிதாக ஏற்பட்ட ஒற்றைக் குறைபாடாக இருக்குமெனில் சந்தோஷமே. ஆயினும் இவ்வளவு அரிய விலையில் நூலகக் கட்டிடம் செய்யப்படாதது எதனாலும் இட்டு நிரப்பமுடியாத குறை. அது என்ன வியாபார தந்திரம் அல்லது தொழில் நுட்பம் என்பது நமக்குப் புரியவில்லை.

பெர்னார்ட் ஷா தன் நூல்களுக்குத் தூக்கலான விலை வைப்பார். 'இந்த விலை கொடுத்து எப்படி வாங்கமுடியும்?' என்று வினவுகிறவர்களுக்கு 'உயர்த்தியான தாள்களைப் பயன்படுத்துகிறேன். உறுதியாகக் கட்டமைக்கிறேன். நூனல நூறு தடனவ விரித்து விரித்துப் படித்தாலும் நெக்குவிடாத கட்டமைப்பு' என்பாராம். அந்த மேதை மகா நக்கல் பேர்வழி. தன் நூலைப் புரிந்துகொள்ள நூறுமுறையாவது வாசிக்க வேண்டியிருக்கும் என்பதை இப்படி நேர்த்தியாகச் சொல்லத் தெரிந்த ஆள். இப்படியொரு அர்த்தத்தில்

படிப்பகம்

www.padippakam.com



படைப்பாளிதான் பேசமுடியும். பதிப்பாளனும் பேசுவான் எனில் அதன் உள்ளுறை அர்த்தங்கள் ஒற்றைத் தன்மையோடு நின்று விடப் போவதில்லை.

பதிப்புத் துறையில் 'எழுத்துப் பரவல்' சேவை செய்கிறவர்கள் இருக்கவே செய்கிறார்கள். மர்ரே அண்ட் கம்பெனி ராஜமய்யர், சக்தி காரியாலயம் வை கோவிந்தன், புலியூர் கேசிகன், பிரேமா பிரசுரம் எனப் பலர் நினைவுக்கு வருகிறார்கள். இடைத் தரகர்களை முற்றாக விலக்கிவிட்டு வாசகர்களோடு நேரடி வணிகத்தை வெற்றிகரமாகச் செய்துவரும் வர்த்தமானன் பதிப்பகம் இத்துறையில் ஒரு புரட்சியையே செய்து வருவதை நாம் கட்டாயம் நினைவுகூர வேண்டும். மலிவுப் பதிப்பு, என்று நம்ப முடியாத விலைகளில் நூல்களைப் பதிப்பித்துக் கையைச் சுட்டுக்கொண்டு பெயரைத் தக்க வைத்துக் கொண்டவர்கள் பலர். அவர்களுக்குக் காப்புரிமைத் தொகை பற்றிப் பிரச்சினைகள் அதிகமில்லை என்று வாதிடலாம். அதோடு அவர்களைப்போல கூறு கெட்டுப்போய் கையைச் சுட்டுக் கொள்ள முடியுமா என்று வாழ்வுறுதி நியாயம் பேசலாம். இந்தப் பேச்சுகளெல்லாம் அவற்றைப் பேசுகிறவர்கள் வெகுமக்களை மேம்படுத்தும் இலக்கியச் சேவைக்குத் தயாரில்லை என்பதை உறுதிப் படுத்தவே உதவுகின்றன.

காப்புரிமைத் தொகை பற்றி ஏதோ புது மரபை முன்னெடுத்தாற் போல் பெரும் பேச்சுப் பேசித் தன் அழிவணிகத்துக்குக் காப்புரிமை தேடுவதில் முன்னோடியாக இருக்கப் போவதும் காலச்சுவடு நிறுவனமே என்று படுகிறது. எந்தப் பதிப்பகமும் படைப்பாளிக்கு பத்து சதவீதத்துக்கு மேல் காப்புரிமைத் தொகை வழங்குவதாகத் தெரியவில்லை. நூலின் படிகளுக்கேற்பவே அது கணக்கிடப்படுகிறது. படிகளின் எண்ணிக்கைக்கு பதிப்பகம் சொல்லும் கணக்கே இறுதியானது. நடைமுறை விஷயங்களில் பெரும்பாலும் துப்புகெட்டவராயிருக்கும் படைப்பாளி இதில் துப்பு துலக்குவதெல்லாம் ஆகிற காரியமில்லை.

சந்தைப் படுத்துதல் பற்றிய தகவல் அறிவும், வாடிக்கை பிடிப்பது பற்றிய வணிக நுணுக்கங்களும், கொஞ்சம் தில்லுமுல்லுகளும் கைவரப் பெற்றவர்களுக்குப் பதிப்புத் தொழில் நூறு சதவீதம் இலாபம் தரக்கூடியதே என்று யாராவது சொல்லிவிட்டால் அத்தனை பேரும் அணி திரண்டு மறுப்பார்கள். ஆனாலும் "மானுட மேன்மைக்காகவே நாங்கள் இலக்கியச் சேவை ஆற்றுகிறோம்," என்றெல்லாம் பெரிய பெரிய சொற்களில் புரளி கிளப்பாமல் தங்கள் தொழிலை இலாபத்தோடு தொடர்ந்து செய்துகொண்டுதான் உள்ளனர். (இதில் தன் எழுத்தை அச்சில் பார்க்கும் ஆசையில்

படிப்பகம்

www.padippakam.com



படைப்பாளியே பதிப்பாளராகி, நண்பர்களுக்கும் கழுதைகளுக்கும் வகை தொகை இல்லாமல் படிகளை வாரி வழங்கிய பின்னும் மீந்ததை என்ன செய்வது என்று தெரியாமல் கயிறு போட்டுக் கட்டிக் கரையான் புற்றின் மேல் வைத்துவிட்டுக் கடன் அடைக்கப் பாடுபடும் வணிகத் தற்குறிகள் சேர்க்கப்படவில்லை. அவர்களில் பலரும்கூட சமீபகாலங்களில் பொது நூலகத்தின் நூல் வாங்கல் ஆணையால் கற்றுக்குட்டி வியாபாரிகளாகிக் காலம் தள்ளப் பழகிக் கொண்டுவிட்டார்கள்.) காலச்சுவடு நிறுவனம் எந்தவிதத்தில்லுமுல்லும் இல்லாமல் வெளிப்படையாகவே பிறர் தேற்றுகிற இலாபத்தைப்போல் இரு மடங்கு இலாபத்தை ஈட்டிடும் வகையில் தன் தொழிலை லட்சியப்படுத்தியுள்ளது. (லட்சியம்தான் இலக்கியமாயிற்று என்பது அம்மாஞ்சிகளின் பாஷா பரிவர்த்தனை.)

தமிழில் நூல்கள் வெளியிடுவோர் ஒரு நூலுக்கு முதலில் 1200 படிகள் அச்சிடுவது வழக்கம். (கெட்டிக்கார வணிகர்கள் கூடுதலாகவே அச்சிட்டுக் கொண்டு, கணக்கில் 1200ஐக் காட்டி, அதிலும் விற்பனைகுரிய படிகள் 1000 எனக் கொண்டு படைப்பாளிக்கு அடிமாட்டு விலையாகவோ அல்லது காப்புரிமைத் தொகையாகவோ 'படியளப்பார்கள்' இது பதிப்பாளர் படைப்பாளியைச் சுரண்டும் தந்திரம். இப்பொழுதெல்லாம் ஆப்செட் அச்சைப் பயன்படுத்தும் வியாபாரி முதல் ஈடாகக் குறைந்தது 2000 படிகள் அச்சிடுவதை வழக்கப்படுத்திக்கொண்டுவிட்டார்.) காலச்சுவடு நிறுவனம் 1500 படிகள் அச்சிடுவதாகச் சொல்கிறது.

நூல் தயாரிப்பில் நூலின் ஒரு படிக்கு என்ன தயாரிப்புச்செலவு ஆகிறதோ, அதைப்போல மூன்று மடங்கை நூலின் விற்பனை விலையாகக் குறிப்பார்கள். (நூல்கள் ஃபாரம் கணக்கில் பேசப்படும். 1 ஃபாரம் = 16 பக்கங்கள். ஃபாரம் கூடக் கூட அடக்க விலை குறையும். ஃபாரம் குறைந்தால் விலை கூடும். காரணம் மேலடக்கான செலவு நிலையாக இருப்பதால். மேலும் படிகளின் எண்ணிக்கை கூடினால் அதற்கேற்ப அடக்கவிலை குறையும்.)

ஒரு தோராயக் கணக்காக, நூலின் அடக்கவிலை ரூ.15க்குள் வரும் எனில் அதன் விற்பனை விலையாக ரூ. 50 (காப்புரிமைத் தொகை 10 % உம் சேர்த்து) வைக்கலாம். நின்று தொழில் புரியும் பதிப்பகங்கள் இந்தக் கணக்கில்தான் விலை வைக்கின்றன. அதாவது ஒரு ஃபாரத்துக்கு ரூ.5 விலை வைக்கின்றன. (உதாரணமாக, 'அதிசயப்பிறவி வ. ரா.' என்னும் 21 ஃபாரம் நூலுக்கு விஜயா பதிப்பகம் ரூ. 100 விலை வைத்துள்ளது.) ஆனால் காலச்சுவடு நிறுவனம் ஃபாரத்துக்கு ரூ. 7 வைக்கிறது. அதிக விலையுள்ள தாளைப் பயன்படுத்துவதால் அதன் அடக்கவிலை சற்றுக் கூடுதலாகவே

படிப்பகம்

www.padippakam.com



இருக்கும். (முதல் ஈடு உடனடியாக விற்றுத் தீர்ந்துவிடும் நிலையில் மறுபதிப்பின் தயாரிப்புச் செலவு கணிசமாகக் குறையும் என்பது கூடுதல் லாபம்.) காலச்சுவடுவின் விற்பனை விலைக் கணக்கே சற்று வித்தியாசமாகத் தெரிகிறது. உதாரணமாக, காப்புரிமைத் தொகையையும் முன்கூட்டியே சேர்த்து நூலின் ஒரு படிக்கான தயாரிப்புச் செலவு ரூ 20 எனக்கொண்டால், விற்பனை விலை—அதன் மூன்று மடங்கோடு மேலும் ஒருமுறை காப்புரிமைத் தொகையைக் கூட்டி ரூ.70 ஆக வைக்கப்படுகிறது. இதையே அடக்க விலையைப் போல் மூன்றரை மடங்கு வைக்கப்படுகிறது என்றும் சொல்லலாம். அப்படியொரு தாராளம். இது பதிப்பாளர் வாசகரைச் சுரண்டும் வணிகமுறை.

பிற பதிப்பகங்கள் முழுமையாக விற்பனைக் கழிவு தந்தே வியாபாரம் செய்பவை. தனி நபர் விற்பனையைப் பெருக்க அவை பெரிதாக முயன்றதில்லை. உடனடியாகக் காசு பார்க்க முடியுமெனில் குறைந்த இலாபம் கிடைத்தாலும் போதும் என்று பொது நூலகத்துக்கு மொத்தமாகத் தள்ளிவிடுவதில் குறியாக உள்ளன. பொது நூலகமோ தமிழ் நூல்களுக்கு ஒரு ஃபாரத்துக்கு ரூ.3க்கு சில பைசாக்கள் முன் பின்னாகத்தான் தருகிறது. ஆங்கில நூல்கள் எனில் போட்ட விலையைக் கொடுத்துவிடுகிறது. தமிழ்ப் பதிப்புத்துறையைப் பழிப்பு காட்டுவதில் அப்படியொரு விசுவாசம் அதற்கு.

காலச்சுவடு நிறுவனம் பொது நூலகத் துறையைச் சீந்துவதில்லை என்பது கொள்கையளவில்(மட்டுமே) போற்றுதலுக்குரிய செயல். பெரும்பாலும் தனிநபர் வியாபாரமே கைகூடி வந்து விடுகிறது. சில மையங்கள் மூலம் விற்பதில் குறைந்தபட்ச விற்பனைக் கழிவு தருவதாயிருக்கும். அதாவது காலச்சுவடு நிறுவனம் மற்ற நிறுவனங்கள் பெறும் இலாபத்தைப் போல் இருமடங்கு இலாபத்தை அள்ளுகிறது—உழைத்துத்தான், திட்டமிட்டுத்தான். அவரவரும் அவரவருக்குகந்த வழிகளில் உழைக்கவும் திட்டமிடவுமே செய்கிறார்கள். ஆனால் காலச்சுவடு மட்டுமே தன் உழைப்பையும் திட்டமிடலையும் இலக்கிய உபாசனை என்று கூறி சுந்தரராமசாமியின் பட நிழலில் பம்மாத்து பண்ணுகிறது.

இந்த வகை இலக்கிய வியாபாரம் செய்வதில் காலச்சுவடு கண்ணனுக்கு கூச்சம் எதுவும் இல்லை என்கிறார். இதைச் சுட்டிக் காட்டுகிறவர்களைப் பொறாமைக்காரர்கள், ஒவ்வாமையாளர்கள் என்று சாடுகிறார். "எழுத்தாளர்களைச் சுரண்டி வாழும் பதிப்பாளர்களை நீங்கள் எப்போதாவது கண்டித்ததுண்டா?" என்று கேள்வி எழுப்புகிறார். இதற்கு 'இல்லை' என்பதே பதிலாக இருந்

படிப்பகம்

www.padippakam.com



தாலும், இலக்கியவாதம் பேசி வாசகர்களைச் சுரண்டிக் கொள்ளையடித்துக் கொழுக்கும் இவர்கள் வணிகத் தந்திரங்களைத் தோலுரித்துக் காட்டுவது எந்த வகையில் நியாயமற்றதாகிவிடும் என்பது முரண்படுவோரின் வாதம்.

கோவை விஜயா பதிப்பகம் இருக்கிறது. அதை ஒரு பேசப்படும் பதிப்பகமாக, இலாபம் ஈட்டும் நிறுவனமாக, புத்தகப் பிரியர்களின் பூங்காவாக, இலக்கிய ஆர்வலர்களின் சந்திப்பு மையமாக வேலாயுதம் நடத்தி வருகிறார். அவரும் புத்தகச் சந்தை நடத்துகிறார். இலக்கியவாதிகளை அழைத்து கௌரவிக்கிறார். சலந்துரையாடலுக்கு ஒழுங்கு செய்கிறார். வாசகர் விழா எடுக்கிறார். அவ்வளவையும் தன் கைக்காசைச் செலவு செய்து, தன் தொழிலை நேசிக்கும் வியாபாரியாக முன்நின்று, முதல் போட்டுப் பணம் பண்ணும் வியாபாரத்துக்குப் மேலாகப் படிப்பாளி–படைப்பாளி மனங்களைப் பகிர்ந்துகொள்ளும் நட்புவட்டமாயிருந்து செயல்படுகிறார். அவரை யாரும் குறை சொல்வதில்லை. ஆனால் காலச்சுவடு நிறுவனம் விமர்சிக்கப்படுகிறது. ஊரெல்லாம் பணம் திரட்டி, தனக்கே சொந்தமான 'தமிழ் இனி'யாக இலக்கிய வியாபாரம் நடத்திய நிறுவனம்தான் விமர்சனத்துக்குள்ளாகிறது. காரணம், தான் ஒரு நிறுவனம் என்பதற்கும் அப்பாற்பட்டு அது நடத்தும் இலக்கிய அரசியலும், அது கட்டமைக்கும் தமிழ்க்கள வரைவிலக்கணமும், அது நிற்கும் தமிழ்த்தளப் பரிமாணங்களும் என்பதைத் தான் அறியாததுபோல் பாசாங்கு செய்வது ஆச்சரியமான விஷயம். அது பற்றியும் நாம் பரிசீலிக்கிறோம்.

"நமது இலட்சியவாதிகளும் இலக்கியவாதிகளும் தாங்கள் பயன்படுத்தும் கோவணத்திலிருந்து செல்போன் வரை அனைத்துப் பொருள்களையும் லாபம் கொடுத்தே வாங்குகின்றனர். நல்ல நூல்களை மட்டும் லாபம் கொடுத்து வாங்க என்ன தடை?" என்று கேட்டு, தாங்கள் நடத்தும் வாசகர் சுரண்டலை நியாயப்படுத்தும் அகந்தைதான் காலச்சுவடு கண்ணனின் ஆளுமை எனில், 'காலச்சுவடு நிறுவனம் தன் வெளியீடுகளின் தனி நபர் விற்பனைக்கான உலகளாவிய வணிகச் சந்தையைக் கட்டமைக்கத் திட்டமிட்டு, தாகத்துக்கு நீர் போல நூல்களை வாங்கும் வேட்கையும் செலவிடும் மனமும் உள்ள புலம் பெயர் ஈழத்தவர்களை உலகப் பிரதிநிதிகளாகவும், சுந்தரராமசாமியின் மையம் வளர்க்கத் தோதாக உள்ளூர்ப் பிரதிநிதிகளையும் அழைத்து இலக்கியத்தின் பேரால் 'தமிழ் இனி 2000' என்னும் கும்பமேளா நடத்துகிறது' என்று சொல்வது நியாயமான விமர்சனம் அல்லவா.

இதில் இன்னும் சில கேள்விகளும் எழுகின்றன: காலச்சுவடு

படிப்பகம்

www.padippakam.com



மௌனப்படுத்தும் கேள்விகள். தன் வியாபாரத்துக்காகப் புலம் பெயர் ஈழச் சந்தையை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளும் இவர்கள் ஈழப்பிரச்சினையில் மௌனம் காப்பவர்கள். இவர்களைப் போன்ற ஒற்றைத் தேசியவாதிகளின் மௌனம் என்பது நியாயத்திற்கெதிரான வன்முறையின் மாற்று வடிவம். அவலமே வாழ்வாகிப்போன ஈழத்தமிழர்கள்பால் இவர்கள் மொழியும் பரிவுக்குப் பின்னே ஒளிந்திருப்பது விடுதலைப் புலிகள் மேல் இவர்களுக்குள்ள தர்க்கங்களுக்கப்பாற்பட்ட தீண்டாமையே தவிர தமிழர்களை நர வேட்டையாடும் சிங்களப் படைமேல் தொடுக்கவேண்டிய கண்டனக் கணைகள் அல்ல. புலிகள் பற்றிய இவர்கள் அபிப்பிராயத்திற்கும் 'சோ' ராமசாமி, சுப்பிரமணியன்சாமி ஆகியோரின் அபிப்பிராயத்திற்கும் ஒரு வேறுபாடுமில்லை. மனித மதிப்பீடுகளின் சிதைவுகளும் உருக்குலைவுகளும், அமைதிக் காலங்களின் நியாயப்பாட்டிற் கடங்காத ரத்தக் குழம்பாக மண்டிக் குமைந்தாலும், எதிரிகளுக்குப் புரியும் மொழியில் பதில் சொல்வதைத் தவிர ஈழப் புலிகளுக்கு வேறென்ன வழி திறக்கப்பட்டிருக்கிறது என்னும் கேள்வியின் மேல் கொஞ்சமும் அக்கறையற்றவர்கள்.

குண்டூசி குத்தி இரத்தம் கசிந்தாலே குலை நடுங்கிப் போகும் இந்தியத் தமிழனுக்கும் ஈழப் புலிகள் பற்றி அபிப்பிராயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவை அறமதிப்பீடுகளா, அழி மதிப்பீடுகளா என்பதை அவர்கள் அரசியலே நிர்ணயிக்கிறது. மனித விடுதலை பிழைப்புவாத அரசியலால் அர்த்தம் பெறுவதில்லை.

விடுதலைப் புலிகள் எதிர்கொள்ளும் களப் போரில் மிதிப்பட்டுதிரும் மனிதக் குருத்துகளுக்காகவும், தடைபட்டழியும் கருத்துரிமைகளுக்காகவும் கசிந்துருகும் சேரன்கள் உண்டு. 'ஈழப் போராட்டத்தின் இறுதி இலக்கு வெள்ளாள சாம்ராஜ்யத்தைக் கட்டியெழுப்புவதே' என்று பின்நவீனத்துவம் பேசும் பன்மைத்துவவாதிகள் உண்டு. விடுதலைப் புலிகளை விட்டு விலக இவை காரணங்களாகலாமே தவிர, போரை முடிவுக்குக் கொண்டுவரவும் சமத்துவ சகவாழ்வை உறுதிப்படுத்தவும் இவர்களால் முன்வைக்க முடிந்த மரியாதைக்குரிய மாற்றுத்தீர்வு ஏதுமில்லை. தமிழின அழித்தொழிப்பை நுரையீரல் மூச்சோட்டமாகக் கொண்ட தேரவாதத் துறவிகளால் பேணப்படும் சிங்களப் பேரினவாதத்தை ஜனநாயகத் திறப்பின் வழியே எதிர்கொள்ளவா? அல்லது சரணடைந்து அடங்கிப் போகவா? இரண்டுமே அடிமைப்பட ஒப்புக்கொள்ளும் ஒருமுனைத் தீர்வுதான் என்பதைக் கடந்த காலம் ஐயத்துக்கிடமின்றி மெய்ப்பித்துள்ளது. இன்றுள்ள நெருக்கடியில் அடிமைப்பட்டாலும் ஆள்காட்டியாகவும் கங்காணியாகவும் தலையெடுத்துப்

படிப்பகம்

www.padippakam.com



பிழைத்துக்கொள்ள நினைப்பவனே போருக்குத் தீர்வறியாத மனிதாபிமானியாயிருக்கக் கூடும்.

விடுதலைப் புலிகளின் எதிராளிகளில் சேரன்கள் மரபுவாதிகளாய்ச் செலாவணியாகிறவர்கள். பன்மைத்துவவாதிகள் அழிமரபு பேசி உதிரிநிலை ஏற்பவர்கள். ஈழப் பிரச்சினையை விடுதலைப் புலிகளோடு சேர்த்து மௌனத்தில் புதைத்துவிட்டு இலக்கியத் தூய்மைவாதத்துக்கேற்ற மனிதாபிமானக் கசிந்துருகலோடு காலச்சுவடுவின் வியாபார விரிவாக்கம் சேரன்களால்தான் மெய்ப்பட முடியும். தமிழ் இனி 2000 அந்த நியாயத்தை மெய்ப்படுத்தியது.

ஈழத்தை விடுங்கள். இந்த மண்ணில் தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ் நிலம் என்பதான தன்னுணர்வு அம்சங்களில் உள்ளார்ந்த அசூயையோடான அவர்களின் மௌன நிலைப்பாட்டுக்குக் காரணம் வரலாற்று மரபிலான தமிழினத்தோடு அவர்கள் வழிவழியாகப் பேணும் அந்நியமாதலே என்பதை யாரும் மறுக்க முடியாது.

இதை இன்னும் எளிமைப்படுத்திச் சொல்வதானால் 'சேர சோழ பாண்டியர்கள் எங்கள் மூதாதையர்கள்' என்று சொல்லிக்கொள்ள முடியாத 'தமிழர்கள்' பேணும் அந்நியமாதல் இது. இதிலுள்ள நல்ல அம்சம் இந்த மூதாதையர் விஷயத்தில் திராவிட மொழிக்காரர்கள் அனைவரும்– அதிலும் குறிப்பாக சேர மன்னர்கள் வழியாகக் கேரளர்களும், தெலுங்குச் சோழர்கள் வழியாக ஆந்திரர்களும் பேதமின்றி ஒருங்கிணைகின்றனர் என்பதுதான்.

இந்த அந்நியமாதலைக் காலச்சுவடு மட்டும்தான் பேணுகிறது என்பதல்ல. (உற்றறிந்தாலன்றி வெளிப்படாதவாறு மிகுந்த தன்னடக்கத்தோடு பேணுவது காலச்சுவடுதான் என்று சொல்லலாம்.) சங்க இலக்கிய மரபையோ, சமயக் களனற்ற அதற்கும் முந்தைய பண்பையோ அறிந்தவராகவோ, தொடர்ந்தவராகவோ, அவற்றிலிருந்து புதுமுளையாகத் தழைத்தவராகவோ பசுவய்யா வெளிப்படவில்லை என்பதை ஒரு தற்செயலாகவே எடுத்துக்கொண்டாலும் கூட, அவர் மரபின் வேர் அதனிலும் ஆழமான அம்சம் )

அந்நியமாதல் இனப்போக்கிலானது எனும் செழுமையுறும் மனோபாவம் பேணும் நூலோர் பலரும் இந்தக் குழுவினர்தான். இதிலுள்ள இன்னொரு கவனிக்கத்தக்க அம்சம், இதன் காரணமாகவோ என்னவோ இவர்கள் தங்களைத் தவிர்க்கமுடியாதவர்கள் போலக் கட்டமைத்துக் கொள்வதை வாழ்வாதாரமாகத் தேற்றுகிறவர்கள். அரசியலிலோ இலக்கியத்துறையிலோ வலிமைமிக்க தனியர்களாகத் தங்களைத் தக்கவைத்துக்கொள்ள முயல்கிறவர்கள். இவர்கள் நடுவே காலச்சுவடு ஒரு நிறுவனமாகி, தனக்கான மடாலயப் பண்புகளைச் சேமிந்துக்கொண்டிருப்பதால் கூடுதல் கவனத்தைப் பெறுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



இந்த நிலைப்பாடு காரணமாக அரசியலில் இவர்கள் ஒற்றைத் தேசியவாதிகளாகவும், படைப்புலகில் இன, மொழி, நிலப் பிரக்ஞைகள் தவிர்த்த இலக்கியத் தூய்மைவாதிகளாகவும், வாழ்வியலில் ஒழுக்கவாதமும் தர்ம நியாயமும் பிறப்பிக்கும் மேட்டிமையாளர்களாகவும் தங்களை அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள். இலக்கியம் மக்களுக்கானது, மக்களைப் பற்றியது என்பதை மௌனப் படுத்துவதன் மூலம் அது சில ஆயிரம் பேர்களடங்கிய மேன்மக்களுக்கானது என வலியுறுத்துபவர்கள்.

உண்மையில் இப்பண்புகள் அவர்களை வெகுமக்களிடமிருந்து தனிமைப்படுத்திக்கொள்ளக் கிடைத்த வழிமுறைகள். உதாரணமாக, எழுத்துப் பரவலில் அவர்கள் எப்போதும் வெகுமக்களைக் கருத்தில் கொள்வதோ பொருட்படுத்துவதோ இல்லை. காலச்சுவடும் அதற்கு விதிவிலக்கில்லை. அது தன் நூல்களுக்கு ஆகப் பெரிய விலையை வைக்கிறது. சாதாரண வாசகனுக்குக் கட்டுப்படியாகாத விலை அது. (இப்போது வேறுபலரும் அதற்கு இணையாக அல்லது மேலாகவே விலையிடுகிறார்கள்தாம். ஆனால் அவர்கள் 'போல'ச் செய்கிறவர்கள். முதலில் தொடங்குகிறவர்களுக்குத்தான் அதற்கான நோக்கம், விளக்கம், நியாயம் இருந்திருக்கும். போலிகளுக்கு அதன் பிரக்ஞை முக்கியமல்ல. ஆய்வு நிறுவனங்கள், தன்னார்வக் குழுக்கள் குறிக்கும் விலையேற்றம் வேறுவகையானவை.) அதாவது, காலச்சுவடு தன்னியல்பாக ஒரு மேட்டிமை வட்டத்தை உருவாக்கிக்கொள்கிறது. அசாதாரணத் தன்மையைக் கற்பித்துக் கொள்ளும் வட்டம். இதனைச் சாதிவட்டமாகப் பார்க்கத் தேவையில்லை. ஆனால் மறுசீரமைப்பு செய்யப்பட்ட புதிய சாதிவட்டமாகப் பார்த்தாலும் தப்பில்லை. தாழ்த்தப்பட்ட, விளிம்புநிலைச் சமூகங்களைச் சேர்ந்த படித்த, வேலை பார்க்கிற, சம்பாதிக்கிற தனிமவாதிகள் உடனடியாகத் தங்களை உயரமாகக் காட்டிக்கொள்வதற்காக சமஸ்கிருதக் கலாச்சாரத்தையே மேவுகின்றனர்- ஒற்றைத் தேசிய முழக்கத்தோடு சமூகம் தவிர்க்கும் கலாச்சாரம். காலச்சுவடுவின் உற்பத்திப் பண்டத்தை அவர்களும் வாங்கக்கூடும். மேட்டிமைச் சின்னமாகப் பாவிக்கவும் கூடும். மற்றபடி, காலச்சுவடு லாபம் கொடுத்து வாங்க வக்கில்லாதவர்கள் பற்றி அக்கறைப் படுவதில்லை – குறைந்தபட்சம் பொதுநூலகங்களுக்குக்கூட அது புத்தகம் வழங்க முயல்வதில்லை.

இலக்கியத் தூய்மைவாதத்தின் இன்னொரு வெட்டுமுகம் இது.

தமிழில்தான் இப்படியொரு விரிசல். சிவராம கரந்த் என்னும் கன்னடப் பார்ப்பனர் தலித் குடியிருப்பில் தங்கி, அவர்களது வாழ்வின் பண்பாட்டுச் சாரத்தைத் தன்னுணர்வாக உள்வாங்கிக் கொண்டு ஒரு 'சோமனதுடி' படைக்க முடிந்தது. ஆனால் தமி

படிப்பகம்

www.padippakam.com



மில் இந்திராபார்த்தசாரதியால் அப்பட்டமான சாதியச் சீரழிவால் நிகழ்த்தப்பட்ட கோரமான வெண்மணி சம்பவத்தை உளவியல் சரடுகளாகத் திரித்துத்தான் 'குருதிப்புனல்' எழுத முடிந்தது. மாறிய வாழ்தளத்தை உள்வாங்கிக்கொண்டு நேர்மையோடும் கரிசனத்தோடும் குறைந்தபட்ச மொழிப் பிறழ்வோடு வெற்றிகரமாக இயங்கும் ராஜம் கிருஷ்ணன்கள் மிக அபூர்வம். அவர்களும்கூட எழுத்தில் தலித்தாய் இருந்து பார்க்கத் துணிவதில்லை என்பதே இதுவரையான நிலைமை.

மொகஞ்சதாரோ-ஹரப்பாவில் அகழ்ந்தறியப்பட்ட சிந்துவெளி நாகரிகச் சிதைவுகளைக் கண்ட பின்னும் இந்தியாவை ஆரியபூமி என்றும், கால்டுவெல் எழுதிய 'திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணத்தை' மறுத்தொதுக்கத் துளியேனும் வழியில்லாதபோதும் தமிழையும் சேர்த்து இந்திய மொழிகள் அனைத்துக்கும் சமஸ்கிருதமே மூலம் என்றும், பூலே, அம்பேத்கர், பெரியார் எனும் சமூக சிந்தனையாளர்களின் மறுமலர்ச்சி சகாப்தத்திற்கான தேவை அறிந்த பின்னும் இந்தியா முழுவதும் சமஸ்கிருதக் கலாச்சாரத்தால் கட்டுறுதி செய்யப்பட்ட ஒற்றைத் தேசம் என்றும் கர்வம் கொள்கிற மாயப்பொய் பல கூட்டும் மாய்மாலக்கும்பலைச் சேர்ந்த மமதையாளர்களுக்கு இந்தியாவுக்குள்ளே அங்கங்கே பொங்கித்திமிறும் இனவழி எழுச்சிகள் யாவும் பயங்கரவாதங்களாகவும், இந்தியாவுக்கு வெளியே அனைத்து அண்டை நாடுகளையும் பகைத்து பதற்றப்படுத்தும் இந்திய பேட்டை ரவுடித்தனம் அதன் மகத்துவத்தின் வெளிப்பாடாகவும் தெரியும். இந்திய வன்முறைத் தேசியத்தோடு சாக்கடையும் நாற்றமும்போல அப்படியொரு இணக்கம் அதற்கு அந்தக் கும்பலைச் சேர்ந்த ஒருவனுக்கு "நான் தமிழன் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படுகிறேன். தமிழ் பேசும் இந்தியன் என்று சொல்லிக் கொள்வதையே பெருமையாகக் கருதுகிறேன்,' என்று அப்பட்டமாகப் பறைசாற்றப் பிடிக்கும் அந்தப் பிரகிருதியோடு தமிழுக்கும் தமிழனுக்கும் தனித்த மாண்புகள் உண்டு என, தானறியா அடிமனத் தடங்களால் இயக்கப்படுகிறவன் காரணங்கள் தெரிந்தோ தெரியாமலோ, உள்ளூரவோ வெளிப்படையாகவோ பிளவுப்பட்டே நிற்பான். களப்பிரர் காலந்தொட்டு இன்றுவரை வெவ்வேறு காலகட்டங்களில் பல்வேறு நிலக்கொள்ளையரால் அடிமைப்படுத்தப்பட்டு, ஆட்பட்டு நின்றாலும் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகத் தன் மொழியினாலேயே வழி நடத்தப் படுகிறவனின் ஊனுயிர்க்கும் வெளிப்பாடு அது. காலச்சுவடுச்கும் அதன் முரண்பாட்டாளர்களுக்கும் இடையே நிலவுவதும் இதைச் சார்ந்த ஒரு உளவியல் சிக்கலும் பண்பியல் பிளவும்தான்.

—இதன் தொடர்ச்சி 44ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# ஓர் உரையாடல்

பெர்தோல்ட் பிரெக்ச்ட்

(பெர்தோல்ட் பிரெக்ச்ட் எழுதிய 'கெலிலியோ கெலிலி' என்னும் நாடகத்தில் வரும் காட்சி இது. புதிய கண்டுபிடிப்புகளால் ஏற்படுகின்ற சமூக மாற்றங்களுக்கெதிராக மதம் எவ்வாறு மௌடிகக் கோட்டை கட்டுகிறது என்பதைத் தெளிவுபடுத்தும் காட்சி.)

## காட்சி

இருந்தான் கெலிலியோ மனது கலங்கிட
வந்தான் இளைய துறவியும் கலந்து பேசிட
இளந்துறவி பிறந்ததோ எளிய குடும்பம்
உரையாடினர் இருவரும் அறிவியல் கதம்பம்

ரோம் நகரில் ஃப்ளாரென்சின் அரசில்
தூதுவரின் அரண்மனை

('கொலேஜியம் ரோமனம்' – அவைக் கூட்டத்திற்குப் பிறகு திருச்சபை வானவியல் அறிஞர்களின் தீர்மானத்தைக் கெலிலியோ காதில் முணுமுணுத்த இளம்பாதிரி உரையாட, கெலிலியோ கேட்டுக்கொண்டிருக்கிறான்.)

கெலிலி: சொல்லு... சொல்லு... நீ இந்த அங்கிய அணிஞ்சுகிட்டிருக்கிறதுனால உன் விருப்பம்போல எதுவேணுமானாலும் சொல்ல உனக்கு உரிமையிருக்கு.

இளம் துறவி: நானும் கணிதவியலைக் கற்றிருக்கிறேன் கெலிலியோ அவர்களே!

கெலிலி: அது பயன்பட்டாலும் பயன்படும். இரண்டும் இரண்டும் சில நேரத்துல நான்குதான்னு நீ ஒத்துக்கிறதுக்கு அது உனக்கு உதவியாக இருந்தாலும் இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



இ.துறவி: கெலிலியோ அவர்களே! கடந்த மூணுநாளா என்னால சரியாத் தூங்கவே முடியல. ஒரு பக்கம் திருச்சபை கோபர்நிகஸை மறுத்து வெளியிட்ட தீர்ப்பை படிக்கிறேன்; மறுபக்கம் வியாழனைச் சுற்றி வரும் துணைக் கோள்களையும் கண்ணால பார்க்கிறேன். எதை ஒத்துக்கிறதுன்னே எனக்குப் புரியல. அதனால தான் பூசையை விரைவா முடிச்சிட்டு உங்களோட பேசணும்ற முடிவோடு வந்திருக்கிறேன்.

**கெலிலி:** வியாழன் கோளுக்கு துணைக்கோள்களே இல்லைன்னு பேசுறதுக்கா?

**இ.துறவி:** இல்லையில்லை. திருச்சபையோட தீர்ப்பின் ஆழமான அறிவுத்திறனை என்னால புரிஞ்சுக்க முடியுது! கட்டுப்பாடில்லாத ஆய்வுகளால் மனிதக் குலத்துக்கு ஏற்படப்போகிற ஆபத்தை அது வெளிப்படுத்தியிருக்கு. அதனால, வானசாஸ்திர ஆய்வை கைவிட்டுடுறதுன்னு நான் தீர்மானிச்சிருக்கிறேன். வான சாஸ்திரத்தைப் படிச்ச நானே, அந்தத் துறையில இனி தொடர்ந்து அக்கறை காட்டவேண்டாம்ன்னு முடிவெடுத்ததுக்கான காரணங்களையும் உங்களுக்குத் தெரியப்படுத்தணும்ன்னு விரும்பினேன்.

**கெலிலி:** அந்தக் காரணங்கள் என்னென்னு எனக்கே நல்லாத் தெரியுமே.

**இ.துறவி:** உங்க விரக்திக்குக் காரணம் எனக்குப் புரியுது! எதையும் செய்யிறதுக்காக திருச்சபை தன் கையில வெச்சிருக்கிற சில அளவுக்கு மீறின அதிகாரங்களைப் பற்றித்தானே நீங்க கவலைப் படறீங்க?

**கெலிலி:** அவர்கள் கையிலிருக்கிறது அதிகாரங்களில்லை; அறிவை அடக்கியாள்வதற்கான ஆயுதங்கள்னு சொல்லு.

**இ.துறவி:** அப்படியில்ல... அதுக்கு வேறு நோக்கங்களும் இருக்கு. அதுக்கு முன்னால என்னைப் பத்தி ரெண்டு வார்த்தை... நான் கம்பான்யாவில இருக்கிற விவசாயிங்க குடும்பத்துல பொறந்து வளர்ந்தவன். பாவம்... அவங்கெல்லாம் ரொம்ப எளிமையான ஜனங்க. ஆலிவ் மரங்களை வளர்க்கிறத பத்தி அவங்களுக்கு நல்லா தெரியும். வேற எதுவும் தெரியாது. நான் இங்க வெள்ளி கிரகத்தோட வளர்ச்சி– தேய்வுகளை பார்த்துக்கிட்டிருக்கும் போது என் கண்முன்னால என் அப்பாவும் அம்மாவும் தங்கையும் நெருப்பைச் சுத்தி உக்காந்துகிட்டு பழயதை சாப்பிடறதுதான் தெரியுது. அவர்கள் தலைக்கு மேல நூத்துக்கணக்கான வருசத்து பொகை படிஞ்சு கருப்பாயிருக்கிற வீட்டுக்கூரை, வேலை செய்து செய்து

படிப்பகம்

www.padippakam.com



காப்புக் காய்ச்சுப் போயிருக்கும் அப்பா, அம்மாவோட வயசான கைங்க, தங்கை கையிலிருக்கிற சின்னஞ்சிறு அகப்பை, எல்லாத் தையும் என்னால தெளிவா பாக்க முடியுது. அவங்க பரம ஏழைங் கதான். ஆனா அந்த ஏழ்மையான வாழ்க்கையிலும் ஏதோ ஒரு ஒழுங்கு அடங்கியிருக்கு. தரையைத் தேச்சுக் கழுவறதுலேருந்து நெலத்தை உழறது, அந்தந்த பருவத்துக்கு ஏத்த மாதிரி ஆலிவ் மரங்களை பராமரிக்கிறது, கந்தாயம் கட்டறதுவரை பலவகையான கடமைகளை செய்துக்கிட்டேயிருக்கிறாங்க. அவங்களுக்கு வரும் தொல்லைகளிலேயும் ஒரு ஒழுங்குமுறை இருக்கு. எங்க அப்பா வோட முதுகு ஒரே நாள்லே கூன் விழுந்து வளைஞ்சுபோயிடலே. ஆலிவ் தோப்புல வேலை செய்யச் செய்ய கொஞ்சங் கொஞ்சமா வளைஞ்சுக்கிட்டே வந்தது. அதேமாதிரி எங்கம்மாவும் அடுத்த டுத்து குழந்தைகளை பெத்தெடுத்து அவங்களுடைய பெண்மையும் தாய்மையும் வறண்டே போயிடிச்சி. இதெல்லாமே ஒண்ணு பின் னால ஒண்ணா இடைவெளிவிட்டு நடந்துகிட்டிருந்தது. இவ்வள வெல்லாம் இருந்தாலும், கனத்த மூங்கில் கூடைகளை சுமந்துகிட்டு வேர்வை வடிய கல்லு பதிச்ச பாதையில நடந்து போறதுக்கும், கொழந்தைகளை பெற்றெடுக்கிறதுக்கும் ஏன், சாப்பிடறதுக்கும் கூட தேவையான சக்தி அவங்களுக்கு எங்கேயிருந்து வருது? தங் களோட மண்ணையும் ஒவ்வொரு வருசமும் புதுசுபுதுசா துளிர்க் கிற மரங்களையும் பார்க்கிறதினால; அவங்களோட கிராமத்து சின்ன ஆலயத்துக்குப் போறதினால; ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழ மையும் தேவாலயத்துல படிக்கிற பைபிள் வாசகங்களைக் கேட்கிற தினால; நம்மையும் மீறின ஏதோவொரு மகாசக்தி நிலையா ஒழுங்கு முறையோட எல்லாத்தையும் நடத்திக்கிட்டு வருதுன்ற நம்பிக்கை உணர்வு ஏற்படுது. அந்த உணர்விலிருந்துதான் அவங்களுக்கு அந்த சக்தி வருது. அந்த மகாசக்தியான கடவுளின் பார்வை எப்பவும் தங்கள் மேல பட்டுகிட்டே இருக்குன்னு அவங்க உறு தியா நம்பறாங்க; நம்பவைக்கப்பட்டிருக்காங்க! தங்களைச் சுத்தி இப்படி அமைக்கப்பட்டிருக்கிற எல்லாமே ஒரு நாடகம். சின் னதோ பெரிசோ தங்களுக்குன்னு தரப்பட்டுள்ள பாத்திரங்களை மனம் கோணாம ஏத்துக்கிட்டு சரிவர நிறைவேத்த வேண்டியதும் நிரூபிக்க வேண்டியதும்தான் தங்களோட கடமைன்னு நம்பறாங்க. இதுக்கு எதிரா இந்த பிரபஞ்சத்திலிருக்கிற கணக்கில்லா நட்சத்தி ரங்கள்ல ஒண்ணா, ஒரு இரண்டாந்தர கிரகமாயிருக்கிற சூரிய னைச் சுத்தி வந்து, வெட்ட வெளியில இடைவிடாம சுழன்றுகிட்டி ருக்கிற பூமின்ற ஒரு சாதாரண துண்டுப்பாறையின் மேலதான் நீங்க வாழ்ந்துகிட்டிருக்கிறீங்கன்னு நான் சொன்னா, அவங்க என்ன நினைப்பாங்க? தங்களோட ஏழ்மையையும் துயரங்களை யும் பொறுமையா சகிச்சுக்கிட்டிருக்கிறது தேவைதானா? இந்த

படிப்பகம்

www.padippakam.com



வாழ்க்கைக்கு எந்த மதிப்பும் இல்லையான்ற கேள்வி அவங்களுக்குள்ள எழாதா? எந்தப் புனிதமான பைபிள் அவங்களோட கடுமையான உழைப்பு, சகிப்புத்தன்மை, பசி, நோவு, அடங்கிப் போதல் இதெல்லாம் இந்த உலக வாழ்க்கையில் தவிர்க்க முடியாதது ன்னு விளக்கம் தந்து நியாயப்படுத்துதோ, அந்த பைபிள்ல இருக்கிறதெல்லாம் அபத்தம்ன்னு சொன்னா அவங்க மனம் என்ன பாடுபடும்? இல்லயில்ல... அந்த அதிர்ச்சியை அவங்களால தாங்கிக்க முடியாது. நடுங்குகிற அவங்களோட கையிலிருக்கிற அசப்பைங்க நழுவி கீழ விழுறதையும் இதுவரை ஏமாற்றப்பட்டதா, ஏதோ பெரிய மோசடி நடந்துட்டதா அவங்க உணர்றதையும் என்னால பாக்கமுடியுது! "அப்படின்னா நம்மமேல கருணைப் பார்வை பொழிஞ்சி, காப்பாத்திக்கிட்டிருந்த கடவுள்ன்ற ஒருத்தர் இல்லவேயில்லையா? எதுமே தெரியாத வயசாகிப்போன, உழைச்சு உழைச்சு ஓய்ஞ்சிப்போயிருக்கிற நம்மை நாமேதான் காப்பாத்திக்கணுமா? தன்னை எதுவுமே சுத்திவராத, தானும் சுதந்திரமாக இல்லாத, தொல்லைமட்டுமே நிறைஞ்சிருக்கிற, அல்பமான இந்த பூமின்ற கிரகத்துமேல நமக்குன்னு ஒரு வாழ்க்கைய யாருமே நிர்ணயிக்கலியா? நாம படற கஷ்டங்களுக்கு அர்த்தமே இல்லையா? பட்டினின்னா வெறும் சாப்பிடாம இருக்கிறதுதானா? அது நம்ம மன வலிமையைப் பரிசீலிக்கிற சோதனை இல்லையா? உழைப்புன்னா உடம்பை வளைச்சு உழைக்கிறதுதானா? இதுக்கு வேற எந்த மதிப்பும் இல்லையா?" அப்படின்னு அவங்க தவிச்சுப் போயிடமாட்டாங்களா? இந்தக் கண்ணோட்டத்துல பார்த்தா மடாலயத்தோட தீர்மானத்துல ஆத்மாவை அமைதிப்படுத்தும் அளவிட முடியாத கருணை, உண்மையான தாய்ப்பாசம் எல்லாம் இருக்குன்னு உங்களுக்குத் தோணலையா?

**கெலிலி:** கருணை! தாய்ப்பாசம்! நீ என்ன சொல்லவறேன்னா– "இந்த வாழ்க்கையில் எதுவுமே இல்லை. திராட்சைத் தோட்டம் வறண்டு போயிருக்கு; அவங்க உதடுகளும் காய்ஞ்சு போயிருக்கு. அதனால் மதப்போர்வைக்குள்ள தங்களை மறந்து கிடக்கட்டும்"ன்னு சொல்றே! இந்த வாழ்க்கையில் ஏன் எதுவுமே இல்லாம போயிடிச்சு? காய்ச்சுக் குலுங்கற திராட்சைத் தோட்டங்கள்... விளைஞ்சுக் கொழிக்கிற சோளவயலுங்க... இருந்தும், இந்த நாட்டுல நம்ம ஜனங்க பட்டும் உழைச்சு உழைச்சு சாவறதே வாழ்க்கையாகவும் உழைச்சதுக்கு ஏத்த பலன் கிடைக்காம வாடுறதே விதியாகவும் இருக்குதே அது ஏன்? கருணாமூர்த்தி ஏசுவோட பிரதிநிதிங்க இப்போ ஸ்பெயினிலும், ஜெர்மனியிலும் நடத்திக்கிட்டிருக்கிற போருக்காக உங்க கம்பானியா பகுதி விவசாயிங்க தங்களோட ரத்தத்த வேர்வையா சிந்தி வரியா கொடுக்க

படிப்பகம்

www.padippakam.com



வேண்டியிருக்கே? இந்த பூமியை பிரபஞ்சத்தின் மையப் பகுதியில் கொண்டுபோய் வச்சிருக்காங்களே ஏன்? போப்பாண்டவரோட சிம்மாசனம் உலகத்தின் மையத்துல இருக்கிறதாக் காட்டணும். அதுக்காகத்தானே? ஆமாம்– நீ சொல்றதும் சரிதான். இதுக்கும் கிரகங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லைதான். ஆனா இதுக்கும் கம்பானியா விவசாயிகளுக்கும் சம்பந்தமிருக்கு! 'முதுமையின் பெருமை பழங்கருத்துகளின் ஆழம்.' இதையெல்லாம் தயவு செய்து என் முன்னால பேசாதே! முத்துச்சிப்பிக்குள் முத்து எப்படி உருவாகுதுன்னு உனக்குத் தெரியுமா? அந்தப் பாவப்பட்ட உயிரி நோய் வந்து சாகும் நிலையிலிருக்கும்போது வெளியிலிருந்து மணல் துகள்கள் போல எதையாவது எடுத்துக்கிட்டு அதைச் சுத்தி தன் உமிழ்நீரைச் சுரக்குது. அந்த உருண்டைதான் முத்தா மாறுது. இது முடியறதுக்குள்ள அந்த உயிரி செத்தேபோயிருக்கும். முத்து இல்லேன்னா நாசமா போகட்டுமே; அந்த உயிரி உயிரோடு நலமா இருக்கிறதுதான் நமக்கு முக்கியம்ன்னு எனக்குத் தோணுது. வறுமையில் வாடினாதான் நல்ல குணங்கள் நிலைக்கும்ன்னு சொல்றது சரியில்ல நண்பரே! உங்க ஜனங்க நல்ல நெலைமையில சுகமா இருந்தாலும் நல்ல தன்மைகளை வளப்படுத்துவாங்க. இப்போ என்ன ஆயிருக்கு! செத்துச் சுண்ணாம்பாகியிருக்கிற ஜனங்களோட வாழ்க்கையிலேருந்து சாரம் கொறஞ்சிப்போன வறண்ட பூமியிலேருந்து அவங்களோட நல்ல தன்மை வந்திருக்குன்னு சொல்றீங்க. அய்யா!...இந்த ஜனங்கள அடிமைப்படுத்தி வச்சிருக்கிற மடத்தனமான தெய்வீக சக்திகளைவிட நான் உருவாக்கியிருக்கிற நீர் இறைக்கும் கருவி எவ்வளவோ அற்புதங்களை சாதிக்குது. ''பலம் நிறைந்தவராகுங்கள்! உங்கள் வம்சம் பெருகட்டும்'' என்று பைபிள் சொல்லுது. ஏன்னா உங்க பூமி பாழாப் போயிருக்கு. யுத்தங்க உங்கள அழிச்சுகிட்டிருக்கு. இந்த நிலைமையில நான் உங்க ஜனங்ககிட்ட பொய் சொல்லட்டுமா!

**துறவி:** (தாக்குண்டவனாக) நாங்க வாய்மூடி மௌனமா இருக்கிறதுக்கு மேலான காரணம் இருக்கு. எங்க துர்ப்பாக்கியசாலிகளான ஜனங்களோட மன அமைதிக்காகத்தான் நாங்க பேசாம இருக்கிறோம்.

**கெலிலி:** கார்டினல் பெலார்மினோட வண்டியோட்டி இன்னைக்குக் காலையில ஒரு அருமையான செல்லினி கடியாரத்தைக் குடுத்துட்டுப் போனான். அதை உனக்குக் காட்டட்டுமா? என் அருமை நண்பரே! அது உங்க ஜனங்களோட மனச் சமாதானத்தைக் குலைக்காம இருக்கிறதுக்கு, மேலிடம் எனக்குக் கொடுக்கிற பரிசு. இன்னொரு பரிசு என்ன தெரியுமா? சாட்சாத் பகவந்த

படிப்பகம்

www.padippakam.com



னின் சாயலிலேயே படைக்கப்பட்டிருக்கிறதாகச் சொல்லப்படுகிற, உங்க அப்பா அம்மாவைப் போன்ற ஏழை ஜனங்க, நெத்தி வேர்வைய சிந்தி தயாரிச்சிருக்கும் மதுரசம்! இதைப்பத்தியெல்லாம் பேசாம நான் என் வாயை மூடிக்கிட்டிருக்க ஒத்துக்கிட்டா அது மிருகத்தனமான நோக்கங்களுக்காகத்தான் இருக்கும்; சுகமான வாழ்க்கைக்காகவும் அடக்குமுறைக்கு அடங்கிய சுதந்திரத்துக்காவும்தான் இருக்கமுடியும்.

இ.துறவி: கெலிலி ஐயா! நான் ஒரு மதகுரு!

**கெலிலி:** நீ ஒரு இயற்பியல் விஞ்ஞானியும்கூட. வெள்ளி கிரகத்தின் வளர்ச்சி-தேய்வுகளை நீ பார்த்திருக்கிறே. இப்போ அப்படியே வெளிய பாரு (ஜன்னல் பக்கம் கை காட்டுகிறான்.) அந்த புன்னை மரத்துப் பக்கத்துல நீரூற்றுக்கு மேல இருக்கும் பிரியாபஸ் தேவனுடைய சிலை தெரியுதா? அவன் தோட்டங்களின் கடவுள்; பறவைகளின் பகவான்; ஏன் திருடர்களின் குலதெய்வமும்கூட. விகாரமானவன்; அவனுக்கு 2000 வருச கரடுமுரடான சுபாவம். அவன்கூட இவ்வளவு பொய் சொல்லல. அதிருக்கட்டும் விடு. நானும் திருச்சபையின் பிள்ளைகள்ல ஒருத்தன்தான். நீ ஹொரெஸ் கவியின் எட்டாவது எள்ளல்பாடலை படிச்சிருக்கியா? நான் இப்போ அதை மறுபடியும் படிச்சிக்கிட்டிருக்கிறேன். அதைப் படிக்கும்போது ஒரு வகையான தெளிவு பிறக்குது. (அங்கிருந்தஒரு சிறிய புத்தகத்தை எடுத்து) பிரியாபஸின் வாயால் கவி இதைச் சொல்ல வைத்திருக்கிறார். எஸ்க்விலைன் பூங்காவிலிருந்த பிரியாபஸின் சிலை இப்படி சொல்கிறது:

''அத்தியின் அடிமரமாய் உதவாத கட்டையாய்
அன்றிருந்தேன் நான்; தச்சனவன் குழம்பினான்
இருக்கையாய் செதுக்கவா, பிரியாபஸ் சிலையாகவா என
இறுதியில் செதுக்கினான் கடவுளாய் எனை''

இந்தப் பாடல்ல 'இருக்கை'ன்ற சொல்லை எடுத்துட்டு 'மேசை'ன்ற சொல்லை போடுன்னு சொல்லியிருந்தா ஹொரெஸ் போட்டிருப்பானா? எனக்கும் அப்படித்தானே தம்பி? என்னுடைய பிரபஞ்சப் பெருவெளி கோட்பாட்டுக்குள்ள, வளர்ச்சி-தேய்வு இல்லாத ஒரு வெள்ளிக் கோளைக் கொண்டுவந்து பொருத்தினா என்னோட அழகியல் உணர்வை புண்படுத்துகிற மாதிரிதானே? நம் கண்முன்னால வானவெளியில சுழன்றுகிட்டிருக்கிற கோள்களின் மாபெரும் இயக்க நுட்பங்களை புரிஞ்சிக்க அனுமதிக்கலேன்னா, ஆத்துலேருந்து நீரிறைக்கிற எந்திரத்தை உருவாக்குவதும் முடியாதுதான்.

படிப்பகம்

www.padippakam.com



'வத்திகன் திருச்சபை'யின் வசதிக்கு ஏத்த மாதிரி முக்கோணத் தோட கோணங்களின் மொத்தத் தொகை மாறிக்கிட்டிருக்காது. சூனியக்காரிங்க பொன்துடைப்பத்து மேல சவாரி பண்றாங்கன்னு சொல்லி நம்ப வைக்கிற மாதிரி மேலயிருந்து விழும் பொருள்கள் மேற்கொள்ளும் விஞ்ஞான விதிகளையும் கணிச்சு கணக்கிட்டு விளக்கிட முடியாது.

இ.துறவி: உண்மை என்பது நிஜமாகவே உண்மையாயிருந்தா நம்முடைய உதவியில்லாமலேயே அது வெற்றியடையணுமே!

கெலிலி: இல்ல...இல்ல... அப்படியில்ல...! நாம எந்த அளவுக்கு வெற்றி அடையறமோ அந்த அளவுக்குத்தான் உண்மையும் வெற்றி பெறும். பகுத்தாயும் உணர்வு வெற்றிபெற்றதுன்னா பகுத்தாயும் உணர்வுகொண்ட சிந்தனையாளர்கள் வெற்றிபெற்றனர் என்பது தானே! நீங்க உங்க கம்பானிய விவசாயிங்கள அவங்க குடிசைங்க மேல படிஞ்சிருக்கிற பாசி மாதிரி நெனைச்சுக்கிட்டிருக்கீங்க! முக் கோணத்தோட கோணங்களின் மொத்தத் தொகை அவங்களோட தேவைகளிலிருந்து முரண்பட்டதுன்னு ஏன் கற்பனை பண்றீங்க? அவங்க எல்லாத்துக்கும் தலையாட்றதவிட்டுட்டு சொந்தமா சிந்திக் கவும் பார்க்கவும் கத்துக்கலேன்னா, மிகச்சிறந்த நீர்ப்பாசன திட் டங்களாலயும்கூட அவங்களுக்கு எந்தப் பலனும் கிடைக்கப் போற தில்ல. எப்படியோ போகட்டும்; அவங்களோட புனிதமான பொறு மைய என்னால புருஞ்சிக்க முடியுது. ஆனா அவங்களுக்கு நியா யமா ஏற்பட வேண்டிய கோபம் எங்க போயிடிச்சின்னு கேக்கறேன்.

இ.துறவி: பாவம் அவங்க சோர்ந்து மயங்கிப்போயிட்டிருக்காங்க.

கெலிலி: (கையெழுத்துப் படிகளின் ஒரு கட்டை எடுத்து இளந் துறவியின் முன்பு வீசியெறிந்து) தம்பி நீ இயற்பியல் விஞ்ஞானி தானே! கடல் கொந்தளிப்பு ஏன் ஏற்படுறதன்னு இதில் விளக்கியி ருக்கிறேன். ஆனா நீங்க படிக்கக் கூடாதுன்னு தடையிருக்கு! புரியுதா? (இளந்துறவி அதை எடுத்துப் படிக்கத் துவங்குகிறான்.) ஓ... நீ அதுக்குள்ள படிக்கத் தொடங்கிட்டியா? அப்படின்னா நீ உண்மையிலேயே இயற்பியல் (பௌதிக) மாணவன்தான்!
(இளந்துறவி கையெழுத்துப் படிகளைப் படிப்பதில் மூழ்கிப் போயி ருக்கிறான்.)

கெலிலி: (தனக்குத்தானே என்பதைப் போல்) ஞானம் என்னும் மரத்திலிருந்து பறிக்கப்பட்ட ஆப்பிள் பழம் அது. இதற்குள்ளா கவே அதை விழுங்கத் தொடங்கிவிட்டான். நிரந்தர நரகம் இவ

படிப்பகம்

www.padippakam.com



னுக்குத் தப்பாமல் கிடைக்கும். பாவம்... அவன் தான் என்ன செய் வான். அறிவுத்தீனிக்காக அலைபவன். இதைச் சாப்பிடாமலிருக்க இவனால் முடியவே முடியாது. எனக்கு ஒவ்வொருமுறை தோன்றுகி றது: பூமிக்குள் ஒரு பத்து ஆள் ஆழத்துக்குப் போய் இருள டர்ந்த நிலமாளிகைக்குள் உட்கார்ந்துகொள்வதற்கும் நான் தயார், அந்த ஒளி என்பது என்ன என்பதை அறிந்துகொள்வதற்கு இயலுமானால். ஆனால் என்ன செய்வேன்? காதலனைப் போல, குடிகாரனைப் போல, காட்டிக் கொடுக்கும் கயவனைப் போல, நான் தெரிந்து கொண்டதை என்னைச் சுற்றியுள்ள எல்லோருக்கும் சொல்ல வேண்டும் என்னும் வேட்கை எனக்கு இருக்கிறது. சொல் லாமலிருக்க என்னால் இயலவே இயலாது. இது ஆபத்தான போக் குதான். என்னுடைய சர்வ நாசத்திற்கும் அதுவே காரணமாகப் போகின்றது என எனக்குத் தெரியும். என்ன செய்வது? எவ்வ ளவு காலம்தான் எனக்குத் தெரிந்ததையெல்லாம் எனக்கு நானே சொல்லிக் கொண்டு உட்கார்ந்திருப்பது? இப்போது எழுந்துள்ள சிக்கலே அதுதான்.

இ.துறவி: (கையெழுத்துப் படியில் ஒரு பகுதியைக் காட்டி) இந்த வாக்கியத்துக்கு என்ன அர்த்தம்னு விளங்கல.

கெலிலி: விளக்க வேண்டியதை விளக்கமா சொல்லித்தான் ஆக ணும். வேறு வழியில்லை.

நூல் விவரம்:

**கெலிலியோ கெலிலி**

(நாடகம்)

பெர்தோல்ட் பிரெக்ச்ட்

தமிழில்:

தி.சு. சதாசிவம்

பக்கங்கள்: 183 விலை ரூ. 60

அலைகள் வெளியீட்டகம்
25, தெற்குச் சிவன்கோயில் தெரு
சென்னை-600 024

படிப்பகம்

www.padippakam.com



35ஆம் பக்கத் தொடர்ச்சி—

## தமிழ்க்களம்: கடிதம்

காலச்சுவடு ஆசிரியர் திரு கண்ணன்,

வணக்கம். உங்களோடு எனக்குப் பரிச்சயமிலலை. எனினும் உங்கள் 'மௌனத்தின் சிறகடிப்பு' பரிச்சயமானதுதான் இதை எழுதும் அளவுக்கு. எதிர்நிலை விமர்சனக் கூறுகளைத் தவிர்க்க முடியாத நிலையிலும் உங்கள் எழுத்தில் கிடைத்த அள்வீடுகளைப் புரிந்துணர்வோடு பகிர்ந்துகொள்ளவே இந்தக் கடிதம்.

உங்களுக்குப் பிடித்த மாதிரி ஒருவரின் உடல்மொழியும் வாய்ச் சொல்லும் செயல் தளமும் இல்லையெனில், அவர் எதிரி என்பதாகத்தான் உங்கள் கணிப்பு இருக்கும்போல் தெரிகிறது.

'தமிழ் இனி 2000' சார்ந்து உங்களோடு மாறுபட்ட அனைவரையும் சந்தேகத்துக்கிடமில்லாத எதிரிகளாக்கிவிடுவதில் நீங்கள் அதிகம் சந்தோஷம் கொண்டிருக்கிறீர்கள்.

உங்கள் மௌனம் புரிதலின் மொழியாகவும் அதன் சிறகடிப்பு மாற்றத்தின் தேடலாகவும் அமைந்திருந்தால் உங்கள் ஆளுமை எவ்வளவு செழுமையாய் இருந்திருக்கும் என்று கற்பனை செய்யத் தோன்றுகிறது ஒட்டப்பந்தயக் கனவு காணும் முடவனாக என்னை நானே சிறுமைப்படுத்திக் கொள்ளும் நினைப்பு அது.

## கருத்தியலும் வியாபாரமும்

தொடக்கத்தில் நினைத்ததுண்டு- முறையாக அழைத்த பிறகு அ. மார்க்ஸ், 'தமிழ் இனி 2000' நிகழ்வில் கலந்துகொண்டு தன் கருத்துகளை அவை என்ன கடுமையாய் இருப்பினும் வழங்கியிருக்கலாமே என்று. ஆனால் என் எண்ணம் எவ்வளவு அப்பாவித்தனமானது என்பதை உங்கள் எதிர்வினையின் மலினப் பண்பு நன்றாகவே உணர்த்திவிட்டது. உங்கள் அழைப்பை ஏற்கிறவர்கள் விழாவின் திட்டங்கள், நோக்கங்கள், செயல்முறைமைகள் பற்றி நீங்கள் சொன்னதையே வேதவாக்காகக்கொண்டு உங்கள் அதிகார வரப்புக்குள் அடங்கிப் புன்னகைக்கிறவராக இருக்கவேண்டும். அல்லாமல் போனால் இதழிதழாய்ப் பிய்த்தெடுக்கப்படுவார்கள் என்பதை அறியும்போது, அவர் அறிக்கை விட்டது, விழா பற்றியும் அதன் நோக்கம் பற்றியும் பலருக்கும் எடுத்துக்கூற முயன்றது யாவும் ஒருவகையில் சரியென்பதை இப்போது உணர்கிறேன்

படிப்பகம்

www.padippakam.com



'பிடிக்காத விஷயத்தில் தலையிடாதே' என்பது அதிகார மையத்தின் ஒழுக்க நெறியாவது எப்படியோ, அப்படித்தான் முரண்படும் விஷயங்களை அம்பலப்படுத்துவது மாற்றுப் பண்பாளனின் களப்பணியாவதும். இந்த அடிப்படைகூட சகிக்கப் படாத இடத்தை 'மாற்றுக்களம்' என்று அழைத்துக்கொள்வது வேதியன் தனக்குத் 'திருநாளைப் போவார்' என்று பெயர் சூட்டிக்கொண்டாற்போல. அமைப்பு சார்ந்த ஆதிக்கவாதிகளின் நற்சான்றிதழுக்காக ஒரு மாற்றுச்சிந்தனையாளன் மயங்கி நின்றுவிடமபாட்டான். தனது எதிர்க்குரலைப் பதிவுசெய்வதை எவனுக்காகவும், எந்த இழப்பின் பொருட்டும் கைவிட்டுவிட மாட்டான். குறைந்த பட்சம், ஆதிக்கவாதிகள் வகுத்த கண்ணியவான்களின் பட்டியலில் தன்பெயர் அடிக்கப்பட்டுவிட்டதற்காக வருந்திச் செத்துவிட மாட்டான்.

ஒரு சமூக மனிதனாக அ மார்க்ஸ் எல்லாரையும்போல நிறைகளாலும் குறைகளாலும் வார்க்கப்பட்டிருக்கலாம். தான் பேசும் கருத்தியலுக்கு மரத்துப்போன மரபியல்வாதிகள் எழுப்பும் நக்கல்-நையாண்டிகளால் அதிகம் பதற்றமுற்றுத் தடுமாறலாம். தன் ஈர்ப்பு வட்டத்தை விரிவாக்குவதில் நெருக்கடிகள் நேரும்போது மனிதர்களை எடை போடுவதிலும் நிதானம் காப்பதிலும் வெகு அசட்டையாகத் தவறு செய்யலாம். ஆனால் அவருடைய மாற்றுச் சிந்தனைப் பண்பு இவற்றையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிடக்கூடியது. கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக அறிவுலகப் பாவிப்புகளாக சமூக- இலக்கியதளச் சிந்தனைப் போக்குகளில் புதிய சொல்லாடல்களைப் புழக்கப்படுத்தியவர்களில் தன் இடைவிடாத களப்பணி மூலம் அதிக உயரத்தைத எட்டியவர் அவர். இப்படிச் சொல்வதன் மூலம் அவர் எல்லாவற்றையும் சரியாகச் செய்துவிடக் கூடியவர் அல்லது சொல்லிவிடக் கூடியவர் என்பதல்ல உண்மை. தின்பதையும் கழிப்பதையுமே தினப்படி கடப்பாடுகளாக்கி வாழும் கால்நடைப் பிறவிகளிடையே மாற்றுக் கருத்தியலைச் சலியாமல் முன்னெடுக்கும் அவரது விடயமுயற்சியும் தேடுதல் பண்பும் திறந்த மனமுமே இங்குக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை. உங்கள் தளத்தைச் சேர்ந்தவர்களின் டசடியும் பழிட்டுப் ஒவ்வாமையுமே அவரின் இன்றியாமையை உறுதிப்படுத்தும் உரைகல்கள். பின்நவீனத்துவம், கட்டுடைத்தல், மையமழித்தல் போன்ற மார்க்சின் சொல்லாடல்களை அவருக்கெதிரான உங்களின் விமர்சனங்களில் பகடி பண்ணிவிட்டு, அதே சொற்களை முதன்மைப்படுத்தி ஜெயலலிதாவுக்கெதிரான தலையங்கம் எழுதுகிறீர்களே. அதுதான் மார்க்சின் உயரமும் உபயமும். மையமழித்தலையும் மையமிழத்தலையும் இனிமேல்தான் நீங்கள் வேறுபடுத்திக் கற்கவேண்டியிருக்கும்; கழிசடைத்தனமும் ஒருமைப்பண்பில்லாத அறிவுநாணயமும் ஒருபடித்தானவை என்பதையும்கூட.

படிப்பகம்

www.padippakam.com



மார்க்சின் மேல் எனக்கும் உங்களைவிட அதிக விமர்சனங்கள் உண்டு. ஆனால் அவை ஒரு நண்பனைத் துலக்கியெடுக்க முயலுபவை. உங்கள் விமர்சனங்களோ ஒரு மனிதனை விலக்கிவிட முயலும் வசவுகள். 'நம்மவர்', 'அயலவர்' பாகுபாடுகள் இப்படியாகத்தான் கட்டமைக்கப்படுகின்றன.

உங்களுக்கு 'முரண் நகையை' ரசிக்கத் தெரியுமே. இதைப் பாருங்கள்: மார்க்ஸ், விமர்சனங்களை முன்வைக்கும் கருத்தியல்வாதியாக வெளிப்படுகிறார். ஆனால் நீங்களோ அவ்விமர்சனங்களை உங்கள் உற்பத்திப் பொருள்களுக்கான விளம்பரங்களாக்கிக்கொள்ளும் வியாபாரியாய்ச் செயல்படுகிறீர்கள். உங்களுடைய நையாண்டிதான் இது.

## இலட்சியமும் மதமும்

இன்னொரு நையாண்டியாக அவரை Saint மார்க்ஸ் என்று அழைக்கிறீர்கள். Saint என்னும் சொல் சாருவின் உபயம் என்னும் கிண்டல் வேறு. உங்களுக்கொரு வார்த்தை. இதுமாதிரி இடக்குமுடக்கான பயன்பாடுகளுக்கென நீங்கள் விருப்பினால், சாரு தன் ஜட்டியைக்கூடக் கழற்றிப் போட்டுவிட்டு நிறையவே உபயம் பண்ணுவார். பயன்படுத்தி மாளுமா உங்களால்? சாரு பயன்படுத்திய 'துறவி' என்னும் சொல்லை Monk என்று மொழி பெயர்த்திருக்கலாம். மதிநுட்பத்தைக் கருத்தில் கொண்டு Sage என்று பெயர்த்திருக்கலாம். ஆனால் நீங்கள் Saint என்று மொழி பெயர்த்து புனித மார்க்சாகப் பார்ப்பதன் மூலம் அவரை கிறித்தவர் என்று அடையாளப்படுத்துகிறீர்கள். இப்படி ஒருவரின் மதத்தை முதன்மைப் படுத்துகிறவன் எவன் என்பதற்கான விடை அடுத்தடுத்த உங்கள் விவரிப்புகளில் அறியக் கிடைக்கிறது. மார்க்ஸ் என்னும் பெயர் கிறித்தவர்கள் பெருவாரியாகப் பயன்படுத்தும் ஒன்றல்ல என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும். அந்தோனி என்னும் மனிதர் தன் கிறித்தவ அடையாளத்துக்கும் மேலாகத் தான் மதிக்கும் கார்ல் மார்க்சின் பெயரைத் தன் பிள்ளைக்கு வைத்தார்– கலைஞர் கருணாநிதி தன் பிள்ளைக்கு ஸ்டாலின் என்று பெயர் வைத்தாற்போல. தன்னை ஒரு இந்துவாக உணராத என்னுடைய மாணவன் ஒருவன் தன் பிள்ளைக்கு 'மாவோ மார்க்ஸ்' என்னும் பெயர் வைத்து, அவனைப் பள்ளியில் சேர்த்துப் படிப்பிக்கப் பட்டபாடு இருக்கிறதே, சமஸ்கிருதக் கலாச்சாரத்தின் இந்தக் குரூரமான பேயாதிக்கம் பற்றித்தான் மாற்றுச் சிந்தனையாளர்கள் பேசும்படியாகிறது. ஆனால் மார்க்ஸ் என்னும் கிறித்தவர் தன் பெண்ணுக்கு 'ஞானபாரதி' என்று சமஸ்கிருதப் பெய

படிப்பகம்

www.padippakam.com



ரிட்டுத் தீட்டுப்படுத்துகிற கன்னாபின்னா பேர்வழியாய் இருக்கிறார் என்று உங்கள் நையாண்டி உள்ளூர நஞ்சுமிழ்ந்து நகைக்கிறது. பாரதி எனும் மகாகவியின்மேல் அவர் கொண்டிருந்த பற்றின் வெளிப்பாடுதான் அந்தப் பெயர் என்றால் உங்களுக்கு விளங்கவா போகிறது. உங்கள் மரபில் இந்தக் கந்தரகூளங்களெல்லாம் இல்லை. பாட்டன் பெயரைப் பேரப்பிள்ளைக்கு வைத்து கோத்திரம் வழுவாமல் காக்கும் பரம்பரை நீங்கள். உலகமே இரண்டுபட்டாலும் உங்கள் சாத்திரத்தையும் கோத்திரத்தையும் யாரால் பறித்துவிட முடியும். சுந்தரமய்யரின் பேரனும் ராமசாமியின் மகனுமான சுந்தரம் உங்களுக்கு நாங்கள் சொல்லித்தானா தெரிய வேண்டும். பெரியாரை 'தந்தை பெரியார்' என்று அழைக்கிறவர்களைப் பார்த்து, 'பெரியார், தந்தை என்றால் உங்கள் அம்மாவின் புருஷன் யார்?' என்று பகடி செய்த சொரி மனங் கொண்ட தினமலர் கும்பல் உங்கள் சொந்தம்தானே. அந்தக் குசும்பு உங்களுக்கு என்னமாய்ப் பொருந்திவருகிறது! ''எத்தனை அருவருப்பான பார்ப்பனனாக, மரபியல் சொரியாக, ஆதிக்கச் சிரங்காக, மாற்றங்களின் பகையாக, ஒழுங்கமைவு பேசும் வக்கிரச்சின்னமாக உங்களைக் காட்டிக்கொள்கிறீர்கள்! நீங்கள்தான் 'தமிழ் இனி 2000' நடத்தித் தமிழ்க் களத்தைக் காக்க வந்தவரோ,'' என எவனாவது கேட்டுவிட்டால் அது உங்களுக்குக் 'கலகக் கண்மணி'யின் காட்டுக் கூச்சலாக ஒலிக்குமில்லையா?

அ.மார்க்சும் அவரொத்தவர்களும் உங்களுக்கு மாபாதகம் செய்தவர்களாகத் தெரிந்தால், பாரதி சொல்லித் தருகிறான், ''மோதி மிதித்துவிடு, அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு'' என்று. உங்களால் அது முடியாததால்தான் உங்களுடைய வெறுப்பை நையாண்டியில் இறக்கி வைக்கிறீர்கள். அதுவும் ஒருவகையில் நல்லதுதான். ஆனால் ஒன்று: கோபம் முழுவதையும் நையாண்டியாகவே வடித்துப் பழகியவர்கள் அலிகளும் மாமாக்களும் தான். ஆகவே நையாண்டி ஒரு எல்லையோடு நிற்கும்போதுதான் அழகு. தஞ்சை, திருச்சிப் பகுதிகளில், ராயர் தெரு முக்குகளில், பொத்தான்கள் போடாத சட்டைக்குள் கையைவிட்டு குறுக்கோடும் புரியை இழுத்து முதுகு சொரிந்துகொண்டே மாமாக்கள் அப்படித்தான் நையாண்டி பேசுவார்களாம். 1970களில் குடவாசல் நண்பர் சொன்னது.

## குடியும் ஒழுங்கும்

அடுத்து, குடிகாரர்கள் தொல்லையைப் பற்றி குத்தல் குமைச்சலோடு முகம் சுளிக்கிறீர்கள். உண்மையில் 'குடி'யெழுச்சி மிகவும் அதிர்வானதுதான் – அதுவும் அறநெறியாளர்களுக்கு மகா

படிப்பகம்

www.padippakam.com



உயிர்வாதைதான் பொறுக்க முடியவில்லை எனில் தூக்கிக்கடாசி விட்டுப் போகலாம். அதைச் செய்வதில்லை. 'குடி'மகனை விட்டு விலகிப் போய்விடலாம், அல்லது தன் கவனத்திலிருந்து அவனை விலக்கிவிடலாம். சுய ஒழுக்கம் காப்பவர்கள் அதைத்தான் செய்வார்கள். வாழ்வியலில் தோய்ந்த விசாலமனம் படைத்தவர்களோ, தளர்வான பொழுதின் சந்தோஷப் பீறல்கள் என்று சகித்து மேல் செல்வார்கள். ஆனால் மரபொழுக்கம் பேணுபவர்கள், அதிகார மையங்களாகத் தங்களை அவதானித்துக் கொள்பவர்கள், அடக்குமுறையின் சிதைவுற்ற வடிவப் பிரயோகமாய் எப்போதும் பொருமிப் புலம்பிக்கொண்டே இருப்பார்கள். ஒழுக்க ராஜ்யத்தை தொடர்பறுந்து போகாமல் மீட்கும் பணி அது. உங்கள் சிறகடிப்பிலும் அதைத்தான் காண முடிகிறது.

மனிதர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசக்கூடியவர்கள்தாமே. இந்தத் 'தூத்தம்' உள்ளே இறங்கிவிட்டால் தங்கள் உள்ளே உள்ளதை மட்டுமே கொட்டும் ஒருபயாளர்களாகி விடுவார்களாம். பார்த்தும் கேட்டும் அறிந்த அனுபவங்கள் எனக்கும் உண்டு. என்னோடு வேலை பார்த்த சக ஆசிரியன் என்னிடமே– நட்புரிமையோடுதான்– தட்டிப் பறித்துக்கொண்டு போய், 'தண்ணி' போட்டுக் கொண்டு வந்த சற்று நேரத்திற்கெல்லாம் 'கிண்'ணென்றானதும் என்னையே ஒரு பிடிபிடித்தானே பார்க்க வேண்டும். "நீ என்னா பெரிய கொம்புன்னு நெனப்பா? ஒனக்குத்தான் பேசத் தெரியுமா? வாத்திகளுக்காக வாதாடறதா கித்தாப்பு காட்டுற வேலையெல்லாம் வச்சுக்காத. என்னா பெரிய பேமானி வேல. தட்டிப்புடுவேன், ஜாக்கிரதை," என்று அவன் சடைத்த சடைப்பில் நான் 'பேபே' என்று விழிக்கவே முடிந்தது. நிர்வாகத்தோடு ஆதிரியர்களுக்குப்பிரச்சினை ஏற்பட்டிருந்த காலம் அது. ஆளாளுக்குப் பேசி காரியத்தைக் கெடுத்துவிடாமல் ஆசிரியப் பிரதிநிதியாய் நான் மட்டுமே பேச வேண்டும் என்று பணித்தவனே அவன்தான். ஆனால் என் போக்கு அல்லது வீச்சு அவனை எங்கோ காயப்படுத்தியுள்ளது. அதை ஒரு முன்னெச்சரிக்கைக் குறிப்பாக நான் எடுத்துக்கொண்டிருக்க வேண்டும். ஏனெனில், நிர்வாகமும் கடைசியில் காயம் பட்டதாகவே கருதியது; செயல்பட்டது. அறிவு தன்னளவில் லாபநட்டம் பார்ப்பதில்லை; நட்பு பகை பாராட்டுவதில்லை என்பதால் நான் அதனைப் பொருட்படுத்தியதில்லை. எனினும் அந்தக் கணத்தில் ஒரு குடிகார மனத்திலும் நமக்கொரு தோழமை கிடைக்காதா என்னும் ஏக்கத்தில் அவனைத் தொட்டுத்தொட்டுப் பேசி சமாதானப் படுத்த முயன்றேன். தொட்டுப் பேசுவது கெட்ட பழக்கம் என்று கற்பிக்கப்பட்டவன் நான். அது ஒரு அனுபவம். போதை மனதின் நட்புக்கேங்கிய அனுபவம். மனசில் அழுக்கை சேமிக்கிறவனுக்கு அது வாய்க்காது.

படிப்பகம்

www.padippakam.com



கவிஞர் விக்கிரமாதித்தனை ரொம்பவும்தான் அற்பமாய்ச் சித்திரப்படுத்துகிறீர்கள். "கூட்டத்திலிருந்து வெளியேறும்படி கேட்டுக்கொண்ட பிறகும் வெட்கமின்றி மீண்டும் மீண்டும் உள்ளே வந்து கத்தினார்," என்கிறீர்கள். குடி போதையில் இருப்பவர்களிடம் வெட்கத்தை எதிர்பார்க்கிற முதல் ஆளாக நீங்கள்தான் இருப்பீர்கள். ஒழுங்குமுறைமைகளில் உங்களுக்கிருக்கும் பற்றுறுதி கண்டு மலைக்கத் தோன்றுகிறது.

## கதையும் விடையும்

ஒரு சம்பவத் தொகுப்பை அதன் பொருத்தப்பாட்டால் இங்கு நினைவு கூரத் தோன்றுகிறது.

என் தாய் மாமன் நல்ல குடிகாரர். நான் அறிந்தவரை கள் மட்டுமே குடிப்பார். 'குடி'யேறியதும் பச்சை வார்த்தைகள் அவ்வப்போது பளிங்குருண்டைகள் மாதிரி நாவில் வந்து புரளும். எங்கள் வீட்டில்- அதாவது என் தந்தை வீட்டில் இந்த 'அனாச்சாரங்களுக்'கெல்லாம் இடமில்லை. எனில் என் அம்மாவுக்கு மட்டும் எப்படி இடம் இருந்தது என்று தெரியவில்லை. பின்னாளில் எமது வம்சக் கிளைகளுக்கெல்லாம் சேர்த்து கண்டிப்புக்கும் ஒழுங்குக்குமான பெட்டகச் சாவி அந்த அம்மாள் இடுப்பில்தான் வாசம் செய்தது.

ஆனால் மாமா பேசும்போது மறைவில் இருக்கும் என்னுடைய அம்மா, அக்காள்கள் யாவரும் சீனத்துப் பேச்சைக் கேட்டுச் சில்லிட்டாற்போல் வெட்கமும் ரசனையுமாக நெளிவார்கள். எனக்கு ஆச்சரியமாயிருக்கும். இள வயதில் என் பேச்சையும் செயலையும் அப்படியொரு கண்டிப்புக்கும் கண்காணிப்புக்கும் உட்படுத்தி அறநெறிகளின் பேரால் எனது இயல்பான அறிமுறைகளிலேயே ஆதிக்கம் செலுத்தியவர்கள் என் மாமாவை எப்படி சகிக்கிறார்கள் என்று குழம்புவேன். பிறந்த ஒரு மாதத்திலேயே தந்தையை இழந்த பிள்ளை நான். எங்கள் குடும்பத்தின் முதுகெலும்பாய் இருந்து காத்துக் கரைசேர்த்தவர் மாமா. பின்னாளில் அவர் செய்த ஒவ்வொரு உதவிக்கும் என் தாயார் கணக்கு வைத்துத் தீர்க்க நேர்ந்தது வேறு கதை. ஆனால் அந்தக் காலத்தில் எங்கள் குடும்பத்தைச் சுமக்க நேர்ந்ததற்காக அவர் ஒருநாளும் சலித்துக்கொண்டதில்லை. மாறாக அந்தச் சுமைதான் அவருக்கொரு சமூகப் பெருமையைக் கொடுத்ததாகக் கர்வப்பட்டதுண்டு. 'குடி'யிலும் அவர் கொண்டிருந்த அந்தப் பெருமிதமே மாமாவை அவர்கள் இயல்பாய் ரசித்ததற்கு காரணமாயிருக்கக்கூடும்.

படிப்பகம்

www.padippakam.com



என்னுடைய சின்ன அக்காள் வைக்கிற ரசம் அவருக்கு மிகவும் பிடிக்கும். குடி போதையில் இருக்கிறவரை கூப்பிட்டு, உணவுத் தட்டுக்கு முன்னால் அமர்த்தி, எங்கள் மாமி வைத்த ரசத்தையே தான் வைத்ததாகச் சொல்லி அக்காள் ஊற்றுவார். அதை அவர் சப்புக்கொட்டிக்கொண்டு குடிப்பார். கூடவே தன் மனைவியைப் பார்த்து, "பாருடி என் அக்கா மவ வச்சிருக்கிறத. நீயும் வக்கிறியே. தூ.. மாதர்சோர்," என்பார். எல்லாரும் புரையேறிக்கொள்ளும்படி சிரித்துக் களிப்பார்கள். மாமியும் அவர்களோடு சேர்ந்துகொள்வார். ஏதோ ஓர் அற்புத உலகம் அன்றலர்ந்த பூக்களும் வண்ணத்துப் பூச்சிகளுமாய் விரவிக் கிடக்கிறார்போல் இருக்கும். அப்படியொரு விட்டேற்றியான சுகத்தை என் வீட்டில் நான் அனுபவித்ததே இல்லை. இப்போதும் எனக்கொரு சம்சயம் இருந்துகொண்டே இருக்கிறது, எங்கள் எல்லாருடைய சந்தோஷத்துக்காகவும் மாமா ஆடிய நாடகமல்லவா என்று. அந்தக் கனவானின் முகத்தில் ஒளிந்தாடிய ஒரு ரகசிய ஒளிக்கீற்று என் அறிதலைத் தொட்டாற்போல் நினைப்பு.

என்னுடைய சின்ன அக்காளுக்கு மண உறுதிச் சடங்கு நடந்தது. ஊருக்கு வந்த மாமா சடங்குக்கு முன்பாகவே அடுத்த ஊருக்குச் சென்று போட்டுக்கொண்டு வந்துவிட்டார். எங்கள் வீட்டில் நடக்கும் சிறப்புகளை எனது பெரியப்பாவை முற்படுத்தியே செய்து வந்தோம். நாங்கள் அவரை முறையாக அழைக்க வேண்டும். பிறகுதான் வருவார். இந்த விழாவுக்கு எங்களை முந்திக்கொண்டு மாமாவே அவரிடம் சென்று, "வா மச்சான். என்னைய அழைக்க வேண்டியவன் நீ. இப்போ உன்னைய நான் அழைக்கிறன். என்னா பெரிய மனுஷன்," என்று சொல்லிவிட்டார். மாமா அவரை ஒருமையில் அழைப்பவரல்லர். இப்போதோ அவர் பெரிய மனுஷத் தோரணையையே கேள்விக்குட்படுத்திவிட்டார். அவர் வெகுண்டு, "போடா பொறுக்கி நாயே. குடிகார நாயே," என்று சொல்லி ஓங்கி அறைந்துவிட்டார்.

அம்மா என்னை அனுப்பி பெரியப்பாவைக் கூட்டிவரச் சொன்னார். அவர் வர மறுத்துவிட்டார். விஷயம் எல்லாருக்கும் பரவியது. தன் தம்பி அறைபட்டதை அம்மா எப்படி எடுத்துக் கொண்டார் என்பதை முகத்திலிருந்து படிக்க முடியவில்லை. பெரியப்பாவுக்கு நேர் நின்று அம்மா பேசுவதில்லை. ஆகவே என்னை முன்னிறுத்தி, "உன் மாமன் பேச்சைப் பெரிசு பண்ண வேணாம்னு சொல்லிக் கூப்புடுடா", என்றார்.

"அந்தப் பொறுக்கி சொன்னதை என்னால மறக்க முடியாது.'

அம்மா தன் கோபத்தைக் கம்பீரப்படுத்தினார்.

படிப்பகம்

www.padippakam.com



“வந்தவன வான்னு கேக்கல. வருத்தப்பட்டுச் சொன்னான். அதுதான் குடிச்சிருக்கான். இந்த வூட்ல அவன் குடிச்சிட்டு நுழைஞ்சதில்ல. இதுதான் முதல் தடவை. அவன் பேச்சைப் பெரிசா எடுத்துக்க வேணாம்.”

“நான் வரணும்னா அவன் இருக்கப்படாது.”

“பாக்குறவங்களுக்கு எளப்பமா போயிடும்.”

“அப்ப நான் என்ன எளப்பமா? வர முடியாது.”

“சரி, நின்னுகட்டும். இது இந்த வூட்டு விசேசம். யாரு கூப்புடறதுக்கும் காத்திருக்காம வந்து நடத்தி வச்சிருக்கணும். ஆம்பள இல்லாத வூடுன்னு தூக்கிக் கனம் பாக்கப்படாது.”

“கனம் பார்க்கிறது அவனா? நானா? அப்படியா மானங்கெட்டுப் போயிட்டம்?”

“குடிகாரன் பேச்சுல மான அவமானம் பாக்கப் படாது.”

“குடிச்சிட்டா பீ தின்னுடுவானா?”

“வல்லடி வழக்குன்னா அதுக்கு என்னதான் மாத்து?”

“அவன் மன்னிப்பு கேக்கணும்.”

“கால்ல வுழுந்தா?”

“விழப்படாதோ?”

மாமாவுக்குப் போதை தெளிந்துவிட்டது. தன் செல்ல அக்கா மகள் திருமணத்துக்கு வில்லங்கம் வந்துவிடக்கூடாது என்ற பயம் வந்துவிட்டது. அவர் எழுந்து சென்று பெரியப்பாவின் காலைத் தொடப்போனார். ஆனால் அம்மா அதற்குள், “நில்லுடா தம்பி,” என்றார். “ஏன்க்கா?” என்று பரிதாபமாகத் திரும்பிப்பார்த்தார்.

அம்மா அவரை லட்சியம் செய்யாமல், “அவன் கால்லயும் வுழமாட்டான். மன்னாப்பும் கேக்கமாட்டான். அவன்தான் குடிகாரன். நாயம் தவறிப் பேசிட்டான். ஆனா நீங்க குடிக்காம பேசுனீங்களே. நாயமான பேச்சா? கன்னத்துல அறைஞ்சிருக்கீங்க. அப்பிடியும் அவன் ஒங்க காலப் புடிக்க வர்றான். அவன் பெரிய குடும்பத்துல பொறந்தவங்க. உங்களுக்கு எது அழகோ அதச் செய்யலாம். வாடா தம்பி,” என்றார்.

பின்னர் அவர் தானாக வரும்படி ஆயிற்று.

நண்பரே, நம்பிராஜனை ‘வெட்கமில்லாமல்’ என்று சொன்னீர்களே, எனக்கு என் அம்மாவின் பேச்சே நினைவுக்கு வந்தது.

—இதன் தொடர்ச்சி 59ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# இடைவெளி

ஜெயந்தன்

மாலா மாலாவுக்கு சந்தோஷம். பரம சந்தோஷம். எல்லாரும் தன்னைப் பீடத்தில் வைத்து அசல் ரோஜா இதழ்களையல்லவா தூவிக்கொண்டிருக்கிறார்கள்!

அவன் ஓரக்கண்ணால் மெல்ல, நான்காவதாக உட்கார்ந்திருந்த சண்முகநாதனைப் பார்த்தான். ஆசாமி அம்போ என்று உட்கார்ந்துகொண்டிருந்தார். கூட்டத்தில் ஒரு ஒற்றைக்கண்கூட அவர்மேல் இல்லை.

எல்லாம் தன்னைச் சுற்றியே.

'மாலா மாலா... மாலா மாலா... மாலா மாலாக்கி ஜே!' மாலா மாலா. மாமா. என் காதலன். என் மச்சான்! சிரிப்பு! குதூகலம்! ஒவ்வொரு கண்ணிலும், ஒவ்வொரு குரலிலும்.

ஏன் இந்தக் குதூகலம்? எது கொண்டு வருகிறது இதைத் தலையில் தூக்கி?

அது அவனுக்கே தெரியாது.

முதலில் நான்கு வருஷம் காண்டேகர், டால்ஸ்டாய், டி.எஸ்.எலியட் என்று மேய்ந்துவிட்டு, நான்கு சிறுகதைகள் எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்பினான். ஒன்றும் போனியாகவில்லை. பிறகு ஒரு யோசனைதோன்றி தமிழ்நாட்டில் பிரபலபத்திரிகைகளில்எழுதும் பிரபல எழுத்தாளர்களின் சிறுகதை, தொடர் கதைகளில் ஒரு பயணம் போனான். பயணமென்றால் சிரத்தையுள்ள ஒரு ஆராய்ச்சிப் பயணம். ஆராய்ச்சியின் முடிவில் சில உண்மைகள் தெரிந்தன. அந்த உண்மைகளை வழிகாட்டிகளாகக் கொண்டு ஒரு ஃபார்முலாவைத் தயாரித்தான்.

படிப்பகம்

www.padippakam.com



தொய்வில்லாத பரபரப்பு - பரபரப்புக்கான செயற்கையான தொரு உலகம் - செயற்கை மனிதர்கள் - இளம் பெண்கள் - அவர் களின் அங்க வர்ணனைகள் - செக்ஸ் - (ஒரு கதையில் செக்ஸ் 4 பக்கம், மற்றவை 4 பக்கம் இருந்தால் கன ஜோர்.) கதையின் கடைசியில், நம்ப முடியாது என்றாலும் அதிரடி முடிவுகள்.

இதோடு தமிழ் இலக்கியக் களஞ்சியத்திற்கு தனது பங்காகவும் ஏதாவது சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று யோசித்தான். ஏற் கனவே இரண்டொரு ஆண் எழுத்தாளர்கள் பெண் பெயரை புனைப்பெயராக வைத்துக்கொண்டு கணிசமான வெற்றி பெற்றி ருந்தார்கள். ஆகவே தான் இரண்டு பெண் பெயரை வைத்துக் கொண்டால் என்ன? ஒரே ஒரு பெண்ணே தன் செக்ஸ் அனுப வங்களைப் பச்சையாகப் பேசுகிறாள் என்று நினைத்ததும் கிறங் கிப்போகும் தமிழ் வாசகன், அதே காரியத்திற்காக இரண்டு பெண் கள் கூட்டாக முன்வந்தால் என்ன ஆவான்!

ஆகவே 'மாலா மாலா' என்று புனைப் பெயர் வைத்துக் கொண் டான். அதோடு இன்னொரு பிரமாதமான யோசனையும் மண் டையில். முதல் கதையையே, இரண்டு பெண்களின் கதையாக- அவர்களே சொல்வதாக வைத்துக்கொண்டால்?

ஆகவே அவனது முதல் கதையின் நாயகிகள் கே. கே மாலா, ஆர். ஜி. மாலா என்றானார்கள்.

கதை லெஸ்பியன் சரசங்களோடு ரொம்பதூரம் உள்ளே போய் கடைசிப் பக்கத்தில் ஒரு திருப்பமெடுத்து அதெல்லாம் தமிழ்க் கலாச்சாரத்திற்கு ஒத்துவராது என்று முடிகிறது.

இவன் கதையைத் தபாலில் போட்ட நான்காம் நாள் அந்தப் பத்திரிகையின் ஆசிரியரே வீடு தேடி வந்துவிட்டார்- கேமரா தோளில் தொங்கும் துணை ஆசிரியர் ஒருவரோடு.

ஃபேர் அண்ட் லவ்லி சிவப்பழகி முகத்தைக் கற்பனை செய்து கொண்டு வந்தவருக்கு, இந்தக் கறுத்து ஒடுங்கிய கன்னங்களை யும் அதற்குப் பொருந்தாத பெரிய மீசையையும் பார்த்தபோது உள்ளே அதிரடியாயும் வெளியே சன்னமாகவும் ஏமாற்றம்.

இருந்தாலும் அங்கே உட்கார்ந்து பேசியதில் இவனது 'கதைத் தொழில் நுட்பம்' குறித்த ஞானத்தைத் தெரிந்து கொண்ட சந் தோஷத்தில், போகும்போது 'நீங்கள் கொடிகட்டிப் பறக்கப் போகி றீர்கள்' என்று கை குலுக்கிவிட்டுப் போனார்.

கதை வெளியானதும் தமிழ் வாசக உலகமே குலுங்கிப் போய் விட்டது. எங்கும் மாலா மாலா. வேறு மாதிரி சொன்னால்

படிப்பகம்

www.padippakam.com



எங்கும் மாலா மாலா என்பதே பேச்சு. 'ரொம்ப விவரம் தெரிந்தவர்களே' சொன்னார்கள்: "தமிழுக்கு டி.எச்.லாரன்சு வந்தாச்சு, லேடி சாட்டர்லி வந்தாச்சு; விளாதிமிர் நபாகோவ் வந்தாச்சு, லோலிடா வந்தாச்சு." இந்தக் கதையைப் பற்றி மட்டுமே பத்திரிகை ஆசிரியருக்கு 2400 கடிதங்கள். ஒரு வாசகர் எழுதியிருந்தார்: 'இனி மாலா மாலா எழுத்துகளைத் தவிர வேறு எதையும் படிப்பதாக இல்லை' எதிர்ப்புகளும் இல்லாமல் இல்லை. ஒரு கடிதம் 'அர்ச்சுனா நீ நாசமாய்ப் போவாய்' என்று சாபமிட்டிருந்தது. அர்ச்சுனன்– அந்தப் பத்திரிகையின் பெயர். அந்த வாரம் அந்தப் பத்திரிகையின் கடிதப் பகுதியின் தலைப்பே அதுதான்– 'அர்ச்சுனா நீ நாசமாய்ப் போவாய்.' இது பத்திரிகை உலக ஜாம்பவானான அர்ச்சுனன்– சதாசிவத்தின் தொழில் நுணுக்கங்களில் ஒன்று. இனிமேல் இப்படி சாபம் இட்ட அந்த ஆளே கூட, 'என் லெட்டர் வந்திருக்கு, என் லெட்டர் வந்திருக்கு' என்று சொல்லிக் கொண்டு திரிவானே் தவிர, கதையைப் பற்றிப் பேச மாட்டான். அதோடு புண்பட்ட நெஞ்சங்களுக்கு ஆறுதல் கொடுத்த சொந்த ஆத்ம திருப்தி வேறு!

பாதிக்கு மேற்பட்ட கடிதங்கள், கதையையும் அதற்கு ஓவியர் பிளாவடி போட்டிருந்த நடுப்பக்க படத்தையும் இணைத்தே பாராட்டியிருந்தன. பிளாவடி ஏற்கனவே பெண்ணுடல் படங்களுக்காக கொடி கட்டிப் பறந்துகொண்டிருந்தவர். ஒரு வாசகர் 'நெய்க்கு தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா என்று மயங்கி நிற்கிறோம்' என்று எழுதியிருந்தார்.

ரொம்பப் பேர் கதாசிரியைகள் இருவர் படத்தையும் வெளியிட வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். சிலருக்கு அவர்களது முகவரிகள் வேண்டுமாம். ஆனால் ஆசிரியர், இந்த 'ஆண் பெண்ணாகும் ரகசியத்தை' 2 வருஷம் வரை வெளிவராமல் பார்த்துக்கொண்டார். ஒரு தடவை இவன், தனது பழைய கதை ஒன்றை தனது சொந்தப் பெயரில் வெளியிடலாமா என்று கேட்டபோது உதட்டில் ஆட்காட்டி விரல் வைத்து 'உஷ்' சொல்லிவிட்டார். 'நீ எத வேண்ணாலும் குடு. ஆனா மாலா மாலா பேர்லதான்.'

பிறகு இரண்டு வருஷ வாக்கில்தான் மெல்ல மெல்ல விஷயம் வெளியே கசிய ஆரம்பித்தது. 'மாலா மாலா என்பது இரண்டு பேர் இல்லையாம். ஒருத்தராம். அதுவும் பெண் இல்லையாம். ஆணாம்.' ஆனால் அதனால் மோசம் ஒன்றும் வந்துவிடவில்லை. இதற்குள் அவன் நாற்பது அம்பது சிறுகதைகளும் நான்கு தொடர் கதைகளும் எழுதிவிட்டதால், அதன் மோகத்தில் வாசகர்கள் மாலா மாலாவை ஒரு ஆணின் பெயராகவே ஆசீர்வதித்துவிட்டார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இப்போது மேலும் ஆறு வருஷங்கள் கடந்துவிட்டன. இதற்குள் அவனும் தன்னளவில் ஒரு சிகரத்தைத் தொட்டுவிட்டான் என்பது உண்மைதான். எழுத்தில் ஒரு வண்டி லோடு அடித்துவிட்டான். அசுர வேகம் என்பார்களே அது அவனிடம் இருந்தது. சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், கட்டுரைகள், பயணக்கட்டுரைகள், விமர்சனங்கள், எதையும் விட்டு வைக்கவில்லை.

ஆனால் இவனுக்கு எதிர்ப்பு இல்லாமலும் இல்லை. இந்த சண்முகநாதன் போன்ற ஆட்கள் முடிந்த போதெல்லாம் இவன் எழுத்துக்கு எதிராகக் குரல் கொடுத்தார்கள். அக்குவேறு ஆணிவேறாகக் கழட்டி அதன் பொய்மையை புட்டு வைத்தார்கள். வரிவரியாகப் பிளந்தார்கள். ஆனால் அதனால் இவனுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. அவர்கள் எழுதியதெல்லாம் சிறுபத்திரிகைகளில். அவைகளின் மொத்த வாசகர் தொகையே ஆயிரத்தைத் தாண்டாது. இவனோ இலட்சக் கணக்கில் அச்சாகி பல லச்சம் வாசகர்களை சென்றடையும் பத்திரிகைகளில் எழுதுபவன். அவர்களது எதிர்ப்பலை இவனது வெள்ளத்தின் ஓரத்தைக்கூடத் தொட முடியவில்லை.

இவனுக்கும் சமயங்களில் அவர்கள் சொல்வது உறைக்காமல் இல்லை. இவனும் ஆரம்பத்தில் அந்த ஆட்கள் கூடச் சேர்ந்து திரிந்தவன்தானே. இவனும் அன்றைய பாப்புலர் எழுத்துகளை நையாண்டி செய்துகொண்டிருந்தவன்தானே இருந்தாலும் ஒருவனுக்கு தன்னுடைய எதாஸ்தானம் எதுவென்று தெரிந்த பிறகு, நல்லது, கெட்டது பார்ப்பதெல்லாம் கதைக்கு உதவாது என்று அதை உதறி விடுவான். தவிர, இந்தப் புகழ், பணம், வரவேற்பு எல்லாம் அங்கு திரும்பினால் என்னாகும்? இன்றைக்கு மாதிரியான குதூகலமான, இனிமையான சூழலில் மிதப்பதையெல்லாம் ஏன் விடவேண்டும்? எப்படி விடமுடியும்? இந்த சண்முகநாதன் போன்றவர்கள் ஏதோ வரட்டுத்தனமான பிடிவாதத்தால்தான் இப்படியிருக்க முடியும். வாழ்க்கையை சுகிக்க முடியாமல் வாழ்க்கையைப் பற்றிப் பேச இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்று கேட்டுக்கொள்வான்.

அன்றைய நிகழ்ச்சிக்கு ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. அது ஒரு மாதிரி கலப்படமான உறுப்பினர்களைக் கொண்ட நிறுவனம். இரண்டு மூன்று பேர். சண்முகநாதன் வகையறா வாசகர்கள். மீதிப் பேர் அதற்கு எதிராக இல்லாவிட்டாலும் ஒரு நிகழ்ச்சி என்று நடத்தினால் அதற்கு ஆட்கள் நிறைய வந்தாக வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள். சும்மா 25 பேர் வந்து போனால் தங்கள் அமைப்பிற்கு என்ன விளம்ப

படிப்பகம்

www.padippakam.com



ரம் கிடைக்கும் என்று கேட்பவர்கள். ஆகையால்தான் அவர்க ளின் செயற்குழு முடிவில், சண்முகநாதன், ஒரு ஓவியர், ஒரு நாட் டுப்புறப் பாடல் பாடகர், இவர்களோடு இவன் மாலா மாலாவையும் அழைப்பதாக முடிவாயிற்று.

அவர்கள் எதிர்பார்ப்பு வீணாகவில்லை. நல்ல கூட்டம். கார ணம் மாலா மாலாதான் என்று யாரும் சொல்ல வேண்டியதில்லை.

நிகழ்ச்சியின் சிறப்பு அம்சம், வந்திருக்கும் விருந்தினர்க ளோடு வாசகர்கள் ரசிகர்கள் கலந்துரையாடல். அதாவது ரசிகர் கள் மேடையிலிருப்பவர்களிடம் கேள்வி கேட்டு விளக்கம் பெறுவது.

இயற்கையாக, பெருவாரியாக வந்திருந்தவர்கள் மாலா மாலாக் காரர்கள் என்பதால் பெருவாரியான கேள்விகளும் மாலா மாலாவை நோக்கியே இருந்தன. அபத்தங்களை உள்வாங்கி அந்த அபத் தங்களையே கேள்விகளாக்கிக் கேட்டு மகிழும் மனிதர்கள்.

'மாலா மாலா, நீங்கள் கொலை செய்திருக்கிறீர்களா?'

'சத்தியமாக இல்லை சாமி.'

'பின் எப்படி உங்கள் வில்லன்கள் அவ்வளவு நுணுக்கமாகக் கொலை செய்கிறார்கள்?'

'அது தொழில் ரகசியம். நான் அதைச் சொன்னால் நீங்க ளும் துப்பறியும் கதை எழுத ஆரம்பித்து விடுவீர்கள்.'

'நிகழ்ச்சிக்கு ரயிலில் வந்தீர்களா, பிளைட்டில் வந்தீர்களா?'

'ரயிலில்தான் வந்தேன். நிகழ்ச்சி அமைப்பாளர்கள் கொஞ் சம் கருணை செய்திருந்தால் ஆகாய வழி வந்திருக்கலாம்தான்.'

ஒரே ஒரு கேள்வி சண்முகநாதனிடம் கேட்கப்பட்டது. 'சிலர் பூடகமாக எழுதுகிறார்கள். பலர் வெளிப்படையாக எழுதுகிறார் கள். இரண்டும் ஒரே நிலையில் வைத்துப் பார்க்கப்பட வேண்டி யவைதானா?'

சண்முகநாதன் பதில் 5 நிமிடங்களையும் தாண்டிய போது மாலா மாலா ரசிகர்களிடம் ஒரு சோர்வு. ஒருவன் மெல்ல 'மகாத்மா காந்திக்கு ஜே' என்றான். அந்தக் கார்னரிலிருந்து லேசான சிரிப்பு. இருந்தாலும் சண்முகநாதன் அவர்களைப் பழிவாங்குவது போல தனது பதிலை 10 நிமிஷமெடுத்து சொல்லியே முடித்தார். அதற்குள் அந்த ரசிகர்கள் செத்தே போய் விட்டார்கள் என்று தான் சொல்ல வேண்டும். அவர் முடித்து மீண்டும் பழைய மாதிரி கேள்விகள் வந்தபோதுதான் அவர்கள் புத்துயிர் பெற்றார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



'மாலா மாலா சார், நாங்கள் உங்களை சுருக்கமாக மா. மா—மாமா என்று அழைக்கலாமா?'

'தாராளமாக மருமகனே.'

'தேங்யூ மாமா. நீங்கள் ஏன் அத்தையை அழைத்து வரவில்லை?'

'அமைப்பாளர்கள் எனக்கு மட்டும்தான் ரயிலுக்குப் பணம் கொடுக்கிறார்கள்.'

ஒரு தடவை மாலா மாலா தான் எதை எழுதினாலும் இப்போது அதை வெளியிட பத்திரிகைகள் தயார் என்று சற்று பெருமையாகச் சொல்வதற்காக, 'இப்போது நான் எழுதும் பலசரக்குக் கடைக்கான மளிகை ஜாமான் லிஸ்டைக்கூட வெளியிட அவர்கள் தயார்' என்று சொல்லப்போக, ஒரு இதழின் ஆசிரியர் அப்படி ஒரு லிஸ்டை அவன் கைப்பட எழுதி வாங்கி அதை அப்படியே பிளாக் எடுத்து வெளியிட்டிருந்தார்.

இது குறித்து ஒரு வாசகர் கேட்டார்: 'இந்த மாதிரி விஷயங்கள் எல்லாம் எங்களது என்ன தேவையைப் பூர்த்தி செய்கிறது?'

இதற்கு மாலா மாலா சொன்ன பதில்: 'உங்கள் கேள்வியின் சாரத்தைப் பார்த்தால் நீங்கள் நண்பர் சண்முகநாதனிடம் கேள்வி கேட்க வேண்டியவர் என்று தெரிகிறது. நீங்கள் அவரது கட்சியாக இருக்க வேண்டும். அவரவர் வாசகர் அவரவர் கட்சிக்காரரிடம்தான் கேள்வி கேட்க வேண்டும்.'

இப்படியெல்லாம் சமத்காரமாக தன்னால் எப்படிப் பேச முடிகிறது என்று நினைக்க சிலசமயம் அவனுக்கே ஆச்சரியமாக இருக்கும். அதைவிடப் பின்னும் ஆச்சரியம், அதற்கென்று இதற்கு இவ்வளவு வரவேற்பா என்று.

கூட்டம் முடிவதற்கு முன்பாக ஒரு இளைஞன் எழுந்து வந்து அவனுக்குப் பொன்னாடை போர்த்தி அவன் கையை முத்தமிட்டான். இன்னொரு இளைஞன் ஒரு பேனாவை அன்பளிப்பாக அளித்தான்.

கூட்டம் முடிந்ததும் ரசிகர்கள் அலை மோதிக் கொண்டு வந்து கை குலுக்கினார்கள். ஆட்டோ கிராப் வாங்கினார்கள். அப்போது ஒரு விபரீதம். ஒரு இளைஞன் லேசான 'கிக்கில்' இருந்திருப்பான் போலிருக்கிறது. திடீரென்று யாரும் எதிர்பாராமல் மாலா மாலாவின் கழுத்தைக் கட்டி முத்தமிட்டு விட்டான். முத்தமிட்டது மட்டுமல்ல, கழுத்தைக் கட்டிய கையை எடுக்கவுமில்லை.

படிப்பகம்

www.padippakam.com



யாராவது இதைப் போட்டோ எடுங்களேன் என்பதுபோல் நின்றான். இதனால் ஆத்திரமுற்ற மாலா மாலா 'நான்சென்ஸ், கையை எடுடா' என்று அவனை உதறி 'பல்லை ஒடச்சுடுவேன் நாயே' என்று தள்ளினான்.

அந்த இளைஞனோ, திகைத்தது போல் சிறிது நின்றுவிட்டு, 'இன்னா நாயின்றே? ஒன்னோட அபூர்வ ராகங்கள் நாவல்ல ரெண்டு பிரெண்ட்ஸ் இப்பிடி கட்டிக்கிட்டு முத்தம் கொடுக்கலியா? அதுமட்டும் அபூர்வ ராகங்கள், இதுமட்டும் நான்சென்ஸா' என்று கேட்டான். சிலர் அவனைத் தள்ளித் தூரமாகக் கொண்டு போனார்கள்.

மாலா மாலாவின் முகம் கறுத்துவிட்டது. அவன் வேகமாக வெளியேற ஆரம்பித்தான்.

வெளியே புல்தரையில் சண்முகநாதன் நின்றுகொண்டிருந்தார். அவருக்கு முன்பாக நான்கைந்து இளைஞர்கள், ஆறேழடி இடைவெளிவிட்டு, பவ்வியமாக நல்லாசானைக் கண்டுகொள்ளும் ஞானத்தாகமுள்ள சீடர்கள் போல் நின்றுகொண்டிருந்தார்கள். அவர் அவர்களிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்.

கோபமாக வெளியே வந்த மாலா மாலா தனது டிரைவரைத் தேடி அங்குமிங்கும் பார்த்தபோது இந்தக் காட்சி. குறிப்பாக அந்த ஆறேழடி இடைவெளி.

அவனுக்கு எப்போதோ படித்தது பளிச்சென்று ஞாபகத்தில். டால்ஸ்டாய் தனது அரண்மனை போன்ற மாளிகையைத் துறந்து, ஒரு கிராமத்து ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டுக் கட்டிலில் மரணப் படுக்கையில் கிடந்தபோது, அவரைப் பார்க்க வந்தவர்கள், ஆர்வம் ஓங்கிடவும், அதே நேரத்தில் அவருக்குத் தொந்தரவாகிவிடக்கூடாதே என்பதற்காகவும், ஒரு மரியாதைக்குரிய தூரத்தில் – **at a respectable distance**– நின்று எட்டிப்பார்த்ததாக அதில் எழுதியிருந்தது.

தனது காரில் ஏறி உட்கார்ந்த மாலா மாலா அது புறப்பட்ட போது முணுமுணுத்தான்: **at a respectable distance...** ●

படிப்பகம்

www.padippakam.com



51ஆம் பக்கத் தொடர்ச்சி—

## குடியும் வியாபாரமும்

இவ்வளவுக்குப் பிறகும் 'ஒவ்வொரு கூட்டத்திலும் நண்பர்கள் அண்ணாச்சியை உரக்கக் கூவி உற்சாகத்துடன் அழைப்பது' ஏன் என்று உங்களுக்கு விளங்கவே இல்லை. விக்கிரமாதித்தன் ஏற்படுத்தும் சலசலப்பில் உங்கள் 'கவனம் சிதறி கனவுகள் கசங்கும்' படி ஆகிறது. உங்களை வழிநடத்தும் ஆதிக்க மனமும் நீங்கள் போற்றும் ஒழுக்கவாதமும் உங்கள் மன நலத்தைக் கேள்விக்குள்ளாக்குகின்றன. அந்த நண்பர்கள் இயல்புவாதிகளாய் இருப்பதால் சிறுபொழுது களியாட்டத்தை ரசித்துவிட்டு 'குடிகாரன் பேச்சு போதை தெளிந்தால் போச்சு' என்று போகிறார்கள்.

விக்கிரமாதித்தனின் வாழ்நாளிலேயே அவர் கவிதைகளை ரசிக்க என்.டி. ராஜ்குமார் போன்றவர்களும் இருக்கிறார்களே; அவர்கள் நல்லவர்கள்.

ஜி. நாகராஜனை அறிவீர்கள்தானே. உங்கள் அப்பாவிடமே அதிகமாய்க் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்— இலக்கிய நயம் சொட்டச் சொட்டப் பிழிந்து வைப்பார். அவரோடு ஒப்பிட்டால் விக்கிரமாதித்தன் உறை போடக் காண மாட்டார். குடிகாரர், பொம்பளை பொறுக்கி, அழுக்குப் பிறவி, உங்கள் ஒழுக்கக் கவசத்தை முற்றாக உடைத்தெறிந்தவர். குப்பை மனிதராக, குப்பைத் துணிகளோடு நள்ளிரவிலும் சென்று நண்பர்களின் வீட்டுக் கதவைத் தட்டுகிறவர்; குடிக்கக் காசு கேட்டுத்தான. நண்பர்கள் சிலர் பதறிப்போய், அவரைக் குளிப்பாட்டி, புதுத்துணியளித்து, உண்ண வைத்துக் காசு கொடுத்தனுப்புவார்கள் மூன்றாம் நாள் அதே பழங்குப்பையாய் வந்து நிற்பார். "இனிமேல் வீட்டுப்பக்கம் வர வேண்டாம்" என்று நொந்து சொன்னவர்களும் உண்டு. தங்கள் வீட்டுப் பெண்களிடம் வசவு கேட்கப் பிரியப்படாமல்தான். உடைந்து சிதறிப்போன அவருக்காக உருகிக் கசிந்த நண்பர்கள் தாம் உண்டு. உங்களைப்போல் வெட்கிச் சிறுத்தவர்களும் இரண்டொருவர் இருக்கக்கூடும். ஆனால் நீங்கள்தான் அந்தக் குடிகாரனின்— ஒழுக்கக்கேடனின் எழுத்துகளையெல்லாம் தொகுத்துப் போட்டுக் காசு பண்ணினீர்கள். வியாபாரம் என்று வந்துவிட்டால் 'குடி'யெல்லாம் ஒரு பொருட்டே அல்ல. குடிகாரர்களின் சேவை உங்களுக்குப் பலன் தரும் என்றால் பரந்தமனத்தோடு அவர்களை அரவணைத்துப் பெற்றுக்கொள்வீர்கள்.

யார் கண்டார்கள் 'வெட்கமில்லாத' விக்கிரமாதித்தன் எழுத்துகளையெல்லாம் அவர் காலத்துக்குப் பிறகு (குடிகாரர்கள் குறை

படிப்பகம்

www.padippakam.com



வயதிலேயே போய்விடுவார்கள் என்பதுதானே ஒழுக்கவாதிகளின் நம்பிக்கை?) நீங்களே தொகுத்து வெளியிட்டு, பணம் பண்ணி, காப்புரிமைத் தொகை கொடுத்து, அவர் குடும்பத்தைத் தாங்குவதாகப் பீற்றிக்கொண்டாலும் கொள்வீர்கள். விக்கிரமாதித்தன் எழுத்துக்கு இயல்பாக இருக்கும் வணிகச் செலாவணியோடு, உங்கள் இலக்கியப் பூசாரிக் குடுப்பம் கைவசம் வைத்திருக்கும் தரமுத்திரையையும் கொண்டு வணிக சந்தையை வளைக்க மாட்டீர்களா என்ன?

அண்மைக் காலங்களில் தலித்தியக் கருத்தியல் பெரும்பேச்சாகப் பரவி வருவதால், 50 ஆண்டுகளுக்கு முன் கு.ரா. மொழி பெயர்த்த 'தோட்டிமகன்' தலித்திய நாவலாகப் புதுப்பெயர் பெற்று விற்கட்டுமே என்று முதல் முறையாக நீங்கள் நூல் வடிவில் கொண்டு வரவில்லையா? ராஜ்கௌதமன் சொல்ல வருவதும் அதைத்தானே? ராஜ்கௌதமன் என்னும் தலித் கருத்தியல்வாதியை வலைத்துப் போட்டாற்போலும் இருக்கும், வணிகம் புரிவதற்குப் புதிய பரப்புகளைக் கண்டடைந்தாற்போலும் இருக்கும் என்றுதானே அவருடைய பின்னுரையுடன் 'புளியமரத்தின் கதை'யை மறுபதிப்பு செய்கிறீர்கள். நடப்பில் தலித்தியம் உகந்த விஷயமாய் இருப்பதன் பொருட்டு ரவிக்குமாருக்கு ஒவ்வொரு இதழிலும் சில பக்கங்கள் ஒதுக்கித்தருகிறீர்கள். பாவனைப் பிரச்சினைகளுக்கெல்லாம் ஒரு மயிரிழையை நூறு கூறுகளாகப் பிளந்துகாட்டி விமர்சித்து மகிழும் உங்கள் வாசகர்கள் அவர் எழுத்தையெல்லாம் பெரிதாகக் கண்டு கொள்வதில்லை– அல்லது கண்டுகொள்வதாக நீங்கள் காட்டிக் கொள்வதில்லை. ராஜ்கௌதமனும் ரவிக்குமாரும் காலச்சுவடுவின் ஆஸ்தான பங்களிப்பாளர்களாக இருப்பதன்மூலம் தலித்தியக் கருத்தாடல்களும் கருத்தாக்கங்களும் இதுவரை தொட்டடையாத புதிய பரிமாணங்களை வென்றெடுத்துச் செழுமையுறும் என்றால் இரட்டிப்பு மகிழ்ச்சிதானே. அல்லாமல், அவர்களது இயக்கப் பண்பு மேட்டிமையாளர்களின் இருத்தல் பண்புக்கு இணையாக உறுதி செய்யப்பட்டால் அதுவும் நல்லதுதானே. எது எப்படியாயினும் காலச்சுவடு நிறுவனத்தின் இருப்பையும் இயக்கத்தையும் தூக்கிப்பிடிக்கிறவர்கள் பெரும்பாலும் – மீண்டும் அ. மார்க்சின் சொல்லாடலில் – பார்ப்பன, வெள்ளாள மனோபாவிகள் (சாதிகளல்ல – இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை) தானே.

## அதிகார மையமும் எதிர்க் குரலும்

விக்கிரமாதித்தனைவிட அதிகமாகவே உங்கள் வெறுப்புப் பட்டியலில் பேராசிரியர் வீ. அரசு அடிக்கோடிடப்பட்டவராகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



அதன்மூலமாக உங்கள் அடையாளம் இன்னும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ஒரே இதழில் உங்கள் பெயரிலும், மனுஷ்யபுத்திரன் பெயரிலும், ஒரு வாசகர் பெயரிலுமாக மூன்று மூக்குகளில் அவரை மடக்கித் தாக்கிக் காயப்படுத்த முயன்றிருக்கிறீர்கள். சென்னை வாசகர் பெயரிலான அந்தக் கடிதத்தின் மொழியும் வெளியும் உங்கள் கைபண்டுகத்தை ஐயத்துக்கிடமின்றி உறுதி செய்கின்றன.

நீங்கள் ஒழுங்கு செய்கிற கூட்டங்களில் குறுக்கிட்டுப் பேசுகிறவர்களை, குரலை உயர்த்துகிறவர்களைக் கண்டால் உயிர்வாதைப்படுகிற அசுணப்பிறவியாக உங்கலைப் பாவித்துக்கொள்கிறீர்கள். அது பாவனையல்லாமல் வேறென்ன?

அரசு ருத்ரதாண்டவம் ஆடினதாகச் சொல்கிறீர்கள். அவர் ஒரு நாடகப் பிரியர். ருத்ரதாண்டவம் கற்றிருந்தால் பெரிய விஷயம்தான். ஆனால் அதை ஆடியதற்கான 'இடம்–பொருள்–ஏவல்' என்ன என்பது வாசகனுக்குச் சொல்லப்படவில்லை. குறைந்தபட்சம் 'தமிழ் இனி 2000'இல் கலந்துகொண்ட பெரும்பாலோருக்காவது தெரியுமா என்பதும் உறுதியில்லை. அவர் அழைப்பில்லாமல் கலந்துகொண்ட 'தான்தோன்றி'யாய் இருக்கமாட்டார் என்பது மட்டும் நிச்சயம். கலந்துகொள்பவர்கள் காலச்சுவடுவின் நிலைப்பாட்டை மீறக்கூடாது என்று அழைப்பிதழில் ஒரு குறிப்பும் இல்லை. இந்நிலையில் கருத்துப் பறிமாற்றப் புள்ளிகள் பற்றி ஒரு குறிப்பும் இல்லாமல் 'கத்தினார், ஆடினார்' என்பதெல்லாம் என்ன அர்த்தத்தில்? ஆதிக்கவாதியிடம் பதில் இல்லாதபோது அதிகாரம் இருந்தால் கைநீட்டி அடிப்பான்; அது இல்லாதபோது 'என்ன இப்படிக் கத்தறான், காட்டுமிராண்டியாட்டம்' என்பான். இதுவும் அப்படித்தானா?

எதிர்க்குரல் எழுப்புகிறவர்களைக் 'கலகக் கண்மணிகள்' எனக் கிண்டல் செய்கிறீர்கள், அதன் மூலம் அவர்களைக் கழகக் கண்மணிகளின் வகையினமாக்கிக் குதூகலமடைகிறீர்கள். அரசியல் என்று வந்துவிட்டால் ஆர்எஸ்எஸ் தேசபக்தர்களாகட்டும், கோசம்ரட்சண சேவார்த்திகளாகட்டும் கழகக் கண்மணிகளைத் தூக்கிச் சாப்பிடுகிற கடைந்தெடுத்த கழிசடைகள்தாம் என்பதை நீங்களும் அறிவீர்கள். ஆனாலும் கழகக் கண்மணிகளை நக்கிச் சுவைத்தால்தான் உங்களைப் போன்றவர்களின் உப்புச்சுவை தன் முழுமையை எட்டுகிறது. கழகக் கண்மணிகள் தங்கள் அறியாமையால் கண்ணியவான்களாகின்றனர். உங்களைப் போன்ற குசும்பர்களைக் கண்டுகொள்ளாமல் விடுகின்றனர். அதனால்தான் இப்படி கழிசடைத்தனமாக அவர்களை நையாண்டி செய்திட முடிகிறது. இந்த அருவருக்கத்தக்க குசும்பை விடவா செந்தில்நாதனுடைய

படிப்பகம்

www.padippakam.com



“உனக்கு அறிவிருக்காடா?'' என்னும் கேள்வி அசிங்கமாய்ப் படு
கிறது! எவனுக்கு என்ன பதில் என்பதைத் திருப்பியடிக்கிறவன்
தான் தீர்மானிப்பான். குரோதங்களில் மகிழ்ந்திருக்கும் ஆச்சார
பாவங்களும் அடிவருடிகளை அரவணைக்கும் ஒழுக்க சீலங்களும்
அவனுக்கு காறித்துப்பிவிடக் கூடிய கபச்சீழ்தான்.

நீங்கள் சில அமைப்புகளின் பெயர்களைப் பட்டியலிட்டு, அங்
கெல்லாம் சென்று இவர்கள் எதிர்க்குரல் எழுப்பிவிடுவார்களா
என்று கேட்கிறீர்கள். அதாவது, இரும்புக்கரம் கொண்டு அடக்கும்
அரசு நிறுவனங்களில், அமைப்பியல் மையங்களில் கேள்வி கேட்க
முடியாதவர்கள் உங்கள் அமைப்பில் கேள்வி கேட்பது உங்களுக்
குப் பிடிக்கவில்லை. இதில் நீங்கள் சொல்ல வருவதென்ன? உங்க
ளுடையதும் அப்படியோர் அமைப்புதான் என்றா? கேள்வி கேட்ட
வர்களின் வாயை அடக்கும்படியான பதில் உங்கள் கைவசம் ஒரு
போதும் இருக்கப் போவதில்லை என்றா?

மார்க்ஸ் ஏற்பாடு செய்யும் கூட்டத்தில் எவரேனும் எதிர்த்துப்
பேசிட முடியுமா என்றும் கேட்டுள்ளீர்கள். அசப்பில் பார்த்தால்
அது ஒரு அசலான கேள்வியாகவே படுகிறது. தத்துவங்களைத்
தகர்ப்பதையே அல்லது கேள்விக்குள்ளாக்குவதையே ஒரு தத்துவ
மாகப் பார்க்க முடியும் எனில் அவர்கள் கூட்டத்திற்கு ஒரு தத்
துவ நோக்கம் உள்ளது. ஆனால் உங்கள் கூட்டத்திற்கு வெளிப்
படையாக வியாபார நோக்கம் தவிர வேறென்ன இருக்கிறது? அப்
படியும் நீங்கள் பதற்றப்படுகிறீர்கள் என்றால் அதற்குக் காரணம்
அவர்களால் கேள்விக்குள்ளாக்கப்படும் உங்களின் உள்ளூறிய
கலாச்சார சனாதனம்தானே. ஒவ்வொருவனையும் ‘இவன் சனா
தனியாக இருப்பானோ’ எனறு சந்தேகிக்கும் உரிமை அவர்களுக்
குண்டு. அவர்களை எதிர்க்கிறவன் இந்தச் சந்தேகத்தைக் கடந்
தவன் எனில் அவனது அச்சமின்மையை அவமதித்தார்கள்
என்றோ, அல்லது காலச்சுவடுவில் நீங்கள் செய்வதைப் போல்
இடைவிடாமல் குரைத்தார்கள் என்றோ உங்களால் மெய்ப்பிக்க
முடியுமா? கலைந்த மனத்தின் அற்பத் தருணங்கள் நிகழ்த்தும்
தப்பிலித்தனங்களையும் சில்லறைக் குணங்களையும் தத்துவப்
போர்களாகத் திரித்துப் பரப்புகிறவன் எரிகிற வீட்டில் பிடுங்கிய
வரை ஆதாயம் பார்ப்பவனாகத்தான் இருப்பான்.

உங்களுடையதை ‘மாற்றுக்களம்’ என்று சொல்லிக்கொள்கி
றீர்கள். எவ்வளவு பெரிய மோசடியான பெயரில் நடக்கும் வியா
பாரம் இது! எளிய கேள்விகளைக் கூடச் சகித்துக் கொள்ளாத
களம் எப்படி மாற்றுக்களமாகிறது? இது அதிகாரத்தோடு தன்னை
ஐக்கியப்படுத்திக்கொள்ளும் களம். மாற்றம் கோரும் கேள்விகளை

படிப்பகம்

www.padippakam.com



முற்றாகப் புறக்கணிக்கும் சூழ்ச்சிக்களம். இந்தப் பெயரிடலில் கூட அ.மார்க்சின் களத்திற்கான பெயரைத்தானா திருடிக்கொள்ள வேண்டும். மார்க்ஸ் போன்றவர்கள் சமூகத்தின் தூக்கத்தைக் கலைக்கும் செயல் ஊக்கிகள். பிறரைச் சிந்திக்க வைப்பதையே தங்கள் சிந்தனையாகக் கொண்டவர்கள் குறைந்த பட்சம் அதிகார மையங்களை அடையாளம் காட்டி மக்களின் அறச்சீற்றத்தைத் தட்டியெழுப்புகிறவர்கள். மின்மினி அளவேயாயினும் சுய வெளிச்சம் கொண்டவர்கள். ஆனால் நீங்களோ உங்களையொத்தவர்களோ வெறும் ஈயப்பூச்சுக்காரர்கள். மனித குலத்தைப் பின்னோக்கி இழுத்துச் சென்று முதுமக்கள் தாழியில் முடக்கிவைத்து அழகு பார்க்கிறவர்கள். நீங்களும்கூட உங்களை சிந்தனையாளர்கள் என்றே பறை சாற்றிக் கொள்கிறீர்கள். மேதகு பிராமணச் சிந்தனைச் செம்மல் 'சோ' ராமசாமி இல்லையா? இலக்கியத் தோல் போர்த்திக்கொண்டு அவர் போலும் எத்தனை சாமிமார்கள் உலவுகிறார்கள என்பது எப்போதும் எங்களை அதிர்ச்சியுறத்தான் செய்கிறது. குரலுயர்த்திக் கத்தச்சொல்கிறது. ஆனால் நீங்களோ, தயாராகக் காத்திருக்கிறீர்கள் 'கலகக் கண்மணிகள்' என்னும் பட்டத்தோடு. 'களிப்பும் லகரியும் தந்த' உங்கள் அனுபவத்தைக் கத்திச் சிதறடித்தமைக்காக நீங்கள் கருணையோடு வழங்கும் பட்டம் அது.

## கவிஞனும் அருவருப்பும்

மனுஷ்யபுத்திரன் தன் பங்குக்கு அரசுவை ஊனப்படுத்தி மகிழ்கிறார். அரசுவுக்கு எதிராகத் தான் தொகுக்கப்போகும் குற்றச்சாட்டுகளுக்குக் கூடுதல் அழுத்தம் கொடுக்கும் விதமாக, "சமீபத்தில் கூட்டங்களில் பேச்சாளர்களை நோக்கி ஆவேசத்துடன் ஓடி வந்துகொண்டிருக்கும் டாக்டர் வீ.அரசு" என்று அறிமுகப்படுத்துகிறார். இதற்கு முன் 'தமிழ் இனி 2000'த்தில் ருத்ரதாண்டவம் ஆடினார் என்று நீங்கள் குறிப்பிட்டது தவிர வேறெதுவும் அவருக்கெதிராகப் பதிவாகவில்லை. ஒரு செயலானது வழக்கமாகக் கருதப்பட, குறைந்தது மூன்று தடவைகளாவது ஒன்றுபோல நிகழ வேண்டும் என்பது அறிவியல் சோதனைக்கூட நியதி. ஆனால் ஒரே நிகழ்வை மட்டுமே ஆதாரமாக வைத்து அரசுவின் 'வழக்கத்தினை' நிர்ணயிக்கிறார் எனில், இந்தக் கவிஞர் எத்தனை முடக்கு மயிர் முளைத்தவராக இருக்க வேண்டும்! காலச்சுவடு அவருக்குக் கற்றுக்கொடுத்தது இந்த நரிக்குணம்மட்டும்தான் எனத்தெரிகிறது.

"பிரபஞ்சன் பேசும்போது 'இங்கு ஆசிரியர்கள் டாக்டர் பட்டம் பெற்றதும் செத்துப்போய்விடுகிறார்கள்' என்று கூறியதும் வீ.

படிப்பகம்

www.padippakam.com



அரசு சத்தம் போடத் தொடங்கினார்'' என்கிறார். சத்தம் என்றால் சொல்லற்ற சத்தமா? ஆடு மடக்குகிறவன், பன்றி மேய்க்கிறவன், ஊர்காலியைத் திரட்டுகிறவன் — அவன்தான் சொல்லற்ற சத்தம் போடுவான். அதுகூட அவனுடைய விலங்குகளுக்குப் புரியும் மொழியில்தான். அரசு எந்த விலங்குகளைப் பார்த்து சத்தம் போட்டார்? ஞாநி கேட்டுக்கொண்டபடி விவாத நேரத்தில் பிரபஞ்சனைக் கேட்கவும் செய்திருக்கிறார். அதையே குற்றமாக்குகிறார் மனுஷ்யபுத்திரன். பிரபஞ்சனின் ஓர்மை பற்றி இலக்கிய வட்டாரம் ஓரளவு தெரிந்திருக்கும். ஞாநியைக் கேட்டால் கதை கதையாய்ச் சொல்லுவார். வீ.அரசுவுக்கும் அது பற்றித் தெரிந்திருக்கும். அவரைப்போன்ற ஒரு போலி ஆளுமையாளர், சந்தர்ப்பவாதி அல்லது பிழைப்பியல்வாதி நகைச்சுவை என்னும் பெயரில் நையாண்டி செய்தால் எந்தப் பேராசிரியனும் பொறுத்துக்கொள்ள மாட்டான். காலச்சுவடு நிறுவனச் சேவகம் காரணமாக மனுஷ்யபுத்திரனுக்குப் பிரபஞ்சனைப் போற்றி செய்வது பூரிப்புக்குரியதாய் இருக்கக் கூடும்.

இதே நிகழ்வைப் பற்றி 'சதங்கை'(ஜன – மார்ச் 2001)யிலும் தொகுக்கப்பட்டுள்ளது. ''பிரபஞ்சன் நகைச்சுவை கலந்து தொடங்கிய பேச்சு பார்வையாளர் ஒருவரின் கோபத்தால் சீரியஸாக மாறியது,'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைத்தான் மனுஷ்யபுத்திரன் தன் ஞானாதிக்க போதத்தோடு மவினப்படுத்தியுள்ளார். மேலும், ''சுந்தரராமசாமியை ஒரு மதவாதியாகவும் தமிழ் விரோதியாகவும் காட்ட பரிதாபமான முயற்சிகளில் ஈடுபட்டார்,'' என்கிறார். ஒருவேளை இதனால்தான் அவருக்கு அரசுவின் மேல் அவ்வளவு சீற்றமோ? இது ஒருவகை விசுவாச வெளிப்பாடு. காலச்சுவடு கண்ணும் கருத்துமாக வெகுநுட்பத்தோடு போதித்து வரும் விசுவாசம்.

ஒருசமயம் திணை இதழில் (ஞாபகத்திலிருந்து) ஒரு நண்பர் 'இஸ்லாத்தின் மீதும் இஸ்லாமியர்கள் மேலும் இவ்வளவு இளக்காரமான எண்ணங் கொண்ட சுந்தரராமசாமியிடம்தான் மனுஷ்யபுத்திரன் என்னும் அப்துல் ஹமீது நெருடலின்றி இருந்துகொண்டிருக்கிறார்' என்னும் பொருளில் மனம் நொந்து சொல்லியிருந்தார். மனுஷ்யபுத்திரன் நன்கு அறிந்திருப்பார். தமிழின்மேல் உங்களுக்கெல்லாம் உள்ள அளப்பரிய காதலால்தான் மொட்டை தாதன் குட்டையில் விழுந்தான் என்றாற்போல் சம்பந்தமே இல்லாமல் ''தமிழின் மரணம்'' என்று தலைப்பிட்டீர்கள் அல்லவா? மதவாதி என்றால் ஆடைக்குள்ளேயும் வெளியேயும் புறச்சின்னங்கள் தரித்து, தொழுகைகள் புரிந்து, சுலோகங்கள் ஓதி, அரைக்கண்ணால் லோக க்ஷேமங்களை வேண்டினால்தானா? இவ்விஷயத்தில் சொல் என்

படிப்பகம்

www.padippakam.com



பது நவீனத்திருடர்களுக்கு சொல்லாமல் இருக்கத்தான். நுணுகிப் பார்த்தால் ஒலிக்குறிப்பும் உடல்குறிப்புமேகூட உகந்த சாட்சியங்களாகலாமே.

ஒருவன் மதவாதியா, அல்லனா என்பதை அறிய தலித்துகளின்மேல் அவனுக்குள்ள கவனம் அல்லது கவனமின்மைகூட நல்ல சாட்சியமாகலாம். தமிழ்நாட்டில் கடந்த பத்தாண்டுகளாக தலித்தியம் ஓங்கிப் பேசப்படுகிறது. இதில் சுந்தரராமசாமியின் பங்களிப்பென்ன? இந்த நாட்டின் ஈனத்தனமான சாத்திரச் சாட்டைகளுக்கு ரணசாட்சியாக வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் தலித்துகள். அவர்களைப் பற்றி அபிப்பிராயம் கொள்ளாமல், தான் உணராக் காரணங்களோடு கூடிய அசிரத்தையில் ஒருவன் இருக்கக் கூடும் எனில், அவன் அந்த ஈனச்சாத்திரத்தை நெஞ்சில் சுமக்கிறவன் என்பதல்லாமல் வேறென்ன?

மனுஷ்யபுத்திரன் மேலும் சொல்கிறார்: "கு.ரா.வின் தமிழ் விரோதத் தன்மைக்கு சாட்சியமாகப் புத்தகத்திலிருந்து அங்கொன்றும் இங்கொன்றுமாக சொற்களை உருவி பொய்யான வாக்கியங்களை உருவாக்கினார்," என்று. 208 பக்கங்கள் உள்ள நூலில் தற்செயலாகவெல்லாம் சொற்களை உருவிவிட முடியாது. அதாவது, அவர் விவாதத்துக்குப் போதுமான ஆயத்தங்களோடே வந்திருந்தார் என்பது புலனாகிறது. இதை சதங்கை இவ்வாறு சொல்கிறது: "இந்த விமர்சன அரங்கில் சுந்தரராமசாமியின் வருகை நிகழ்ந்திருந்தால் தனக்குச் சாதகமான பதில்களை வரவழைக்கும் கேள்விகளையே முன்வைத்தார் என்ற பார்வையாளர் ஒருவரின் குற்றச்சாட்டுக்கான பதிலை அவரே தந்திருக்கக்கூடும்."

மனுஷ்யபுத்திரனேகூட அரசுமேல் குற்றம் சொல்வதை விடுத்து அவர் எழுப்பிய கேள்விகளைத் தொகுத்து, சுந்தரராமசாமியிடம் அளித்து, அவற்றுக்கான விளக்கங்களைக் கேட்டுப் பெற்று வெளியிட்டிருக்கலாம். ஆனால் அவருக்குக் குறைசொல்லலே பெரிதாய்ப்படுகிறது.

அரசுவைப்பற்றி அவர் மேலும் சொல்லும்போது, "இந்தப் புத்தகம் கல்வியை ஒரு மதமாகப் பார்க்கிறது என மொட்டையாக" அறிவித்தார் என்கிறார். மனுஷ்யபுத்திரனே தன் செய்தித் திரட்டில் "புத்தகத்தைப்போலவே விமர்சன அரங்கும் சிதறலானதாக அமைந்திருந்தது என்கிறார். இதுவும் ஒரு மொட்டையான அறிவிப்புதான். இதற்கான அர்த்தம் புத்தகத்தின் போக்கு நேர்த்தியிலிருந்து கிடைக்குமானால், அரசுவின் கணிப்புக்கும் அதன் சந்து பொந்துகளில் எதிரொலிக்கும் தொனி நேர்த்தி அர்த்தம்

படிப்பகம்

www.padippakam.com



கொடுக்கும். அதை மனுஷ்யபுத்திரன் அறியமுடியவில்லை எனில் அது அவரது அகந்தை அல்லது மௌடிகம். மேலும் அரசு அவரைப் பார்த்து, "நீங்கள் கவிதை எழுதுங்கள். கல்வியைப் பற்றி எழுதாதீர்கள்," என்று கூறியதுடன் அவரது "மொழிநடையையும் குரலையும் மிமிக்ரி செய்து காட்டினார்," என்கிறார். "இத்தகைய அருவருக்கத்தக்க காட்சியை நான் இதற்குமுன் சந்தித்ததில்லை," என்று அரசு புராணத்தை முடிக்கிறார்.

மனுஷ்யபுத்திரன் தன் வாழ்வில் அருவருக்கத்தக்க சில அன்றாடச் செயல்பாடுகளை இயல்பாக்கிக்கொள்ள முடிந்திருந்தாலும் தன் உள்ளத்தை மட்டும் மென்பட்டு மாதிரி, ஊதினால் கன்றிவிடும் மெல்லிதழ் பூமாதிரி வைத்திருக்கிறார் என்று படுகிறது. வாழ்க. ஆனால் அரசு சொல்லிய இந்த மொழி பற்றி யாராவது சொல்லித்தான் ஆகவேண்டும். மனுஷ்யபுத்திரன் என்றில்லை, ஏறக்குறைய நம் இளம் கவிஞர்கள் அவ்வளவு பேரும் தங்கள் கட்டுரையிலும், கலந்துரையாடலிலும் வேற்றுப்பொருள் விஷயங்களிலும்கூடத் தங்கள் கவிதை மொழியிலிருந்து வெளிவருவதே இல்லை. எளிதாகவும் நேர்படவும் சொல்லித் தீரவேண்டியதைக்கூட தங்கள் மொழி வலைப் பின்னலுக்குள் போட்டு மூச்சு முட்ட வைக்கிறார்கள். இப்படியொரு பிரச்சினை உணரப்படுகிறது என்று அரசு போன்ற ஒருவர் சொன்னால் மனுஷ்யபுத்திரன்கள் நன்றியோடு பரிசீலித்திருக்கலாம். ம.புத்திரனை நல்ல கவிஞனாகத்தான் இந்தச் சத்தத்திலும் கவனப்படுத்தியிருக்கிறார் அரசு. அவரது முதல் கவிதை நூலுக்கு முதல் விமர்சனமாக மிகவும் உற்சாகம் கொள்ளும் விதத்தில் இந்த அரசுதான் கவிதாசரணில் எழுதினார். மனுஷ்யபுத்திரனும் மனமுருகி நன்றி சொல்லிக்கொண்டிருந்தார். காலச்சுவடுகள் ஒன்றன்மேல் ஒன்று மிதிபடுவதில் சலனங்களும் சத்தங்களும் புதிய தொனி மயக்கில் கலங்கிக் குழம்பிவிட்டன.

## Marginal Scribbling

ஒருவேளை அரசு அவர்கள் அதே குறுக்கீட்டையும் குரல் ஓச்சத்தையும் பாய்ச்சலையும் பயன்படுத்திக் காலச்சுவடு நிறுவனத்தையும் சுந்தரராமசாமியின் மேதைமையையும் உச்சிமோந்து பாராட்டியிருந்தால் நீங்கள் எப்படி எதிர்கொண்டிருப்பீர்கள் என்று நினைத்துப் பார்க்கத் தோன்றுகிறது. 'பசுவைக் காக்கிறேன் பேர்வழி' என்றால், தாமரைக்கனிகளைக்கூட இராமகோபாலன்களும் சங்கராச்சாரிகளும் உச்சி மோந்து நக்கிக் கொடுப்பதில்லையா. எல்லாம் அவரவர் பயனுக்கேற்றபடிதான்.

படிப்பகம்

www.padippakam.com



உங்களோடு முரண்படுகிறவர்களைப்பற்றிய உங்கள் எல்லாக் குறிப்புகளும், குதறல்களும் புத்தகத்தின் ஓரங்களை நிரப்பும் விடலைக் கிறுக்கல்கள்தாம் என உணர்ந்தால் நலம். ஓரக்கிறுக்கல்கள் அடிப்படையில் அழகைக் கெடுப்பவை. தனி மனித குணதோஷங்களின் எதிரொலிப்பு. அது எப்போது சகிக்கும்படியாய் இருக்குமெனில், நூலின் மையக்கருத்து பற்றிய விருப்பு வெறுப்பற்ற விமர்சனமாய் இருக்கும் பட்சத்தில். இவற்றில் எந்த அம்சத்தோடு உங்கள் குறிப்புகள் ஒத்துப்போகின்றன என்பதை நீங்கள்தான் பரிசீலிக்க வேண்டும். இந்த வகை ஓரஞ்சாரங்கள் நட்பு வட்டத்தின் தனிப்பேச்சுக்கு நல்ல தீனியாகலாம். எழுத்தில் அதற்கு இலக்கிய அந்தஸ்து கொடுக்கும்போது, கொடுக்கிறவனின் உள்நோக்கங்களை அம்பலப்படுத்துவது அவசியமாகிவிடுகிறது. பரம யோக்கியர்களைப் போலப் பம்மாத்து பண்ணுகிறவர்களை ஒரு பிடி பிடிப்பது வீ.அரசுவுக்குப் பிடித்தமான காரியந்தான். ஆனால் தாக்குண்டவர்கள் நாகரிகப் பழக்கம் பற்றிய தங்கள் தவளைக் கத்தலை நிறுத்திவிட்டு சரியான விடையோடல்லவா எதிர்த்தாக்குதல் புரியவேண்டும். கருத்தியல் களத்தின் விரிவும் செழுமையும் அப்போதுதான் பெறப்படும்.

## மையமும் மௌனமும்

கடைசியாக, அந்தக் கடிதம் இருக்கிறதே – அது நிச்சயமாக நீங்கள் வடிவமைத்துதான் – வெட்கமில்லாமல் சத்தம் போடுகிற குடிகாரனாக அவரைச் சித்தரிக்க முயல்கிறது. வீ.அரசுவை ஆத்திரக்காரர், அவசரக்காரர், தடாலடிப் பேச்சாளர், நின்று நிதானிக்காதவர், எதையும் யாரையும் சர்வ அலட்சியமாய் அணுகுகிறவர் என்று எதனை வேண்டுமானாலும் சொல்லலாம். ஏனெனில் ஒவ்வொரு மனிதனுமே ஒருகட்டத்தில் இப்படியாக வெளிப்படும் சாத்தியக்கூறுள்ளவன்தான். மனிதனுக்கு மனிதன் வேறுபடும் அடிநிலைப் படிமானங்கள் அவை. எதிராளிகளின் மதிப்பீட்டில் அவை திருந்தாப் பழக்கங்களாகத் தெரியலாம். ஆனால் அறிவுள்ளவன் அவற்றைக் கடந்துதான் அடுத்தவனோடு பழகுகிறான்; விஷயங்களோடு நெருங்குகிறான். எனில் நீங்களோ, விஷயம் பற்றிய விவாதத்துக்குள் புகாமலேயே அவரை வெறும் சத்தமாக்க முயல்கிறீர்கள்.

ஒன்று மட்டும் நிச்சயம். அடிப்படையில் அவர் நீங்களல்ல.

ஒரு நிறுவனத்தின் இளம் முதலாளி. தன் தொழிலுக்கு உதவி செய்யக்கூடிய ஒருவனைத் தன் வீட்டோடு தங்கவைத்துப் பராமரிக்கிறான். உதவுகிறவன் பெண் துணையில்லாதவன்; குடிகாரனும்

படிப்பகம்

www.padippakam.com



கூட. ஒருநாள் முதலாளி ஊரிலில்லாதபோது, 'தண்ணி' மயக்கத்தில் முதலாளியின் ஆம்படையாளைத் தொட்டுவிட்டான். அவள் போட்ட பத்தினிக் கூச்சலில் வீட்டு வேலைக்காரர்கள் திரண்டுவந்து விஷயமறிந்து, அவனை நாலு சாத்து சாத்தி விரட்டியடித்துவிட்டனர். முதலாளி திரும்பிவந்து, விஷயமறிந்ததும் அவனைத் தேடிச் சென்று, "சாரி. நடந்ததுக்கு மன்னிப்பு கேட்டுக்கிறேன். உங்க மேல கை வச்சது தப்பு. சாரி. உங்களோட நிலை தெரிந்திருந்தும் வீட்டில் தங்க வைத்ததும் என்னோட தப்புதான். இனிமேல் தங்கினால் நன்றாயிராது. வெளியில் தங்கிக்கொள்ளுங்கள். நான் பொறுப்பேற்கிறேன். எப்போதும்போல உங்கள் பணி தொடரட்டும்," என்றான்.

இது ஒருவகை நாகரிகம்; வணிக நலன்களோடு கூடிவரும் நாகரிகம். உங்களுக்குச் சரியென்று படும்தானே. படலாம். படும். ஆனால் அரசு இருக்கிறாரே, அவர் வம்சத்திற்கு இது சரிப்படாது. வேலைக்காரர்கள் விஷயத்தைச் சொன்னதும், "ஏன்டா மடையன்களா, அடிச்சிட்டோம்னு சொல்லிட்டு நிக்கிறீங்களேடா. அருவாள எடுத்து சீவியிருக்க வேணாமா?" என்று எகிறுகிற பரம்பரையைச் சேர்ந்தவர். மெருகில்லாத பரம்பரை, இல்லை? மெருகு பெற்ற பரம்பரையிடமிருந்து பிடிவாதமாகச் சில விஷயங்களை உள்வாங்க மறுக்கும் மெருகை ஏற்காத பரம்பரை. சீவி விடுவதுதான் தீர்வா என்றால் அதுவல்ல. அது அவர்களின் மானாபிமான வெளிப்பாடு. அப்படிப்பட்ட பரம்பரையிலிருந்துதான் அ.தே ஆக்ரோஷத்தோடும் அறிவின் துணையோடும் அரசு போன்றவர்கள் மாற்றுக்களத்தைக் கட்டமைக்க முன்வந்து முயல்கிறார்கள்.

ஆனால் நீங்கள்? மாற்றுப் பண்பு என்பது இன்னும் உங்கள் அகராதியில் ஏற்றப்படாத சொல். மாற்றம் தேடும் 'கலகமொழி,' 'அதிகார எதிர்ப்பு,' 'உடைப்பு' போன்ற சொற்களெல்லாம் உங்களுக்கு 'புல்டோசர்' வார்த்தைகள். அப்படியொரு நக்கல். மாற்றத்தை மருந்துக்கும் தொடாத அழுகுணி அம்மாஞ்சிகள் என்பதை இதைவிடத் தெளிவாக இன்னும் எப்படித்தான் உங்களால் பிரகடனப்படுத்த முடியும். இதில் 'மாற்றுக்களம்' என்னும் பெயரில் 'களிப்பும் லகரியும்' மிக்க அனுபவத்துக்குச் சொந்தக்காரர் நீங்கள். எத்தனை அடாவடித்தனம்! ஆனால் அதனை மறந்து எதிர்க்குரல் எழுப்புகிறவர்களை அடாவடிகள் என்று முத்திரை குத்துகிறீர்கள்.

அதிகார மையங்களோடு தங்களை அடையாளப்படுத்திக்கொள்கிறவர்கள் முன்னெடுக்கும் மௌனமானது கலகக்குரலை விடத் தீவிரமானது மட்டுமல்ல, தன்னளவில் ஒரு வன்முறை வெளிப்பாடு கூட. நான்கு மாதங்களாக ஈழத்தில் விடுதலைப் புலிகள் போர்

படிப்பகம்

www.padippakam.com



ஒய்வைத் தன்னிச்சையாக அறிவித்து, அமைதிப் பேச்சுக்காகக் காத்திருந்தனர். ''அவர்கள் ஏமாற்றுப் பேர்வழிகள். சிதறுண்ட தங்கள் வலிமையைப் புதிப்பித்துக்கொள்வதற்கே இந்த நாடகம். நாங்கள் சண்டை நிறுத்தத்துக்குத் தயாரில்லை,'' என்று சொல்லிக்கொண்டு, வலியச் சென்று தாக்கி, 160 பேர்களுக்கும் மேலாகக் கொன்று குவித்து அழிவை விதைத்தது சிங்கள ராணுவம். இந்தியா உட்பட எந்த யோக்கியர்களும் வாயே திறக்காமல் மௌனம் காத்தார்கள். ''இனி போர் ஓய்வில் பயனில்லை. நாங்கள் விலக்கிக் கொள்கிறோம்,'' என்று புலிகள் சொல்லி வாய் மூடுமுன் அவர்களைத் தலைதூக்க முடியாதபடி அழித்துவிடத் திட்டமிட்டு, அண்மையில் கொள்முதல் செய்த அதிநவீனப் படைக்கருவிகளுடன் நிலத்திலும் கடலிலும் வானிலுமாக வெறிகொண்டு தாக்கியது சிங்கள ராணுவம். ஆனால் புலிகளின் எதிர்த்தாக்குதலில் நான்கே நாட்களில் 400க்கும் மேற்பட்ட வீரர்கள் கொல்லப்பட்டனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றனர். அந்தப் பேரிழப்பை ஊடகங்கள் உலகளாவிய செய்தியாக ஒலிபரப்பிக்கொண்டிருக்கும் போதே, ''அமைதிப் பேச்சுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. நழுவ விடாமல் பேச வாருங்கள்,'' என்று சந்திரிகா, உங்கள் வார்த்தையில் 'வெட்கமின்றி' அலறினார். இந்தியப் பேரரசு உடனடியாகக் கண் திறந்து, தொடரும் சண்டைக்கு வருத்தமுற்று, பேசித் தீர்க்க யோசனை தெரிவித்தது. அந்த வாய்திறப்புக்கு முந்தைய மௌனம் ஒரு வன்முறையாளனுக்கே உரிய ஆயுதமல்லவா. ஒருவேளை இலங்கை ராணுவம் தான் திட்டமிட்டதுபோல் ஈழப் புலிகளின்மேல் பேரழிவை நிகழ்த்தியிருந்தால், இந்திய மௌனம் ஒரு புன்சிரிப்போடு தொடர்ந்திருக்கும்தானே. மௌனம் பேச்சை விட வன்கொடுமை புரியக்கூடியது என்பது உங்களுக்குத் தெரியும் தானே. உங்கள் மௌனத்தின் சிறகடிப்பு எப்படி சாட்சியமாகிறது என்பதைத்தானே மாய்ந்து மாய்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறேன்!

## காயங்களும் கோபங்களும்

தற்செயலாகவோ அல்லது திட்டமிட்டோ, உங்களால் அகம் பாவத்தோடு காயப்படுத்தப்பட்டவர்கள் அனைவரும் 'புதுமைப்பித்தன் வாசகர் பேரவை' என்னும் பதாகையின் கீழ் ஒன்றுதிரண்டு மேடையேறி முழங்கியிருக்கிறார்கள். திட்டமிட்டே என்பதுதான் பொருத்தமாயிருக்கும். திடீர் கரிசனத்தோடு புதுமைப்பித்தனின் 96ஆம் பிறந்த நாள் என்று பேர் பண்ணிக்கொண்டு காலச்சுவடு நிறுவனத்தோடு நிழல் யுத்தம் புரிந்திருக்கிறார்கள். இந்த நிகழ்

படிப்பகம்

www.padippakam.com



வில் அவர்கள் தங்கள் சமன்நிலையைத் தவறவிட்டிருந்தாலோ அல்லது சொல்லாடலில் கவனம் பிசகியிருந்தாலோ, அந்த அளவுக்கு அவர்களது அமைதியைக் குலைத்திருக்கிறீர்கள் என்பதும் தன்மானத்தைச் சீண்டியிருக்கிறீர்கள் என்பதுமே உண்மை. இது உங்களுக்கு வெற்றியல்ல; அழிவின் பொறி. "நேரடியாக மோதினால் என்ன செய்துவிடுவார்கள்?" என்னும் உங்களின் கேள்வி ஒரு வெற்றியாளனின் ஆளுமை வசனமாயிருப்பதை விட காவல்துறை ஆட்களால் ஓடவிட்டு சுட்டுத்தள்ளப்படும் பேட்டை ரௌடியின் எதிர்க் குரலாக இருக்கக்கூட வாய்ப்புண்டு. அவர்கள் பாவம் காவல்துறை ஆட்களா என்ன. பன்றி விட்டை என்னதான் உன்னத உரமானாலும் அதை விற்கிறவனின் நாக்கு எப்போதும் வாய்க்குள்தான் இருக்க வேண்டும்.

எனக்கு அவர்களது செயல்பாட்டில் சில உடன்பாடின்மைகள் உண்டு. காலச்சுவடு நிறுவனத்தைக் கடுமையாக விமர்சிக்க அவர்களுக்கு எல்லாத் தகுதிகளும் நியாயங்களும் இருப்பினும், அதைப் பொருத்தமான வழிமுறைகளில், அசைக்கமுடியாத தர்க்க நியாயங்களோடும் பதற்றமில்லாத அறிவுத்துறைவைராக்கியத்தோடும் திட்டமிடவில்லை என்பது எனக்குள்ள ஆதங்கம். காலச்சுவடு, தான் செய்யும் அராஜகத்தை சட்டப்படி செய்கிறது என்பதை அவர்கள் கணக்கில் எடுத்துக்கொண்டிருக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் அவர்கள் இளையபாரதியைத் தாங்கி நிற்பவர்களாகத் தங்களை முற்படுத்திக் கொண்டிருக்க வேண்டியதில்லை. இவை யாவும் அவர்களது கேள்விகளின் நம்பகத்தன்மையையே அசைத்துப்பார்க்கிற அம்சங்கள் என்பதை எப்படி அறியத் தவறினார்கள் என்று ஆச்சரியமாயுள்ளது. முயன்றும் நம்மால் அறியப்படாதவர்களாக இளையபாரதியின் நாணயத்தையும் நம்பகத்தன்மையையும் கேள்விக்குள்ளாக்காதவர்களே இருக்கிறார்கள். கமலா விருத்தாசலத்திடமிருந்து அவர் பெற்றது நிரந்தரப் பதிப்புரிமை ஆவணமல்ல என்பதை எந்தப் பாமரனும் அறிவான். புதுமைப்பித்தன் குடும்பத்திற்கு உறவினர் என்பதான தகுதி வழங்கப்பட்டதே அவர் காப்பாற்றிக்கொண்டிருக்க வேண்டிய சிறப்பாக இருந்திருக்கலாம். 'கண்மணி கமலாவுக்கு' நூலின் முதற்பதிப்புக்கு ரூ.3500/– காப்புரிமைத்தொகை வழங்கியிருந்தால் மெய்யாகவே புதுமைப்பித்தன் நினைவுக்கு அவர் செலுத்திய அன்பான காணிக்கைதான். இடையில் சுபமங்களா கொடுத்த பணத்துக்கும் யாராவது நன்றி சொல்லியாக வேண்டும். பொதுவில் 'நம்மவர்' என்பதற்காகப் பன்றிகளையும் ஓநாய்களையும் தோளேற்றிச்சுமப்பது பெருந்தகைகளின் பணியாவதில்லை. வேண்டுமானால் மௌனம் தன் கடமையைச் செய்ய அனுமதிக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



புதுமைப்பித்தன் எழுத்துகள் இன்னும் சிலகாலம் வரை தினகரிக்கு அவர் தந்தை விட்டுச்சென்ற சொத்து. அதை அனுபவிக்க காலச்சுவடு சட்டபூர்வமான வழி வகுத்துக் கொடுக்கிறது. அதை ஒரு காசுகூடச் செலவு பண்ணாமல் விமர்சிக்க என்ன இருக்கிறது? விமர்சிக்க வேண்டியவை காலச்சுவடு நிறுவனம் தன் பதிப்புத் தொழிலை நடைமுறைப்படுத்துவதிலுள்ள அராஜகத்தையும் அதன் இலக்கிய அரசியலையும்தான். இலக்கிய அரசியலின் எட்டிடும் இலக்காக, பாரதிக்கும் புதுமைப்பித்தனுக்கும் பிறகுள்ள தமிழ்க்களமே சுந்தரராமசாமிக்கு உடுக்கடிப்பதில்தான் உயிர்த்துவம் பெறுகிறது என்பதாக உருவேற்றிக்கொண்டிருப்பதைத்தான்.

## ஆய்வும் அகந்தையும்

பு.பி. வாசகர் பேரவை கூட்டத்தில் அரசு அவர்கள் உங்கள் செம்பதிப்புச் செம்மல் ஆ. இரா. வெங்கடாசலபதியைக் 'குள்ளன்' என்றும் 'திருடன்' என்றும் வசைபாடியதாகக் குற்றம் சுமத்தியுள்ளீர்கள். உண்மையாக இருக்கலாம். அவை வசைகள் என்பதை விடக் காரணப் பெயர்களாகக்கூட இருக்கலாம். இப்படியொரு சந்தேகம் வரக் காரணம் வெங்கடாசலபதியைப் பற்றிச் சொல்ல எனக்கும் ஒரு விஷயமிருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன் உங்கள் பதிப்புச் செம்மல் பாரிசுக்கு சென்றிருந்தபோது என் வாசகர் ஒருவர் "கவிதாசரணைப் பற்றி உங்கள் கருத்தென்ன?" என்று கேட்டிருக்கிறார். இவர் உடனே "அது ஒரு வெள்ளாளப் பத்திரிகை. முழுக்க முழுக்க வெள்ளாள மனோபாவத்தைத் தூக்கிப்பிடிப்பது," என்று சொல்லி, அதை யொத்த கடுமையான விமர்சனங்களையும் வெளியிட்டாராம். அன்றே சேனன் என்னைத் தொடர்பு கொண்டு சொன்னார். மரியாதை காரணமாக வேறு விமர்சனங்களை என்னிடம் விவரிப்பதைத் தவிர்த்துவிட்டார். சேனனிடம் அப்போது சொன்னேன்: "இந்தப் பையன் (வயது காரணமாக இப்போதும் அப்படியே குறிக்கிறேன்) கவிதாசரணைப் பார்த்ததுண்டா, படித்ததுண்டா என்று தெரியவில்லை. அ. மார்க்ஸ் கவிதாசரணுக்கு சூட்டிய மகுடத்தை அவர் குழுவில் தென்படுகிற இவரும் திருடிக்கொண்டிருக்கிறார். நான் ஒரு சைவ உணவுப் பழக்கமுள்ளவன் என்று சொன்னதைமக்காக எனக்குச் சூட்டிய மகுடம்."

அத்தோடு அந்தப் பேச்சு ஏறக்கட்டப்பட்டது. அரசு சொன்ன 'திருடன்' அந்த வகையைச் சேர்ந்ததாக இருக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



வெங்கடாசலபதி கவிதாசரணை வெள்ளாளப் பத்திரிகை என்றார். ஆனால் இங்கிருக்கும் வெள்ளாளன்களும் தமிழ்த்தேசியவாதிகளும் அதை தலித் பத்திரிகை என்று அடித்துச் சொல்கிறார்கள். ஆய்வறிஞர் வெங்கடாசலபதி– அதுவும் வ.உ.சி., புதுமைப்பித்தன் ஆகிய இரண்டு மாபெரும் வெள்ளாளன்களை ஆய்ந்த அறிஞர் அவ்வப்போது அடுத்தவர் 'ஆய்வையும்' சேர்த்துக்கொள்வாராயிருக்கும்.

புதுமைப்பித்தன் பனுவல்களுக்காக நீங்கள் அவர் ஆய்வுப் பணியைப் பயன்படுத்திக்கொள்கிறீர்கள். பு.பி. நூல்கள் இதுவரை விற்ற வகையில் குறைந்தபட்சம் 3½ லட்சமாவது இலாபம் தேற்றியிருந்தால்தான் தினகரிக்கு அறுபதாயிரம் வரை காப்புரிமைத் தொகை வழங்கியிருப்பீர்கள். அந்த விற்பனை இன்னும் தொடர்கிறது. 1500 படிகள் போட்டால் உடனே விற்றுத் தீர்ந்துவிடுவதாக நீங்களே சொல்கிறீர்கள். இத்தனைக்கும் இது வெகுமக்களைத் தவிர்த்த விற்பனை மட்டுமே.

## செம்பதிப்பும் கட்டுடைப்பும்

பு.பி.யைப் படிக்க சாதாரண பதிப்பே போதுமானது. ஆனால் அவரைக் கட்டுடைக்க செம்பதிப்பு தேவை என்பது உங்களுடைய கருத்து. கட்டுடைப்போ உங்களுக்குப் பிடிக்காத 'புல்டோசர்' வேலை. ஆனால் பு.பி.யால் நீங்கள் பெற்றுவரும் நிகரற்ற இலாபத்திற்கு நன்றிக் கடனாக அவரைக் கட்டுடைத்து நொறுக்க வெங்கடாசலபதியை வேலைக்கமர்த்தியிருக்கிறீர்கள். இது பு.பி.க்குச் செய்யும் துரோகமா? இலாபமா? தெரியவில்லை. இதுபோன்றதொரு கட்டுடைப்பைத்தான் அ.மார்க்ஸ் கவிதாசரணில் செய்தார். –பிரதியின் கட்டுடைப்பு. ரவிக்குமார் அவரை விட்டுப் பிரிந்து சென்று குறை சொன்ன விஷயம். அந்தக் கட்டுடைப்புக்காகத்தான் அ.மார்க்ஸ் பு.பி.யை வசை பாடினார் என்கிறீர்கள். நீங்கள் என்ன பாடப்போவதாக உத்தேசம்? ஏற்கனவே 'அன்னை இட்ட தீ' செம்பதிப்பு வெளியீட்டு விழாவில் ''பு.பி முஸ்லிம் சமுதாயத்தை வெறுத்தார் என்பதற்கு நிறைய சான்றுகள் தெரிகின்றன,'' என்றார் இன்குலாப். அவர் முஸ்லிம்களை எவ்வளவு அதிகம் வெறுத்தார் என்பதற்கு இன்னொரு சான்றுகூட உண்டு. அவர் தந்தையிடமிருந்து பெற்ற தன் பங்கு நிலத்தை ஒரு முஸ்லிமுக்கு விற்று தனது தந்தை மேல் இருந்த கோபத்தைத் தணித்துக்கொண்டார் என்று அந்த ஊர் வெள்ளாளர்களே பு.பி.க்குப் புகழாரம் சூட்டுவார்கள். ஆர் எஸ் எஸ் தோன்றாத அந்தக் காலத்து அதிதீவிர ஆர் எஸ் எஸ் என்றெல்லாம் ஏற்கனவே முத்திரை குத்தியாயிற்று.

படிப்பகம்

www.padippakam.com



அவரை ஒரு ஆகச் சாதாரண ஆள் என்று கட்டுடைப்பதற்குக் 'கண்மணி கமலாவுக்கு' மிகவும் வாய்ப்பான நூல். அவரை முற்றாகக் கட்டுடைத்துத் தீர்த்துவிடத்தான் அந்த சர்ச்சையை உருவாக்கியிருக்கிறீர்கள் என்று நம்பலாமா?

பு. பி. வாசகர் பேரவைக்காரர்களுக்குள்ள ஒரே பலம் அவர் பெயரையே யாரும் பயன்படுத்தக்கூடாது என்று தினகரி மூலம் நீங்கள் விட்ட மிரட்டல்தான் என்று தோன்றுகிறது. பார்க்கலாம். ஒருவேளை பு.பி.யை முன்னெடுத்து குறுக்கு நெடுக்காக எழும் சர்ச்சைகளை இப்படி அடைத்தால்தான் அவரை முற்றாகக் கட்டுடைத்துக் கொட்டை பரப்பிட ஏதுவாயிருக்கும் என்பது உங்கள் பதிப்பகத்தின் பிரதி சார்ந்த தொழில் நுட்பத் திட்டமாயிருக்கக் கூடும்.

தொழில் விஷயத்தில் நீங்கள் விவரமானவராகவும் நேர்மையானவராகவும் இருப்பதைப் பாராட்டியே தீரவேண்டும். ''மதிப்பிற்குரிய ஒரு எழுத்தாளனின் மனைவியின் நம்பிக்கையை, சட்ட நுணுக்கங்கள் தெரியாத வெகுளித்தனத்தை சுரண்டுவது நிச்சயம் அறமாகாது'' என்ற உங்கள் கூற்று நூற்றுக்கு நூறு உண்மை.

இந்த சர்ச்சையில் எனக்குச் சில புள்ளிகள் விளங்கவில்லை. காப்புரிமை கொண்டு பு. பி. யின் எழுத்துகளைக் கொள்முதல் செய்யலாம், சரி. அவர் பெயரையே முடக்கலாமா? முடியுமா? பு.பி.யை உங்கள் சுய லாபத்திற்கு மட்டுமே பயன்படுத்திக்கொள்ளப் போவதாகச் சொல்லித்தான் அவர் நண்பர் தொ.மு.சி யிடமிருந்து அவர் பற்றிய எழுத்துகள், கருத்துகள், உதவிகள் யாவும் திரட்டினீர்களா? இளையபாரதி கடன் பெற ஏதுவாக கமலா எழுதிக் கொடுத்த கடிதத்தை உண்மையில் எழுதியவர் அவர் மகள் தினகரிதான் என்று தெரிகிறது. அதையே தனது வெளியீட்டுரிமையாக இளையபாரதி சொல்லிக்கொண்டிருப்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கிறது. நீங்கள் தினகரியிடமிருந்து உரிமை பெற்றதும் தினகரியோ, நீங்களோ முதற்பதிப்பைக் கொண்டுவந்தவர் என்ற முறையில் இளையபாரதியைத் தொடர்பு கொண்டு சட்டப்பூர்வ உரிமை காலச்சுவடு நிறுவனம் பெற்றாயிற்று என்று முறைப்படி தெரிவித்திருந்தால் இளையபாரதி கொண்டுவந்த இரண்டாம் பதிப்பைத் தவிர்ப்பதோ முடக்குவதோ எளிதாகியிருக்குமே. மேலும் முதல் பதிப்புக்கான காப்புரிமைத்தொகையை அவர் கொடுக்கவில்லை என்பதையும் அப்போதே சுட்டியிருக்கலாமே. இவை யாவும் இயல்பாக நிகழக்கூடிய இடைவெளிகள்தாம் எனினும் உங்கள் வியாபார மூளையின் அதீத முன்ஜாக்கிரதை உணர்வு இவற்றைத் தவிர்த்திருக்க உதவியிருக்கலாம் என்பதால் கேட்கத் தோன்றியது.

படிப்பகம்

www.padippakam.com



## எழுத்துப் பரவலும் கதவடைப்பும்

தமிழ் நாட்டில் ஏறக்குறைய எல்லா பதிப்பகத்தாரும் பொது நூலக வினியோகத்தையும் கணக்கில் கொண்டுதான் நூல்களைப் பதிப்பிக்கின்றனர். உங்களைப் போன்ற இரண்டொருவர்தான் விதிவிலக்கு. பொதுநூலகத்துக்காகவே நூல் கொணரும் முயற்சிகளின் இருண்ட பக்கம் மிகவும் அசிங்கமானதுதான். ஏமாற்றுகளும் போலித்தனங்களும் மலிந்த ராஜ்யம் அது. ஆயினும் வெகுமக்களைச் சார்ந்த வசதியற்ற வாசகனுக்குப் பொதுநூலகமே கதி. செம்பதிப்பென்றும், உயர்வகைத் தாள் என்றும், அதி நவீனத் தொழில்நுட்பம் என்றும் பேர் பண்ணிக்கொண்டு, வாங்குப் சக்தி படைத்த மேட்டிமை வட்டத்துக்குள்ளேயே இலக்கியப் பரிமாற்றம் நடத்திப் பணம் பண்ணுகிற உங்கள் கையில் உலகத்தரமிக்க இலக்கிய மேதை புதுமைப்பித்தன் சிக்கிக்கொண்டதால், பாவம் வெகுமக்களுக்கு இனி அவன் அந்நியமாகிவிடுவான். செம்பதிப்பை சிலாகிக்கும் ராஜ்கௌதமன் இந்த அம்சத்தை ஏன் சொல்லாமல் விட்டார் என்று தெரியவில்லை. இலக்கியம் இலக்கியம் என்று எந்த நேரமும் பிலாக்கணம் வைக்கும் காலச்சுவடு சாதாரண தாளில், சாதாரண இலாபத்தில், சாதாரண விலையில், சாதாரண பதிப்பில் குறைந்தபட்சம் புதுமைப்பித்தன் நூல்களையாவது வெளிக்கொணர்ந்து தனது மனித மாண்பையும் இலக்கிய நேர்மையையும் பறை சாற்றட்டும் என்று அவரைப் போன்றவர்கள் ஏன் யோசனை வழங்கக்கூடாது. இப்போதைக்கு, புதுமைப்பித்தன், பாவம் அடிநிலை வாசகர்களால் அண்டமுடியாதவனாகிவிடுகிறான். "சற்பு கற்பு என்று கதைக்கிறீர்களே, இதுதானய்யா பொன்னகரம்" என்று அவர்களிடம் வசனம் பேசமாட்டான். ஒரு ரோஜாவை அதன் புல்லிதழ்களோடு மட்டுமின்றி சில முள்ளோடும் இலைகளோடும் பார்க்கும்போது அதன் அழகு கூடுதல் பச்சை கட்டிக்கொள்வதுபோலத்தான் அந்த வசனங்கள்–இலக்கியத்துள் பொதிந்துவைக்கப்பட்ட உயிர்த்துவ நர்த்தனங்கள் என்று எந்த வெகுமகனும் மூச்சைப் பிடித்துக்கொண்டு, நொட்டை சொல்லும் இலக்கியத் தூய்மைவாதிகளிடம் 'கத்த' மாட்டான். இப்படிக் கடத்திச் சென்று, கட்டுடைத்து, அவன் பெயரோடு சேர்த்துக் கடாசிவிட முடிந்தால், பிறகு நீர்க்காவி ஏறிய சுத்தசுயம்புவான ஆற்று நீர்ச் சலவைத்துணியால் முக்காடிட்ட எழுத்துகள்தான் நீரோட்டமுள்ள வைர இலக்கியங்கள் என்று சொல்லி, வெகு மக்களுக்குச் சம்பந்தமே இல்லாத ஓர் அந்நிய எழுத்தாதிக்கம் எப்போதையும்விடக் கூடுதலான அதிகார மமதையோடு கொட்டமடித்துக்கொண்டிருக்கலாம்தான்.

ஆனால் இனியும் முடியுமா என்பதையும் யோசிக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



இத்தனை விமர்சனங்களுக்கப்பாலும் ஒரு விஷயம் தூக்கலாய் என்னைத் தொடுகிறது. நீங்கள் எது செய்தாலும் அது உங்கள் தந்தையாரின் பெயரையும் புகழையும் நிலைப்படுத்துவதற்கான துணையம்சம்தான் என்பதாக உங்கள் உள்ளூற்றம் இருக்கும் போல் தெரிகிறது ஒரு பிள்ளையின் இந்த அரிய நேர்த்திக்காக என் வாழ்த்துகள்.

அன்புடன்,
கவிதாசரண்

---

## சாகித்ய அகாதமியும் சர்ச்சையும்

தி க சிக்கு சாகித்ய அகாதமி விருது வழங்கியதை ஒரு அடாத செயலாக சர்ச்சை கிளப்பியிருக்கிறார்கள் இலக்கியக் குத்தகைக் காரர்களான காலச்சுவடு நிறுவனத்தாரும் ஜெயமோகன் குழுவின ரும். முற்போக்கோ பிற்போக்கோ, தமிழ்– தமிழர் சம்பந்தமும் சாய்மானமும் உள்ளதும் அவர்களைக் கேள்விகளோடு அணுகுவ துமான எதன்மேலும் அவர்களுக்குள்ள குரோத நிராகரிப்பின்மீது நியாயத் திரை போட்டு மூடிக்கொண்டு, குரல் உயர்த்தி விவாதிக்க மீண்டும் ஒரு சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டதாகவே இதைக் கருத வேண்டியுள்ளது. விருதுப் பிரச்சினை வெறும் பணப்பிரச்சினை யாகவே 'சீ'ப்புடுவது மகா அவலமானது.

தமிழ்நாட்டில் எப்போதும் இரண்டாகத்தான் அணிகள் பிரி கின்றன. ஒரு அணியின் எந்தக் குறைக்காக மற்றொரு அணி குதிக்கிறதோ, அந்தக் குறையை அதே அணியும் கூச்சநாச்சமின்றி செய்வதாகத்தான் நடைமுறையில் மலினப்படுகின்றன.

சாகித்ய அகாதமி விருது சாகித்யங்களுக்காக வழங்கப்படுகிற ஒன்று. விருதுக்குரிய தகுதி அது ஒன்றுதான். பிற தகுதிகள் கூடுதல் அம்சங்கள். தி க சிக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டதும் "என் சாகித்யம் இதற்கானதல்ல. ஆகவே நிராகரிக்கிறேன்," என்று அறிவித்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும் என நினைத் ததுண்டு. நடைமுறைக்கொவ்வாத உடோப்பியக் கனவுதான் என் றாலும், பரிசுகளை ஏற்பதிலிருக்கும் களியாட்டங்களைவிட நிரா கரிப்பதிலுள்ள கம்பீரம் இங்கு கொண்டாடப்படவே இல்லை. இப் போதைப்போல தி க சி தம் வாழ்நாளில் வேறெப்போதும் இத்தனை

படிப்பகம்

www.padippakam.com



பேச்சுக்காளாகியிருக்க மாட்டார். இந்த விருதுப் பணம் அவரால் இதுவரை செலவிடப்பட்ட அஞ்சலட்டை விலைகளுக்கு ஈடாகாது. இதனை இன்னொரு மூத்த சகோதரர் – 'சிறியன சிந்தியாதான்'– வல்லிக்கண்ணன் அவர்களும் அறிவார். இவ்விரு மூத்தவர்களும் நம்மிடையே வாழ்ந்துகொண்டிருப்பதே நமக்குக் கிடைத்த பெரும் பேறு. பொதுக்கல்வி யுகத்தில் முகிழ்த்த இலக்கிய சகாப்தங்களின் சாட்சியங்கள் அவர்கள். தவழ்வதும் எழுவதும் நிற்பதும் நடப்பதும் குழந்தையின் வளர்ச்சி அம்சங்கள்தாம் எனினும், ஒரு தாய் தன் இரு கைகளையும் நீட்டி அதை எப்போதும் உசுப்பிக்கொண்டிருக்கிறாளே– அர்த்தமில்லாமலா? புதியவர்களைக் கண்டறிதல், தூண்டுதல், ஊக்குவித்தல், பாராட்டுதல் என்று– உலகத்தில் இவர்களைப்போலச் செயல்படுகிறவர்கள் யாரும் இருந்திருக்க முடியாது. எளிது போலத் தோன்றினாலும் எல்லாராலும் செய்துவிடல் முடியாது. அது ஒரு பக்குவம். மனச்சிறைகளை உடைத்துக்கொண்டு வெளிவரத் தெரிந்த பக்குவம். தன்னகந்தை ஓட்டுக்குள் தலையை இழுத்துக்கொள்ளும் ஆஷாடபூதி ஆமைகளுக்கு அது தெரியாது. முணுமுணுக்கவும் நமநமக்கவுமே தெரிந்த ஆமைகள் அவர்கள்.

ஜெயலலிதா முதலமைச்சராகிவிட்டார். திகசிக்கு வாழ்த்து சொல்லியிருக்கலாம். காலந் தாழ்ந்த ஞானம். அசோகமித்திரன், இந்திரா பார்த்தசாரதிக்குள்ள பக்குவம் இத்தனை வயதுக்கப்புறமும் ஏற்படவில்லை. இருப்பினும் நான் தாமிரபரணி தண்ணீர் குடிக்காதவன் என்பதால் அன்பான சகோதரர் என்னைப் பொறுத்துக்கொள்வார் என்று நம்புகிறேன்.

என்னைக் கேள்வி கேட்கிறவனைப் பார்த்து "உனக்கு அறிவிருக்காடா?" என்று கேட்கிற கோபம் எனக்கும் உண்டுதான். எனக்கு நிச்சயம் அறிவுண்டு என்பதால் அது சமநிலையில் இருக்கிறதா என்று சரிபார்த்துக் கொள்கிற அவஸ்தைக்கு ஆளாகவேண்டியுள்ளது. ஒவ்வொரு உறவும் கோபத்தாலும் அதிருப்தியாலும் தான் காலக்கணக்குக்கு ஒப்படைக்கப்படுகிறது. நிலைத்த நட்புகளில் யாருக்கும் நம்பிக்கையில்லை.

இந்தச் சர்ச்சையில் எனக்கு வேறொரு கேள்வி உள்ளது. சாகித்ய அகாதமி விருது பற்றி இவ்வளவு சர்ச்சை எழுப்புகிறவர்கள் தமிழக அரசு வழங்கிக்கொண்டுவரும் விருதுகள், பரிசுகள் பற்றி வாயே திறப்பதில்லையே ஏன்? தமிழகம், தமிழக அரசு, தமிழக அரசியல், தமிழ்க்கலை, இலக்கியச் செயல்பாடுகள், பரிசுகள், விருதுகள் ஆகியவற்றிலிருந்து முற்றிலுமாகத் தங்களைத் துண்டித்துக்கொண்டு அந்நியப்படுகிறார்கள். ஆனால் டில்லி சம்பந்தப்பட்ட ஒவ்வொன்றிலும் தங்களுக்குப் பங்கிருப்பதாகவும், அதன் அதிகார

படிப்பகம்

www.padippakam.com



மையத்தைத் தங்களுடையதாகவும் ஸ்வீகரித்துக்கொள்கிறார்கள். தமிழக நடவடிக்கைகளில் தங்களுடைய பங்களிப்பு இன்மைக்காக அவர்கள் ஒன்றும் வருந்தி மாய்வதில்லை. ஏனெனில் அவர்கள் அடிப்படையில் ஒற்றைத் தேசியம் பேசும் வேற்றுமையாளர்கள். தமிழகத்தோடு அவர்களுக்குள்ள உறவு வெறும் குடிக்கூலி ஒப்பந்தம் போலத்தான். ஆகவே தமிழ் ஆட்சி மொழி, பயிற்று மொழி, ஈழப்பிரச்சினை என்பனவெல்லாம் அவர்களுக்குப் பேசப்பிடிக்காத அல்லது இல்லாத பிரச்சினை. இந்திராபார்த்தசாரதி சொன்னாரே அண்மையில் – தன்னைத் தமிழ் எழுத்தாளன் என்று சொல்லிக்கொள்வதை வெறுப்பதாக. தமிழில் எழுதும் இந்திய எழுத்தாளன் என்பதுதான் அவருக்குப் பெருமையாம். அவர்களைப் பொறுத்தவரை அதுதான் உண்மை.

எனில், இவர்கள் இலக்கியம் எதைச் சொல்லும்?

இந்த ஈயப் பூச்சுக்காரர்கள் என்னவெல்லாம் ஆட்டம் போடுகிறார்கள், பம்மாத்து பண்ணுகிறார்கள் என்பதை நாம் விளங்கிக் கொள்ளவில்லை என்றால் எதிர்க்குரல் எழுப்பிகிறவர்கள் யாவரையும் வெறும் அடியாள்களாகவே அடையாளப்படுத்திவிடுவார்கள்.

★

# தொகுப்பும் திறப்பும்

சாகித்ய அகாதமிக்கு சா. கந்தசாமி தொகுத்தளித்த சிறுகதைத் தொகுப்பை பற்றி சு. சமுத்திரம் எழுப்பிய சர்ச்சை ஒரு வகையில் அகாதமியும் அதன் செயல்பாடுகளும் பற்றிய புதிய அறிதலை வழங்கியது என்று சொல்லலாம். தன் கதை சேர்க்கப்படவில்லை என்பதால்தான் சமுத்திரம் போர்க்கொடி உயர்த்தியதாகக் கந்தசாமி சொல்கிறார். அப்படியே இருந்தாலும் அவர் தன் அசுரத்தனமான எதிர்ப்பின் மூலம் பல புதிய கதவுகளைத் திறந்திருக்கிறார்.

சாகித்ய அகாதமி ஆண்டுக்கொருமுறை இந்திய மொழிகள் ஒவ்வொன்றிலும் ஒரு நூலுக்கு விருது வழங்குகிறது. அண்மையில் மொழிபெயர்ப்புக்கும் வழங்குகிறது என்பதுதான் பலரும் அறிந்த செய்தி. அது புத்தகங்களைத் தொகுத்து வெளியிடுகிறது; புதிய புத்தகங்களை உருவாக்குகிறது; குறும்படங்கள் வெளியிடுகிறது; இலக்கிய குழுக்களைப் பரிவர்த்தனை செய்கிறது; இலக்கியப் பரிமாற்றத்

படிப்பகம்

www.padippakam.com



துக்கான களப்பணிகளை ஒருங்கிணைக்கிறது; புதிய திட்டங்கள் அளித்தால் அவற்றைப் பரிசீலித்து அவர்களைக் கொண்டே செயல் படுத்துகிறது- போன்ற மேலும் பல விஷயங்கள் இந்தச் சர்ச்சை யால் வெளிப்பட்டன. அகாதமியின் செயல்பாட்டில் பங்கு பற்றுகிற வர்கள் அதுபற்றிப் பிற படைப்பாளிகள் – இலக்கியக் களப்பணியா ளர்களுக்கு மறந்தும்கூட மூச்சு காட்டுவதில்லை. அசோகமித்திர னாயிருந்தாலும் கி.ராஜநாராயணனாயிருந்தாலும் கமுக்கமாய் இருப்பதில் எல்லாரும் ஒன்றுபோல்தான் இருந்துள்ளார்கள். இத் தனை பணிகளைச் செய்யும் அமைப்பு ஆண்டுக்கொருமுறை முக் கிய செய்தித்தாள்களில் தான் திட்டமிடும் பணி விவரங்களை வெளி யிட்டு வெளிப்படையாக நடந்துகொள்ளலாம். இன்றுவரை அப்படி யில்லை. இனி அதை வலியுறுத்தியாக வேண்டும்.

செய்யும் பணிகளுக்கு அகாதமி ஒன்றும் வாரி வழங்கிவிடுவ தில்லை என்றாலும், குறிப்பிட்டவர்கள் மட்டுமே பங்கு பற்றுகிற போது அவர்கள் மட்டுமே அந்த மொழியின் இலக்கியப் பெருந் தகைகள் என்று பல்வேறு பதிவுகள் மூலம் வரலாறு படைக்கலாம் என்பதாயிருக்கும். மேலும் இதிலுள்ள அரசியலும் கண்டுகொள் ளப்பட வேண்டும். சாகித்ய அகாதமியின் விருதுகள் பற்றிய சர்ச் சைக்கும் அதன் தேர்வுக்குழு உறுப்பினர்களே பொறுப்பாளிகள். உலக மகா நோபல் பரிசே என்றாலும் அதுவும் வெறும் அரசியல் அங்கீகரிப்புதான். பொறுப்பிலுள்ளவர்கள் நேர்மையற்றிருப்பதற் கான நுட்பங்களால் ஆளப்படும் வரை வாழ்க்கையானது வெறும் பளிஞ்சடுகுடுதான்.

★

## வட்டமும் உடைப்பும்

கந்தசாமி தொகுத்த கதைகளின் தரம் பற்றி ஜெயந்தன் தன் 'கோடு'வில் விமர்சித்திருந்தார்- அதாவது, தெரிவு செய்த கதைகள் அப்படைப்பாளிகளின் ஆகச்சிறந்த கதைகள் அல்ல என்பதாக. அவர் கூற்றை சர்ச்சைக்கு அப்பாற்பட்ட நூல் விமர்சனமாகவே பார்ப்பது நலமாகும். மேலும், எந்தத் தொகுப்பிலும் தொகுப்பா ளரின் உள் –வெளி ஈர்ப்புகளுக்கேற்பவே படைப்புகள் அமையும். கூடவே, சில பெயர்களைத் தவிர்க்க முடியாமையும், மற்றும் சில பெயர்களைத் தவிர்த்தே ஆகவேண்டியதுமாக அக – புற நிர்பந்தங்

படிப்பகம்

www.padippakam.com



களும் வேலை செய்யக் கூடும். சமுத்திரம் இந்த வகைப்பாட்டுக் கெதிராகத்தான் போர்க்கொடி உயர்த்தினார் எனப் பொதுமைப் படுத்துவது அர்த்தமுள்ளதாயிருக்கும். தொகுப்பிலுள்ள பல கதைகளுக்கான ஜெயந்தனின் மதிப்பீடும் என்னுடையதுங்கூட ஒத்துப் போகவில்லை. அது அப்படித்தான் ஆகும்.

அந்தத் தொகுப்பில் படைப்பாளியின் சிறந்த கதை என்னும் வகையில் அவருக்குப் பிடித்த கதையே இல்லையா என்று கேட்ட போது அவர் சொன்ன பதில் கூடுதல் எண்ணம் வளர்த்தது.

தொகுப்பில் ஜி நாகராஜன் கதை அவரைப் பாதித்திருக்கிறது. வாழ்ந்த காலத்தில் தன் மனைவியின் மனத்தை மதிக்கவும் மதிப் பிடவும் ஒருநாளும் முயலாத நாகராஜன் தன் கதையில் அந்தக் கவலையை இறக்கி வைத்திருந்தார். கதையைப் படித்ததும் அதே மாதிரியான புதிய விழிப்பும் அவஸ்தையும் ஜெயந்தனையும் பற்றி யிருக்கிறது. ''நமக்கும் நம் குழந்தைகளுக்கும் குடும்பத்திற்கும் தனக்கொரு அடையாளம் தேடாமலே உழைத்து, இன்னமும் பிறர் சுகதுக்கங்களுக்காகவே வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த மனுசிக்கு நாம் என்னதான் செய்திருக்கிறோம்? குறைந்தது அந்தச் சேவை யினைப் பளிச்செனத் தெரியும்படியாகவாவது கௌரவித்திருக்கி றோமா?'' என்று தன் துணைவியாரைப்பற்றி யோசித்திருக்கிறார். உடனே தன் சேமிப்பிலிருந்து முப்பதாயிரம் எடுத்து வந்து அந்த அம்மாள் கையில் கொடுத்து, ''இந்தா, இதை வச்சுக்க. உனக்குப் பிடிச்சதை வாங்கிக்க,'' என்றிருக்கிறார். அந்த அம்மாள் அதிர்ச் சியிலும் மகிழ்ச்சியிலும் வியர்த்துப்போய், ''என்னாத்துக்கு? எதுக் கிப்ப?'' என்று திக்கித் திணறியிருக்கிறார்.

''இல்ல வச்சுக்க. எதாவது நகை வாங்கிக்க.''

''சரி. ஆனா இவ்வளவு வேணாம். சின்னவன் கல்யாணம் இருக்குல்ல. அதுக்கப்புறம் பார்த்துக்கலாம்.''

இதைக் கேட்க சுகமாயிருந்தது. மரபான கணவன்மார்களி லும் இரண்டு வகையினர் – நல்லவர், கெட்டவர் என்று ஜெயந் தன் மிக நல்ல கணவராக இருக்க முயன்றிருக்கிறார். மரபுகளில் ஊறித்தோய்ந்த மனைவிமார்களுக்கு சந்தோஷம் தரும்படியாகக் கணவன்மார்களால் இவ்வளவுதான் செய்ய முடியும் என்னும் புரி தல் உள்ளவர். ஒரு மாற்றுச் சிந்தனையாக இதிலுள்ள வெட்கப் படுவதற்குரிய அம்சத்தையும் விளங்கிக்கொண்டிருப்பவர்.

வட்டம் போட்டுக் கண்காணிக்க ஒரு புருஷன் இருந்துவிட்டால் நம் பெண்களுக்கு வேண்டியதெல்லாம் நகைகளும் புடவைகளும்

படிப்பகம்

www.padippakam.com



தான், இல்லையா? அப்படி இருந்தால்தான் நமக்குப் பாதுகாப்பு. வட்டத்துக்கு வெளியே அவர்களைத் திக்கற்றவர்களாகப் பார்ப்பதிலேயே நமக்குத் திருப்தி. சும்மாவா இராமாயணம் மகாகாவியமாகிவிடுகிறது!

சரி, ஆண்கள்?

'எதனால் திருப்தி அடைவீர்கள்?' எனக்கேட்டால் ஆளாளுக்கொன்றாய்ச் சொல்லுவார்கள் உலகத்துத் துய்ப்பனவெல்லாம். கல்விப் பயன்பொருளைக்கொண்டு திருப்தியுறுவதாகச் சொல்பவர்கள் கணிசமாகத் தேறுவார்களா, தெரியவில்லை. கற்றல் ஒன்றுதான் மனிதனை அர்த்தப்படுத்தும் விஷயம். எனினும் மனிதனாவது மனிதனின் மறதியம்சம் அல்லது கடைசிப் புகலிடம்தானே?

நீங்கள் கொஞ்சம் காதருகே குனிந்து, கண் சிமிட்டி, குரலைத் தழைத்து, குறும்பு கொப்பளிக்கக் கேட்டுப் பாருங்கள். அத்தனை பயல்களும் 'ஃபிகர்' என்போம்.

ஆக, பெண் எப்போதும் தின்னப்படும் பொருளாய் இருப்பதில் அப்படியொரு சந்தோஷம். வெட்கமற்ற சந்தோஷப். நாம் அவளுக்கு விடுதலை அளிக்கிறோம் நம் சந்தோஷத்தைப் பறைசாற்றிக் கொள்ளும்படியாய். அவள் அடித்தால்கூட அவளுக்கே உரிய ஆயுதமான துடைப்பத்தால் அடிப்பவளாகத்தான் கனவு காண்கிறோம். செருப்பால் அடிப்பதாக அல்ல. செருப்பு அவள் காலுக்கு இன்னமும் 'அணி'கலன்தான்.

பெண்ணுரிமை ஏன் தாமதிக்கிறது என்றால் அவள் இன்னும் தன்னையொரு தலித்தாக உணராமையும் ஒரு காரணம். தலித் விடுதலை ஏன் தள்ளிப்போகிறது என்றால் அவன் தன் வண்ணானுக்கு ஆண்டையாய் இருப்பதைத் தவிர்க்க முடியாமைதான். ●

---

அடுத்த புத்தகம்
அக்டோபர், 2001இல்
வெளிவரும்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்